24

யாழ்., வன்னி ரூ.20/=

காலநிலை
மேகமூட்டம்/ மழை

# உதயன்

சுடர்: 29 கதிர்: 333 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 8, சனி 25.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

துரையப்பா விளையாட்டரங்கில்
பி.ப 3.00 மணிமுதல்
✔HONDAவின் வியக்கவைக்கும் விரதீர சாகசங்கள்
✔இராப்போசனத்துடன் மாபெரும் இசை நிகழ்ச்சி
✔HONDAமோட்டார் சைக்கிளை அதிஷ்டம் மூலம் பெற்றுகொள்ளும் அரிய வாய்ப்பு
வாருங்கள் அனுமதி இலவசம்

வலி. தெற்கு பிரதேச சபை
25 OCT 2014




# 2015 தேர்தல் பட்ஜெட்

## வாரி இறைக்கப்பட்டன சலுகைகள்
## அத்தியாவசிய பொருள்களின் விலைகளில் மாற்றமில்லை

- அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ.15,000
- தனியார் ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளம் ரூ.10,000
- ஊழியர் சேமலாப நிதிக்கு தொழில் தருநரின் பங்களிப்பு 14 சதவீதமாக அதிகரிப்பு
- குழந்தைகளுக்கான பால்மா இறக்குமதி மீதான வரி நீக்கம்
- அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூ.2,200 வால் அதிகரிப்பு
- மின்சாரக் கட்டணம் 25 சதவீதத்தால் குறைப்பு
- பசும்பால் லீற்றரின் உத்தரவாத விலை ரூ. 60 ஆக அதிகரிப்பு
- ஒரு கிலோ நெல்லின் உத்தரவாத விலை 34 – 40 ஆக உயர்வு
- வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு விசேட ஓய்வூதியத்திட்டம்
- முதியோருக்கான கொடுப்பனவு ரூ. 1,000 த்தால் அதிகரிப்பு
- இராணுவம், பொலிஸ் சேவையில் பிள்ளைகளுள்ள பெற்றோருக்கு மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 1,000
- ஓட்டோ சாரதிகளுக்கு ஓய்வூதியம், காப்புறுதித் திட்டம்
- மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் ரூ.3, 000
- பல்கலைக்கழகம் செல்லமுடியாத 50,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள்
- சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்தம் ரூ.3,000
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது. (வடக்கு மாகாணசபையின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றது)
- 50 ஆயிரம் ஆசிரிய உதவியாளர்களுக்கு 9 ஆயிரத்து 500 ரூபா மாதாந்தப்படி வழங்கப்படவுள்ளது. (வடக்கு மாகாணசபையின் கீழ் பணியாற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு ஏற்கனவே மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது)

கொழும்பு, ஒக்ரோபர் 25
எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் சலுகைகள் வாரி இறைக்கப்பட்டுள்ளன.

22 ஆம் பக்கம் பார்க்க




## மஹிந்தவின் ரி-20



*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் எதிர்பார்ப்புக்கள்.*

- *2020 இல் இலங்கையர் ஒருவரின் தனிநபர் வருமானம் 7 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்.*
- *2020 இல் தகவல் தொழில்நுட்பம் 90 சதவீதத்தினருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.*
- *2020 இல் இலங்கையரின் ஆயுள் 80 வயதாக இருக்கும் வகையில் திட்ட முன்னெடுப்பு.*
- *2020 இல் பல்கலைக் கழகத்துக்கு வருடாந்தம் ஒரு லட்சம் மாணவர் இணைப்பு.*
- *2020 இல் உயர் தொழில்நுட்பம் நிறைந்த நாடாக இலங்கையை மாற்றுவோம். தகவல் தொழில்நுட்ப துறையில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு.*
- *2020 இல் ஏற்றுமதி வருமானத்தை 20 பில்லியன் டொலர்களாக உயர்த்துதல்.*
- *2020 இல் சுற்றுலாத்துறையில் 5 பில்லியன் வருமானம் ஈட்டும் துறையாக மாற்றுதல்.*
- *2020 இல் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையும் சூழலை நாட்டில் ஏற்படுத்தி வெளிநாட்டுக் கடனை குறைக்கும் திட்டம்.*

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஐ.நாவின் நோக்கம்
பக்கம் 3

இந்திய மீனவருக்கு மீண்டும் விளக்கமறியல்
பக்கம் 3

இலங்கையில் இப்போது இரு விஸாக்கள்
பக்கம் 9

சந்திரனுக்கு அருகில் சென்று மீண்டும் திரும்பும் விண்கலம்
பக்கம் 15

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசோடு இணைய வேண்டுமாம்

### அழைக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஒக். 25
"நாட்டை அபிவிருத்தி செய்ய அரசுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்படவேண்டும். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இதுவே சிறந்த உபாயம். எனவே எம்முடன் இணைந்து செயற்படுமாறு அவர்களை நான் மீண்டும் கோருகிறேன்."- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து நேற்று ஆற்றிய ஆரம்ப உரையிலேயே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.
"எனது படைகள் ஓர் இனத்துக்கு எதிராக போர் நடத்தவில்லை. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே போர் நடத்தப்பட்டது. அதில் நாம் வெற்றிகொண்டுள்ளோம். இப்போது போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அமைதிச் சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க



இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இதுவே சிறந்த உபாயம். எனவே எம்முடன் இணைந்து செயற்படுமாறு அவர்களை நான் மீண்டும் கோருகிறேன்.

## காணாமற்போன பெண் நேற்றுச் சடலமாக மீட்பு



நெல்லியடி, ஒக்.25
கடந்த 20ஆம் திகதி காணாமற்போயிருந்த

22 ஆம் பக்கம் பார்க்க

## ரணில் - பிரபா ஒப்பந்த மூலப்பிரதி இல்லையாம்

யாழ்ப்பாணம், ஒக். 25
இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 2002 ஆம் ஆண்டு

22 ஆம் பக்கம் பார்க்க



## அடிக்கடி தேர்தல்கள் நடத்தப்பட்டால் நன்று

### மக்களுக்கு அதிக நிவாரணங்கள் கிடைக்கும் என்கிறார் எம்.ஏ.சுமந்திரன்

கொழும்பு, ஒக். 25
"ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் நன்றாக இருக்கும். மக்களுக்கு அதிகளவிலான நிவாரணங்கள் கிடைக்கும். தற்போது சமர்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் ஜனாதிபதித் தேர்தலை மாத்திரமே நோக்

22 ஆம் பக்கம் பார்க்க

இந்த வரவு - செலவுத் திட்டத்தை பார்க்கும் போது சிரிப்பாக இருக்கின்றது. வரவு - செலவுத் திட்டம் என்ற அர்த்தத்தில் இது இல்லை.



## உள்ளூராட்சி அதிகாரத்தில் கை வைத்துள்ளது அரசு

### சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் ஊடாக

கொழும்பு, ஒக். 25
சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தினூடாக கொழும்பு அரசு, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்திலும் கைவைத்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று சமர்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தில், 'நடைபாதை வியாபாரிகள், சுயதொழில் முயற்சியாளர் உள்ளூராட்சி மன்றங்களால் விதிக்கப்படும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார்கள்' என்று தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சி மன்றங்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

# நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில்...

## அரச ஊழியர்களுக்கு

- அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 2 ஆயிரத்து 200 ரூபாவினால் அதிகரிப்பு (இதுவரை 7 ஆயிரத்து 800 ரூபா வழங்கப்பட்டு வந்தது).
- அரச ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 15 ஆயிரம் ரூபா. (இதுவரை 15 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாகப் பெற்றவர்களுக்கு மாத்திரம்) .
- அக்ரஹாரா காப்புறுதிக் கொடுப்பனவு 5 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள் 2015 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு விசேட திட்டம்.
- அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகள் சம்பளத் தொகையோடு இணைக்கப்படும்.
- பல்கலைக் கழக கல்விசார் உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் மற்றும் நீதிச்சேவை ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.
- ரயில் ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.
- 2015 ஆம் ஆண்டில் தபால் சேவையை முழுமையாக நவீனமயப்படுத்த ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- தபால்காரர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்.
- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நிவாரண விலையில் மோட்டார் சைக்கிள்.
- இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் பிள்ளைகள் உள்ள பெற்றோருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து வழங்கப்படும்.

## தனியார் ஊழியர்களுக்கு

- ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்.
- தனியார் பஸ்களின் சாரதி, நடத்துனர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் திட்டம்.
- தனியார் துறை ஊழியர்களுக்கு வேலை வழங்குனரினால் செலுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதியை 12 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக அதிகரிப்பு.
- தனியார்துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 15 ஆயிரம் ரூபாவாக வழங்குமாறு யோசனை முன்வைப்பு.
- அதற்கு மேல் சம்பளம் பெறும் தனியார்துறை ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்தை 500 ரூபாவால் அதிகரிக்குமாறு யோசனை முன்வைப்பு.
- ஹோட்டல்கள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைகளுக்கான மின்சாரக் கட்டணம் அடுத்த மாதம் முதல் 25 சதவீதத்தினால் குறைப்பு.
- முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டம்.
- சுயதொழிலாளர் மற்றும் வீதியோர வியாபாரிகளுக்கு கடன் வசதி வழங்கப்படும். அத்துடன் அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களினால் விதிக்கப்படும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும்.

## வரி நீக்கம்

- குழந்தைகளுக்கான பால்மாவின் இறக்குமதி வரி நீக்கப்படும்.
- குடிதண்ணீர் கட்டணம், முதல் 25 அலகுகளுக்கு 10 சதவீதம் குறைப்பு.

## ஏனையவை

- கொழும்பில் பழைய தொடர்மாடிகள் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்திற்கு 750 மில்லியன் ரூபாவும், மலையகத்தில் 50 ஆயிரம் வீட்டுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
- வெளிநாடு சென்று வேலை செய்வோருக்கு விசேட ஓய்வூதியத் திட்டம்.

## பொருளாதாரம்

- 2014/2015 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கான விதை நெல் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.
- உரமானிய சலுகை தொடர்ந்தும் வழங்கப்படும். (350 ரூபாவுக்கே தொடர்ந்து வழங்கப்படும்)
- கைவிடப்பட்ட விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்ய 3 ஆண்டுகாலத் திட்டம்.
- யானைகளினால் விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்படும் இழப்பீடுகளுக்கு காப்புறுதி.
- சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு 50 கிலோ உரம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு வழங்கப்படும்.
- சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படும்.
- தேயிலை, இறப்பர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினை நவீனப்படுத்த 3 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கீடு.
- இறப்பருக்கான நிர்ணயிக்கப்பட்ட விலை ஒரு கிலோகிராமிற்கு 300 ரூபாவால் அதிகரிப்பு.
- இறப்பர் உற்பத்தி திணைக்களத்திற்கு அதன் அபிவிருத்திக்காக வழங்கப்படும் தொகை 3 ஆயிரத்து 500 மில்லியனால் அதிகரிப்பு.
- இறப்பர் இறக்குமதிக்கான செஸ் வரி 10 ரூபாவால் அதிகரிப்பு.
- புதிய சீனித் தொழிற்சாலை மற்றும் அதனுடன் இணைந்த உட்கட்டுமானங்கள் ஸ்தாபிக்கப்படும்.
- பசுப்பால் ஒரு லீற்றர் 60 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்.
- உள்நாட்டில் உற்பத்தியாகும் யோகட், பால்மா ஆகியவற்றின் விலை குறைக்கப்படும்.
- நன்னீர் மீன் உற்பத்திக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- மீனவர்களின் குடும்பநலன், உட்கட்டமைப்புக்காக 3 வருட விசேட திட்டம்

## உதவிகள்

- முதியோருக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. (தற்போது ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது).
- மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.
- அரச வங்கிகளில் முதியோர் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 12 சதவீத வட்டி.
- சமுர்த்திக் கொடுப்பனவு, 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு 3 ஆயிரம் ரூபாவும், 3 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பதற்கு 2 ஆயிரம் ரூபாவும், அதற்கு கீழ்பட்ட அங்கத்துவ எண்ணிக்கையைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.
- அடுத்த ஆண்டு 25 ஆயிரம் வாழ்வின் எழுச்சிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

## அபிவிருத்தி

- கிராமிய வீதி அபிவிருத்திக்கு 20.ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.
- சுகததாச, கெத்தாராம விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்வதற்கு 2 ஆயிரத்து 250 மில்லியன்.
- ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், மிஹின் லங்கா நிறுவனங்களின் அபிவிருத்திக்கு 150 மில்லியன் டொலர்கள்.
- புதிதாக 500 பஸ்கள் இறக்குமதி.
- போக்குவரத்து நெரிசலைக் குறைத்து விமான நிலையங்கள் அமைப்பதற்கு 10 பில்லியன் ஒதுக்கீடு.
- இலங்கை வங்கியின் வளர்ச்சிக்கு 10 பில்லியன் ஒதுக்கீடு.
- புதிய நீர்த்தேக்கங்கள் அமைக்க 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.
- புதிய நீர்வழங்கல் அமைப்பு திட்டம் செயற்படுத்த 750 மில்லியன் ஒதுக்கீடு.
- இலங்கையின் முக்கிய நகரங்களில் விசேட அபிவிருத்தி

## கல்வி

- பல்கலைக்கழக மாணவர்கள் 25 ஆயிரம் பேருக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் விமானக் கட்டுமானப் பிரிவு ஆரம்பிக்கப்படும்.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மஹாபொல புலமைப் பரிசில் ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிப்பு. (இதுவரையில் 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டது)
- குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின், பல்கலைக் கழகத்துக்கு தேர்வாக முடியாத மாணவர்கள் 50 ஆயிரம் பேருக்கு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்த 500 ரூபா, ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.
- முன்பள்ளிகள் இல்லாத சகல இடங்களிலும் முன்பள்ளிகள் அமைக்க நடவடிக்கை.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது. (வடக்கு மாகாணசபையின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றது)
- விசேட தேவையுடைய மாணவருக்கான மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு 750 ரூபா.
- 50 ஆயிரம் ஆசிரிய உதவியாளர்களுக்கு 9 ஆயிரத்து 500 ரூபா மாதாந்தப் படி வழங்கப்படவுள்ளது. (வடக்கு மாகாணசபையின் கீழ் பணியாற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு ஏற்கனவே மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது)
- ஆசிரியர்களின் சம்பள, பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு.
- பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக, புதிய முறையிலான பாடசாலை மட்ட ஆசிரியர் நியமனத் திட்டம் முன்வைக்கப்படும்.

## சுகாதாரம்

- சுகாதார மேம்பாட்டுக்காக 150 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
- சிறுநீரக நோயை இல்லாதொழிக்க நீரைச் சுத்தப்படுத்தும் உபகரணங்களை விநியோகிக்கத் திட்டம்.
- சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.
- சிறுநீரக நோய்க்கான விசேட வைத்தியப் பிரிவு அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ளது.
- பெண்களின் புற்றுநோயைத் தடுப்பதற்காக 700 மில்லியன் ஒதுக்கீடு.
- அனைத்து மக்களுக்கும் நடமாடும் சேவையின் ஊடாக இலவச வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- ஆயுள்வேத வைத்தியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு.
- கர்ப்பிணிகளுக்கு ஆரோக்கியமான உணவு மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு என்பவற்றுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

## வேலைவாய்ப்பு

- மாகாணசபைகளுக்கு 15 ஆயிரம் ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
- அடுத்த வருட நடுப்பகுதியில் சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை. இதன் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

## மருத்துவ முகாம் இன்று

யாழ்ப்பாணம்.ஒக்.25

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாமும் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி.கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொற்றா நோய்கள் தொடர்பில் வைத்தியக்கலாநிதி யமுனாணந்தா, போசாக்கும் ஆரோக்கியமும் தொடர்பில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நா.பிறேம்குமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு பரிசோதனை இடம்பெறும்.

(ற-14)

## நடமாடும் சேவை இன்று

அளவெட்டி, ஒக்.25

இளவாலை பொலிஸ் பிரிவின் நடமாடும் சேவை இன்று காலை 8.30 - பி.ப 1 மணிவரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது. இங்கு சகலவிதமான நோய்களுக்கான ஆலோசனைகளும், அறிவுரைகளும் பரிசோத னைகளும் இடம்பெறுவதுடன் சிகிச்சையும் அளிக்கப்படவுள்ளது. அத்துடன் அடையாள அட்டை தொலைத்தவர்களுக் கான முறைப்பாடுகளும் சிறு சிறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சாரதிப்பத்திரம் தொடர்பான விளங்கங்களும் இங்கு பெறமுடியும் என்று இளவாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-36)

## சப்ரகமுவ பல்கலைக் கழக கற்றல் செயற்பாடுகள் திங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.25

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கட் கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்க அதன் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில், முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக திங்கட் கிழமை கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான கற்பித்தல்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளன.

முதலாம் ஆண்டு மாணவர்களை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிய விடுதிகளுக்கு வருமாறு நிர்வாகம் அறிவித்துள்ளது. முதலாம் ஆண்டு மாணவர்களின் பெற்றோரை நேற்று பல்கலைக்கழகத்திற்கு அழைத்திருந்த நிர்வாகம், அவர்க ளுக்கு விளக்கங்களை வழங்கியதுடன் புதிய விடுதியை பார்வையிட சந்தர்ப்பம் வழங்கியது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அருகில் சத்தியாகிரகப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ற-5)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 8 சனி (25.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 333


# இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஐ.நாவின் நோக்கம்

## அரசுடன் இணைந்து செயற்படும் என வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 25

**போருக்குப் பிந்திய இலங்கையில் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்றுள்ளன. இவற்றை தடுக்கவும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் அரசுடன் இணைந்து ஐ.நா. செயற்படும்.**



இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி சுபினாய் நண்டி.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 69 ஆவது தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கே இலங்கையுடன் ஐ.நா. இணைந்து பணியாற்றிவருகிறது.

போர் முடிந்து ஐந்து வருட காலப் பகுதிக்குள் மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வு போன்ற துறைகளில் இலங்கை சாதித்தவற்றை ஐ.நா. பாராட்டுகின்றது.

வடக்கு, கிழக்கின் உட்கட்டமைப்பு வசதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும், மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி விடயங்களுக்கு அப்பால் 'முழுமையாக இணைந்திருத்தல்' என்ற விடயத்துக்கே நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம் - என்றார். (த-சி)

## இலங்கைத்குப் பயணிக்கும் பிரசைகளுக்கு எச்சரிக்கை

### வெளிநாடுகள் விடுத்துள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 25

இலங்கைக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வடக்குக்கான பயணக் கட்டுப்பாடு தொடர்பிலேயே வெளிநாடுகள் தமது பயணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சினால் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து, வடக்குக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு கடவுச்சீட்டுடன் வடபகுதிக்குச் செல்பவர்கள், பாதுகாப்பு அமைச்சிடம் முன் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளாமல் வடபகுதிக்கு பயணம் மேற்கொண்டால், ஓமந்தையில் வைத்து அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

இதனடிப்படையில் கனேடிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட பயண எச்சரிக்கையில், நீண்ட காலம் இலங்கையில் தங்கியிருப்பதற்கான நுழைவு விசைவைப் பெற்றவர்கள் கூட, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே வடக்குக்குப் பயணிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள பயண எச்சரிக்கையில், இராணுவத்தினரின் பணிப்புரைகளுக்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## 24 இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்.ஒக்.25

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 24 பேருக்கு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி 4 படகுகளுடன் கோட்டைப் பட்டினம் மற்றும் ஜெகதாப் பட்டினம், இராமேஸ்வரம் பகுதிகளைச் சேர்ந்த 16 மீனவர்களும், படகு பாறையில் சிக்குண்டு கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட 4 மீனவர்களும், படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி மீட்கப்பட்ட 4 மீனவர்களும் உட்பட 24 மீனவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான விளக்கமறியல் நேற்று முடிவடைந்த நிலையில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (த-14-4)

## ஊழியர் சேமலாப நிதி மாதமாக நவம்பர் அரசினால் பிரகடனம்

யாழ்ப்பாணம்.ஒக்.25

நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் நவம்பர் மாதமானது ஊழியர் சேமலாப நிதிய மாதமாக முன்னெடுக்க வேண்டும் என அகில இலங்கைத் தொழில் திணைக்களம் பிரகடனப்படுத்தியுள்ளதாக வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும், குறைந்தளவு வருமானத்தைப் பெறும் ஊழியர்களின் கொடுப்பனவு மட்டங்களை வரையறுக்கப்பட்ட எல்லைகளைவிட அதிகரிக்கவேண்டும் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் கிராம மற்றும் பிரதேச அடிப்படையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

செயற்றிட்டத்தின் முதல் கட்டம் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படுவதோடு யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில் ஆகிய பிரதேச செயலகங்களில் இருந்து கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என மொத்தமாக 180 உத்தியோகத்தர்க

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தீபாவளிப் பண்டிகை முடிந்தும் கூட ஆசிரியர்களுக்குச் சம்பளம் இல்லை

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 25

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களைச் சேர்ந்த யாழ்.ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்குத் தீபாவளி முடிந்தும் கூட இதுவரை இந்த மாதத்துக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை என்று ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளதோடு அதனை விரைவில் வழங்குமாறும் கோரியுள்ளது.

குறித்த வலயங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கே அவ்வாறு சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இந்தமுறை தீபாவளியை முன்னிட்டு விரைவில் சம்பளம் வழங்கப்படும் என்று ஆசிரியர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு 20 ஆம் திகதிக்கு முன்பாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போனோரின் உறவுகள் பாப்பரசருக்கு கடிதம்

வவுனியா, ஒக் 25

காணாமற்போன உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி பாப்பரசர் பிரான்ஸிஸ்க்கு உறவினர்கள் 60 பேர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியாவில் ஒன்று கூடிய காணாமற்போனோரின் உறவுகளை 60 பேர் தமது உறவுகளை மீட்டுத் தரும்படியும் இலங்கைக்கு வருகை தரும் பாப்பரசர் வடபகுதிக்கும் வந்து போர் இடர்களையும், மக்கள் படும் துயரங்களையும் பார்வையிடவேண்டும் என்றும் கோரி இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

வவுனியா மாவட்ட பிரசைகள் குழு ஊடாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-402)

## தீங்கு விளைவிக்கும் எண்ணம் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஒக். 25

தீபாவளி வாழ்த்து அட்டைகள் வழங்கப்பட்டமையானது மனப்பூர்வமாக அனைத்து இந்து மக்களுக்கும் வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கமேயன்றி வேறு எந்தவித உள்நோக்கமும் இல்லை என யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதி உதயனின் முன் பக்கத்தில் வெளியான "வாழ்த்துக் கூறும் சாக்கில் தகவல் திரட்டிய இராணுவம்" என்ற செய்தி தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தச் செயற்பாடானது தீபாவளி தினத்தில் மட்டுமன்றி அண்மையில் முஸ்லிம் பக்தர்களினால் கொண்டாடப்பட்ட ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டும் வாழ்த்து அட்டைகள் வழங்கப்பட்டதுடன் கிறிஸ்தவ பக்தர்களின் நத்தார் தினத்திலும் கட்டளைத் தலைமையகம் இவ்வாறு பாகுபாடின்றி மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

இந்து பக்தர்களுக்கு மிக முக்கிய நாளான தீபாவளி தினத்தில் இராணுவத்தினர் மேன்மையான எண்ணத்துடன் மேற்கொண்ட செயலைப் பற்றி தவறான அர்த்தத்தை கற்பித்து குறித்த தலைமையகம் கவலை தெரிவிப்பதுடன், எந்த வித அடிப்படையுமற்ற விமர்ச னங்கள், தேவைகளையுடைய யாழ். மக்களுக்காக இராணுவம் மேற்கொள்ளும் சமூகநல

(22 ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாள்களில் 10 லட்சம் ரூபா மாநகர சபைக்கு வருமானம்

### தற்காலிக கடைகள் மூலமாக

யாழ்ப்பாணம், ஒக். 25

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் அனுமதிக்கப்பட்ட 3 நாள் தற்காலிக நடைபாதை வியாபாரம் மூலம் சுமார் 10 லட்சம் (ஒரு மில்லியன்) ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், யாழ். வணிகர் கழகம் தம்மிடம் குறை காணமுடியாது என்றும் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் கூடிய வருமானம் கிடைத்துள்ளது. கடந்த வருடம் 7 லட்சம் வருமானம் கிடைத்தது. இந்த முறை 3 லட்சத்தினால் அது அதிகரித்துள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள கடைகளால் மாதாந்தம் 13 மில்லியன் ரூபா வரி வருமானமாக கிடைக்கிறது. அதன் அரைவாசிக்கும் குறைந்த வருமானமே நகர்ப் பகுதியில் கிடைக்கிறது. எனவே சில நாள்களில் கிடைக்கும் ஒரு மில்லியன் ரூபா வருமானத்தை இழப்பதற்கு நாம் தயாரில்லை.

வியாபார நிலையங்களுக்கு முன்பாகப் பொருள்களை வைத்து வியாபாரம் செய்வதற்கு வணிகர் கழகம் அனு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி பொலிஸ் முன்பாக மிதிவெடிகள்

கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுப் பிற்பகல்2 மணியளவில் மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் நீர்க்குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மிதிவெடிகளைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனை அடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவப் பொறி

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏழாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
பரமநாதன்
ஜெயக்குமார் (ஜெயா)

திதி: துதியை (25.10.2014)

அன்னையின் மடியில்
20.07.1982

ஆண்டவன் மடியில்
11.11.2007

எங்கள் அன்பின் ஜெயாவே
எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே
ஏழாண்டுகள் ஓடி விட்டதையா
ஏழாண்டுகள் என்ன
ஏழாயிரம் ஆண்டுகள் போனாலும்
ஆறாதையா உங்கள் நினைவு எமைவிட்டு
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாவளை,
இயற்றாலை, கொடிகாமம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் இராமலிங்கம்
சிவசுப்பிரமணியம்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 25 |
| 02 | 10 |
| 1947 | 2013 |

கவலையேதுமின்றிய கனிவான வாழ்வில்
தங்கள் துணையோ தாங்கொண்ணா துயரினில்
ஓராண்டு ஓடி மறைந்ததோ இந்த மண்ணில் - அப்பா
தேடி அலைகின்றோம் உங்களை எண்ணி,
வாடி நிற்கும் பிஞ்சு முகங்கள் - அப்பப்பாவை
அம்மப்பாவை தேடித் திரிகின்றன சுற்றும் முற்றும் எங்கோ என்று...
தங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும் :

இரும்புமதவடி,
கல்வத்தை, வதிரி, கரவெட்டி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

(53405)(7.6.3)

## மரண அறிவித்தல்



### திருமதி சத்தியபாமா சரவணமுத்து

மல்லாகம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா சரவணமுத்து நேற்று (24.10.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து சரவணமுத்து (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய கட்டுப்பாட்டாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாஸ்கரன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவபாரதி மற்றும் சிவபாலன் (லண்டன்), சிவநதி (கனடா), சிவஞானவதி (கனடா), சிவபவானி (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காமினி, வனிதாதேவி, இரங்கநாதன், சிறீநாதன், தர்மராசா ஆகியோரின் பாசமிகு மாமியும், கோபிநாத், கோவர்த்தனன், இரதோற்சதன், தர்மிளா, சாரங்கன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.10.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
021 300 8171, 077 526 8723

(47319) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
த.தர்மராசா (மருமகன்)

## நீதி நூல் மனனப் போட்டி

வலி.வடக்கு, ஒக்.25

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் நீதி நூல் மனனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகப் பரீட்சை செயலாளர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

இந்த முறை தரம் ஒன்று, தரம் 2 மாணவர்களுக் காக நடத் தப்படும் இந்தப் பரீட்சையில் எழு நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## கந்தசஷ்டி பெருவிழா

தென்மராட்சி, ஒக்.25

அல்லாரை வடக்கு, நெல்லியடி கந்தசாமி ஆலயத்தில் முதல் தடவையாக கந்தசஷ்டி பெருவிழாவும் சூரன் போரும் இடம்பெறவுள்ளன.

மகா கும்பாபிஷேகத்தின் நிறைவு நாளான நேற்று சங்காபிஷேகத்தின் பின்னர் கந்தசஷ்டி விரதம் அடியார்களால் அனுட்டிக்கப்பட்டது. ஆலயத்துக்கென புதிதாக உருவாக்கப் பட்ட சூரனுடன் முருகப் பெருமான் எதிர்வரும் 29 ஆம் திகதி போர் நிகழ்த்துவார் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். மறுநாள் திருக்கல்யாணத் திருவிழா இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

♦♦♦

வவுனியா, ஒக்.25

வவுனியா, தாண்டிக்குளம் கந்தசுவாமிஆலயத்தில் கந்தசஷ்டி விரத விழா நடைபெற்றுவருகிறது. தினமும் காலை 9.30 மணிக்கு சண்முக சுவாமிக்கு விசேட அபிசேகமும் 11.30 மணிக்குவிசேடபூசைகளும் சண்முகார்ச்சனையும்வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து பகல்12.30 மணிக்கு வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தாபகரும் செயலாளருமாகிய தமிழருவித.சிவ குமாரன் நிகழ்த்தும் கந்தன் கனியமுதம் தொடர் தெய்வீகப் பேருரைஇடம்பெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 4 மணிக்குசூரசம் காரத் திருவிழா இடம்பெறும். சிவசிறி தியாக சக்திதரக் குருக்கள் உற்சவ பிரதம குருவாக இருந்து பூசை களை நடத்துவார். (வ-402)

## கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ் நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தரம் 2 கற்கை நெறிக்கான வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பௌதிக விஞ்ஞானபீடவிரிவுரை மண்டபத்தில் நடைபெறும் என்று நூலகச் சங்க ஒருங் கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (வ-ரி)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வரதராஜக்குருக்கள்
அரிகரசர்மா

அன்னை மடியில்
20.08.1980

ஆண்டவன்
அருளடியில்
14.11.2004

திதி: துதியை (25.10.2014)

ஆண்டுகள் பத்து ஆகிவிட்டதையா
எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை
ஆண்டவன் திருவடியை அடைந்து
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வீரபத்திரர் கோயில்,
கல்வியங்காடு.

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்.
பொ.வரதராஜக்குருக்கள்.

(53439)(4.3.6)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னத்தம்பி
தேவராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 08 |
| 10 | 11 |
| 1942 | 2010 |

பாரினிலே பல்லாண்டு வாழ்வீர் என
பாவியர் நாம் நினைத்திருந்தோம்
காலனவன் சதி வலையில்
கால் தடக்கி விழுந்தீரோ
கனக்குதையா எம் நெஞ்சம்
நான்காண்டுகள் ஆகிவிட்டதப்பா
ஆறவில்லை எம் துயரம்
நீங்கிடுமோ உம் நினைவுகள்
நீங்காமல் வாழ்கின்றீர் எம் மனங்களில்

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

(53208)(4.3.6)

## முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
நிமாலினி (பாப்பா)
வீரசிங்கம்

அன்னையின்
மடியில்
11.04.1972

ஆண்டவன்
அடியில்
25.10.1984

சுவாசத்தில் கலந்த காற்றைப் பார்க்க இயலாது
எம் உயிரில் கலந்த உன்னை மறக்க இயலாது
நீ இருப்பதோ வெகுதூரம் உன் நினைவு
இருப்பதோ எம் விழியோரம்.

நீ பேசிய வார்த்தைகளும் நாம் சேர்ந்து சிரித்த
நாள்களின் நினைவுகளும் எம் கண்களுக்குள்
கண்ணீராக சேர்ந்து ஆயிரம் மலர்களைக் கொண்டு
அலங்கரிக்கிறது உன் கல்லறை.

'உன்னோடு வாழ எங்களுக்கு இல்லை யோகம்
வருடங்கள் 30 கடந்தாலும் விரல் பிடித்துக்கொண்டு
கூடவே வருகின்ற உன் நினைவுகள்
எம் இதயங்களில் நீ வந்த காலடித்தடம்
ஒன்றே போதும்
எம்மனதில் உள்ள உன் நினைவை
காலனால் அழிக்க முடியாது.

34/1, இராமநாதன் ரோட்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

உன் பிரியமான
அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்.

(53391)(7.6.3)

# வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தலைவரின் நினைவு தின நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக். 25

வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான அமரர் சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரனின் 14 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை எஸ்.விக்கினராசா தலைமையில் நடை பெறவுள்ளன.

நிகழ்வுகள் நாளை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு திருமதி ஸ்ரீபாஸ்கரன் பாலாம்பிகையால் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வுடன் ஆரம்பமாகி காலையில் முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் மற்றும்பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க ஸ்ரீ பாஸ்கரன் கலாசார மண் டபத்தில் நடைபெறவுள்ள நினைவுக் கூட்டத்தில் வரவேற்புரையை பெ.தவராசாவும் தலைமையுரையை எஸ்.விக்னராசாவும் நிகழ்த் தவுள்ளனர்.

அதனைத் தொடாந்து நினைவுரைகளை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன், வலிகாமம் கல்வி வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள் ளன. (வ-86)

## முத்தமிழ் விழா

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியால யத்தின் பரிசில் நாளும் முத்தமிழ் விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய அரங்கில் வித்தியாலய அதிபர் ச.சத்திய வரதன் தலைமையில்நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட் டக் கல்விப் பணிப்பாளர் ஆ.க. சற்குணராஜாவும் வடமாகாண பொலிஸ் திணைக்கள கணக்காளர் அ.கலைச்செல்வனும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை உப அதிபர் ச.குகதாசனும் கலந்து கொள்வார்கள். (வ-ரி)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளி நொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனையில் நடை பெறும்.

இந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
28
.
12
.
1948



இறப்பு
25
.
10
.
2013

அமரர் Dr. துரைராஜா துரைராஜசிங்கம்

மைந்தனைப் பாதியில் பறி கொடுத்து மாறாத் துயரின் கொடுமைதனில்
மண்ணுலகைப் பிரிந்து நீர் மீளாத்துயில் கொண்டு
ஆண்டொன்று ஆனதையா அடுத்தடுத்துப் பேரிடிகள்
எம் மீது விழுந்ததையா ஏங்கித் தவிக்கின்றோம்
எம் உயிர் உள்ளவரை—உம் நினைவு எமை விட்டு அகலாது

கலைவாணி வீதி, சித்தன்கேணி. (53446)(4.3.6)

பிறப்பு
23
.
01
.
1988



இறப்பு
14
.
02
.
2013

அமரர் துரைராஜசிங்கம் துரேந்திரா

(H.N.B ஊழியர், கிளிநொச்சி தெற்கு கிளை)

வாழ்க்கைப் பயணம் வழியினில் முடிந்ததே எம் விழியினில் நீர் பாய்ச்சி
கண்மூடிக் கொண்டாயே! கருவினில் சுமந்தவள் கலங்கியழ
தெருவினில் வைத்து தேடிவந்து கொன்றானே! தூய ஒளியாக வங்கியில் பிரகாசித்த
உன் உருவத்தைப் பறித்து எடுத்தார்களே! நீ விட்டுப் போனாலும்— உன் நினைவுகள்
எம் மனதை தொட்டு நிற்கும்.

குடும்பத்தினர்.



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட.



## திருமதி சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர்)

பிறப்பு
14.09.1941

திதி: பூர்பக்க துதியை

இறப்பு
28.10.2011




ஓயாமல் எமக்காய் உழைத்த அம்மாவுக்கு!
ஓய்வைக் கொடுத்து விட்டான் இறைவன்
ஓராண்டு, ஈராண்டு, மூவாண்டுமானது
ஓராயிரம் ஆண்டானாலும் மாறிடுமோ எம் பாசம்
ஓயாத அலைகளாய் ஓடுது எம் மனது
ஓங்கி ஒலித்த உங்கள் குரல் காணாது
ஓய்ந்து கிடக்குது உங்கள் தொலைபேசி
தேய்ந்து போகக்கூடியதா உங்கள்பாசம்
காய்ந்து விட்டது எம் கண்களில் நீரும்
சாய்ந்து கொள்ளத் தோளிருந்தாலும்
மாய்ந்து போகையிலும் தாய்மடி போல வருமா?
தாங்கி நீங்கள் இருக்கையில்
ஏங்கவில்லை மனது - இப்போ
காங்கி எழும் போதும் மாறவில்லை உம் நினைவு

சற்றும் தெரியாமல்
புற்றுநோயால் எமன் வந்து
கட்டுடல் அம்மாவை வெற்றுடல்
ஆக்கிவிட்டான்
வீட்டினில் நீங்களில்லையென்றபோது
வாட்டுது துயரம்
தன் கூட்டினில் எடுக்க
பூட்டுப்போட்டு விட்டான் அந்த இறைவன்
கட்டிய மனைவி கட்டினில் சோறு தந்தபோதும்
குட்டி நீர் ஊட்டிய சோறு
கட்டில போகும் போதும் மறந்திடுமோ
கிட்டவே எம்மிடம் வந்திடும் விட்டிடும் எம் துயரம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி16576)(12.3.6)

# அம்பாள்புரம் கிராமத்துக்கு வாழ்வாதார உதவித் திட்டம்



முல்லைத்தீவு, ஒக், 25
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு அம்பாள்புர கிராமத்துக்கு வாழ்வாதார உதவித் திட்டம் மாவட்ட அரச அதிபரினால் வழங்கப் பட்டது.
அம்பாள்புர கிராம சேவையாளர் த.குணசிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நிதியுதவியுடன் 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் கிணறு ஆழப்படுத்துவதற்கான இயந்திரங்கள்-3, ஜெனரேற்றர்கள்-3, லான்ட்மாஸ்ரர்-1 என்பன வழங்கப்பட்டதோடு 200 குடும்பங்களுக்கு 11 லட்சம் ரூபா செலவில் உழுந்து, கச்சான், பயறு, விதைநெல் ஆகிய விதை தானியங்களும் வழங்கப் பட்டன. (த-435)

## அரசகலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.25
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் மாற்று வலுவுடையோருக்கான அரச கலைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.
நடனம் உட்பட பாடல் , ஓவியம் பறை சாற்றல் போட்டிகள் காலை 8.30 மணிக்கும் நாடக போட்டி முற்பகல் 11 மணிக்கும் நடைபெறும்.
ஓவியப்போட்டிகளில் கலந்து கொள்வோர் சுற்றறிக்கைக்கு அமைய கடதாசி மற்றும் உபகரணங்களையும், பறைசாற்றல் போட்டியில் பங்கு கொள்வோர் போட்டிக்கான இசைக் கருவியையும் கொண்டு வருமாறும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (வ-7)

## மாரடைப்பால் உத்தியோகத்தர் உயிரிழப்பு

வரணி, ஒக்.25
மாரடைப்பு காரணமாக அரச உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வரணிப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றது.
யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றி வந்த சிதம்பரநாதர் திருச்சிற்றம்பலம் (வயது-58) என்பவரே இவ்வாறு திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்தார். இவர் வடமராட்சிப் பிரதேசத்தை தனது கடமைப் பிரதேசமாகக் கொண்டு சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 25
நவாலி சென்.பீற்றஸ் றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் கலந்து கொள்வர். (வ-ரி)

* * *

வடமராட்சி ஒக்.25
கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவும் பரிசில் தினமும் சின்னத்தம்பி கலை அரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் மா.நவந்தமணி தலைமையில் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்து கொள்வார். திருமதி குயின்ஜெசீலா கலாமணி பரிசில்களை வழங்குவார். (வ-173-35)

* * *

தென்மராட்சி, ஒக்.25
மட்டுவில் கமலாசினி வித்தியாலய பரிசில் நாளும் நிறுவுநர் தின நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய சுப்பையா அரங்கில் இடம்பெறும்.
வித்தியாலய அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவனும் யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்கள நில அளவையாளருமான பொன்னையா செந்தில்குமரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப்பிரமணியமும் கலந்து கொள்வர்.
நிறுவுநர் வித்துவான் க.இராமலிங்கம் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் செல்வி சைந்தவி பரமேஸ்வரன் நிகழ்த்துவார்.
வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். (வ-9)

## வாசிப்பு மாத போட்டிகள்

தென்மராட்சி, ஒக்.25
சாவகச்சேரி நகரசபையின் மீசாலை, சாவகச்சேரி, நுணாவில் ஆகிய பொது நூலகங்கள் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தவுள்ளன.
கட்டுரை, பொதுஅறிவு, சித்திரம் ஆகிய போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.
மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொதுநூலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே போட்டிகள் நடத்தப்பட்டு 3 நூலகப் பிரிவுகளிலும் வெற்றி பெறுவோருக்கு தனித்தனியாக பரிசில்கள் வழங்கப்படும் என்று நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

## மாணவரை கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.25
கடந்த ஆண்டின் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளி களுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு ஒரே நாளில் சான்றிதழ்கள் வழங்க மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலைகளில் விழாவாக நடத்தி சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்குவதுடன் மாணவர்களின் செயலாற்றுகைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் உரை ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.
மாகாண கல்வித் திணைக்களத்தால் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அந்தந்தக் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.
ஏற்கனவே சில கல்வி வலயங்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)


CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm




(Hindi) with English Subtitles
Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் மத்தி, உதவி அரசாங்க அதிபர் செயலக வீதியில் (A.G.A. Office Lane) அமைந்துள்ள "யாந்திரை" என்னும் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நல்ல குடியிருப்பு சூழலில் வீடு கட்ட உகந்த ஆதனம்.
தொடர்பு: 077 129 8159 (53350) (7.6.3)

**கார் விற்பனைக்கு**

NP- KT XXXX இலக்கமுடைய NANO CAR விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 710 7487 (53466) (45.6.3)

**வீடு விற்பனைக்கு**

பாண்டியன்தாழ்வு / சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 4 பரப்பு 8 குழி வீடு வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 761 6515 (53446) (45.6.3)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**

**வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்**

தவிசாளர், பெறுகைக்குழு வலிதென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய், தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்காட்டப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது
கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும் அட்டவணையிற்காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 27.10.2014 – 14.11.2014 பி.ப. 2.00 மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 17.11.2014 மு. பகல் 10.00 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 17.11.2014 மு.ப. 10.30 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் / அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5 மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு **தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம் மானிப்பாய்** என்ற முகவரிக்கோ அல்லது **தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 14.11.2014 மு.ப 10.00 மணிக்கு** அல்லது **அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ** ஒப்படைத்தல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய **உள்ளூராட்சி** [illegible] **ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்** [illegible] **யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

06 காலங்கடந்து [illegible] கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்
07.மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா | ஏனைய வரி (NBT) ரூபா |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | சித்திரமேழி ஞானவைரவர் வீதி புனரமைப்பு | C8 அல்லது அதற்கு மேல் | 14000.00 | 1000.00 | 20.00 |
| 2 | சாவற்கட்டு முருகமூர்த்தி [illegible] கோவில் வீதி புனரமைப்பு [illegible] சந்தையிலிருந்து [illegible] நாகையம்மன் இணைப்பு வீதி) | C8 அல்லது அதற்கு மேல் | 17500.00 | 1000.00 | 20.00 |

சண்முகம் சிவகுமாரன்,
தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். (சி/17221)(4.6.3)

**நிர்வாக அலுவலகர் தேவை**

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம்
V&T அறக்கட்டளை [illegible] யினால்
நிர்வகிக்கப்படும்
ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்திற்கு
**நிர்வாக அலுவலர் தேவை**
கணக்கியல், நிர்வாகம் ஆகியவற்றில் அனுபவமுடைய, தனியார், அரச, நிறுவனங்களில் இருந்து இளைப்பாறியவர்கள் விரும்பத் தக்கது. தகுதியுடையோர் விண்ணப்பத்தைப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்
சிவசக்தி மணிமண்டபம்
சிவன் கோவிலடி,
ஆவரங்கால் புத்தூர். (53464) (45.6.3)

## பசுப் பாலுக்குக் கிராக்கி

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். நகரை அண்டிய பால் சாலைகளில் நேற்றுப் பசுப் பாலுக்குத் திடீர் கிராக்கி ஏற்பட்டது.

கந்தசஷ்டி உற்சவ காலம் ஆரம்பித்துள்ளதால் விரதத்துக்குப் பசுப்பால் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாகவே பசுப்பாலுக்குக் கிராக்கி ஏற்பட்டது.

பால் சாலைகளில் நுகர்வோர் பசுப்பாலை முண்டியடித்துப் பெற்றுச் சென்றதைக் காண முடிந்தது.

இது குறித்து யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்திடம் (யாழ்கோ) தொடர்பு கொண்டு கேட்டபோது: பசுப்பாலுக்கு பற்றாக்குறை எதுவுமே கிடையாது. தினமும் கொண்டு வருபவர்களிடம் இருந்து 4ஆயிரம் லீற்றர் பசுப்பால் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டில் உள்ள யாழ்கோவின் 24 கிளை நிலையங்கள் ஊடாகப் பசுப்பால் நுகர்வோருக்குச் சீராக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது கந்த சஷ்டி விரத காலமாகையால் பசுப்பால் சில விற்பனை நிலையங்களில் உடன் விற்றுத் தீர்ந்துவிட்டது. இதைத் தவிர அவற்றுக்கு எந்தவித பற்றாக்குறையும் இல்லை தாராளமாகப் பசுப்பால் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்று அதிகாரி ஒருவர் கூறினார். (த-17)

## கடற்றொழில் பரிசோதகர்களுக்கு களுத்துறையில் விசேட பயிற்சி

யாழ்ப்பானம், ஒக். 25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களில் கடமையாற்றும் கடற்றொழில் பரிசோதகர்களுக்கு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான பயிற்சி நெறி இந்த மாதம் 27 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் முதலாம் திகதி வரை ஒருவார காலத்துக்கு களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில்நடைபெறவுள்ளது.

மீனவர்களின் நலன்கருதி கடல்வளத்தைப் பாதுகாக்க முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு பல தொழில்களுக்குத் தடை விதித்திருந்த போதிலும் சிலர் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் தடை செய்யப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மீன்களின் இனப் பெருக்கத்தில் பெரிய பின்னடைவு ஏற்பட்டதுடன் கடல் வளங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களின் சட்டவிரோத மீன்பிடித் தொழிலுக்கு எதிராகக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினால் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சட்டவிரோதமான தொழிலில் ஈடுபடுபவர்களைக் கண்காணித்து வரும் கடற்றொழில் பரிசோதகர்கள் இவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு வசதியாகச் சட்ட வரைவுகளையும் மேலதிக அறிவுரைகளையும் பெறக்கூடிய வகையில் கடற்றொழில் அமைச்சினால் இந்தப் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (த-115)

## சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தை பொது நிகழ்வுகளுக்கு வழங்க முடிவு

தென்மராட்சி,ஒக் 25

சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தைப் பொது கலாசார நிகழ்வுகள் மற்றும் கல்வி நிகழ்வுகளுக்குக் குறைந்த வாடகையில் விடுவதற்கு நகரசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், பொது. கலாசார நிகழ்வுகளையும் கல்வியுடன் தொடர்புடைய நிகழ்வுகளையும் நடத்த பொன்விழா மண்டபத்தை வாடகைக்கு வழங்குமாறு பொது மக்கள் விடுத்த வேண்டுகோள் தொடர்பாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதுவரை இந்த மண்டபத்தின் மேல்மாடியில் பூப்புனித நீராட்டு விழாக்களே நடத்தப்பட்டு வந்தன. ஏனைய நிகழ்வுகள் கீழ் மாடியில் நடத்தப்பட்டு வந்தன. குளிரூட்டப்பட்ட மேல் மாடி மண்டபத்தைப் பொது. கலாசார நிகழ்வுகளையும் கல்வியுடன் தொடர்புடைய நிகழ்வுகளையும் நடத்தக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்குமாறு பொது மக்களும் பொது அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

மேல்மாடி மண்டபத்தில் உள்ள பொருள்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாடகைக்குப் பெறுபவர் அதற்கு உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் அதனை வாடகைக்கு வழங்கலாமென சபையினால் தீர்மானிக்கப்பட்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (த-9)

## சுகாதார விதிகளுக்கு முரணாக உற்பத்தியான ஐஸ்கிறீம் அழிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

குடாநாட்டில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகத் தயாரிக்கப்பட்டு தீவுப் பகுதிகளில் விற்பனைக்காகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஐஸ்கிறீம் வகைகளைக் கண்டு பிடித்த சுகாதாரக் குழுவினர் அவற்றைக் கைப்பற்றி அழித்ததுடன் சம்பந்தப்பட்டவர்களை முதற்தடவை என்பதினால் எச்சரிக்கை செய்துள்ளனர்.

குடாநாட்டிலுள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களில் இடம்பெற்று வரும் மோசடி குறித்து சோதனை செய்து வரும் சுகாதாரப் பணிப்பாளரினால் விசேடமாக நியமிக்கப்பட்ட சுகாதாரக் குழுவினர் சுகாதார விதிமுறைகளுக்கு எதிராகவும் அனுமதியின்றியும் தயாரிக்கப்பட்டுக் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ்கிறீம் வகைகளைக் கைப்பற்றி அழித்து வருவதுடன் சிலருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகளும் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் தீவுப் பகுதிக்குச் சென்ற சுகாதாரப் பகுதியினர் நயினாதீவு, காரைநகர், வேலணை ஆகிய இடங்களில் குறிப்பிட்ட சில இடங்களைச் சோதனை செய்தபோது சுகாதார விதிமுறைகளுக்கு முரணான விதத்தில் குடாநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைகளைக் கண்டு பிடித்தனர். அவற்றைக் கைப்பற்றி அழித்த சுகாதாரக் குழுவினர் முதற் தடவை என்பதினால் அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தோரைஎச்சரிக்கை செய்துள் ளனர். (த-115)

## வயோதிபர் தற்காலிகமாக இணைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

தன்னைப் பாராமரிப்பதற்கு எவரும் முன்வராத காரணத்தினால் அரச முதியோர் இல்லத்தை நாடி வந்த முதியவர் ஒருவரைத் தற்காலிகமாக இணைத்துப் பராமரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டதாக கைதடி முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு சின்னக்குளம் ஓமந்தையைச் சேர்ந்த 81வயதான நாகன் சிதம்பரன் என்ற முதிய்வர் நேற்றுக் காலை கைதடி முதியோர் இல்லத்துக்கு வந்திருந்தார்.

வயது முதிர்ந்த தன்னைத் தனது குடும்பத்தினர் பராமரிப்பதற்கு முன்வரவில்லை. இதனால்தான் அரச முதியோர் இல்லத்தை நாடி வந்துள்ளேன் என்று அழுதவாறு கெஞ்சி மன்றாடினார்.

முதியவரின்பரிதாபநிலையைக் கருத்தில் கொண்டு இல்ல அத்தியட்சகர் அந்த முதியவரை உடனடியாக இல்லத்தில் இணைத்துக் கொண்டார்.

முதியவரின் உறவினர்களை இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (த-17)

## பிறப்பு, இறப்புச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவை நாவாந்துறையில்

யாழ்ப்பாணம்,ஒக்.25

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். பிரதேச செயலகம் நாவாந்துறையில் நேற்று நடத்திய நடமாடும் சேவை மூலம் நூற்றுக்கணக்கான மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

ஜே/84,ஜே/85,ஜே/86 மற்றும் ஜே/87 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் காலை 9 மணிக்கு யாழ்.உதவிப் பிரதேச செயலாளர் செல்வி வி.தனுஷ்கா தலைமையில் இந்த நடமாடும் சேவை ஆரம்பமானது.

பிரதேச செயலக அதிகாரி கள், பணியாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், 'கியூடெக்' நிறுவனப் பிரதிநிதிகள் போன்றோர் இந்த நடமாடும் சேவையில் பங்கு கொண்டனர்.

நான்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் இந்தச் சேவை மூலம் பயனடைந்தனர். (த-17)

## பனங் கள்ளு தட்டுப்பாடு

குடாநாட்டில்பனங்கள்ளுசீசன் முடிவடைந்து தட்டுப்பாடு நிலவுவதனால் தற்பொழுது கள்ளுத் தவறணைகளில் போத்தலில் அடைக்கப்பட்டு கள்ளு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் மதுப் பிரியர்கள் தட்டுப்பாடு நிலவும் கள்ளை வாங்குவதற்காகத் தவறணைகளில் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பமாகும் பனங்கள்ளு சீசன் ஆரம்பத்திலிருந்து குறைவாக இருந்தபோதிலும் நாளடைவில் அதிகரித்து மார்ச், ஏப்ரல்,மே போன்ற மாதங்களில் பெருந்தொகையாகக் கிடைப்பதினால் தவறணைகளில் விற்பனை செய்யப்பட்டு மிகுதியாகவிருக்கும் கள்ளைத் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் போத்தலில் அடைத்துப் பாதுகாப்பாக வைத்திருப்பது வழக்கம்.

குடாநாட்டில் பனங்கள்ளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் தற்பொழுது கள்ளுத் தவறணைகளில் போத்தல் கள்ளு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மதுப் பிரியர்கள் போத்தலில் அடைக்கப்பட்டகள்ளிலும்பார்க்கச்சொரி கள்ளை விரும்புவதினால் அந்தக் கள்ளை எதிர்பார்த்து தவறணையில் காத்திருக்கின்றார்கள். (த-115)

## ஐஸ்கிறீம் தொழிலாளர் பாதிப்பு குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட 58 ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்களைச் சேர்ந்த பெருமளவு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.வணிகர் கழகத்தில் பி.ப. 3 மணிக்குக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாழ். வணிகர் கழகத் தலைவரினால் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கலந்துரையாடல்கள்

தென்மராட்சி, ஒக். 25

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அபிவிருத்தித்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான கலந்துரையாடல்களை மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன் நடத்தி வருகின்றார்.

இதன் பிரகாரம் கடந்த 21ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் ஆகிய வற்றின் தேவைகள் தொடர்பாக ஆராய் வதற்கான கலந்துரையாடல் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், முன்பள்ளிகளின் ஆசிரியைகள், அபிவிருத் திச் சபையினர் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாகாண சபை உறுப்பினர் அஸ்வின், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்களான அ.பாலமயூரன், த.சுதர்சன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.தனுசஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சமகால அரசியல் நிலைபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரை நிகழ்த்தினார். தென்மராட்சிப் பிரதேசத்தில் 92 முன்பள்ளிகள், மற்றும் 56 பாடசாலைகள் இயங்குவதால் அவற்றின் தேவைகள் அதிகமாக உள்ளதாகவும் பன்முகப்படுத்தப் பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் முன் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## 34 குடும்பங்களுக்கு கூரைத் தகரங்கள்

அச்சுவேலி, ஒக்.25

வலி.கிழக்கைச் சேர்ந்த 34 குடும்பங்களுக்கு கடந்த வியாழக்கிழமை ஆவரங்காலில் வைத்துக் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 12 தகரங்கள் வீதம் வழங்கப்பட்டன. 8 அடி நீளம் கொண்ட இந்தக் கூரைத் தகரங்களை அவர்கள் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்படக்கூடிய மேலதிக செலவைக் கருத்தில் கொண்டு வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதியும் இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதிக்கு மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட பிரயோக அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டே இந்தக் கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டன.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஓலைக் கொட்டில்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு கூரை அமைப்பதற்கு வசதியாக 34 குடும்பங்களுக்கு இந்தக் கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டன. (த-11)

## குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஒக்.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் வேள்ட்விஷன் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறுமென அறிவிக்கப் பட் டுள்ளது. (த-9)

# 24 மணி நேரமும் நீர் பாயும் அதிசயம்



மன்னார், ஒக். 25
வங்காலையூடாக நானாட்டான் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள பாலம் புனரமைப்பதற்காகத் தோண்டப்பட்ட குழியில் இருந்து தொடர்ச்சியாக நீர் பாய்ந்துக் கொண்டிருக்கும் அதிசயத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். குறித்த பகுதியில் உள்ள வீதி மற்றும் பாலம் சேதமடைந்துள்ளதால் அதனைப் புனரமைப்புச் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. குறித்த வீதிக்கு அருகாமையில் பரிசோதனைக்காகப் பள்ளம் தோண்டிய போது தொடர்ச்சியாக நீர் பாய ஆரம்பித்தது. நிலத்தடி நீரே ஊற்றாக 24 மணி நேரமும் பாய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை மாலை குறித்த பகுதிக்குச் சென்ற வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் குறித்த இடத்தில் நீர் பாய்ந்து கொண்டிருப்பதை பார்வையிட்டதோடு பாய்ந்து கொண்டுள்ள நீரையும் சுவைத்துப் பார்த்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த அவர்,

குறித்த நீர் 24 மணி நேரமும் பாய்ந்து கொண்டிருக்கின்றது. குடிப்பதற்குச் சுவையாக உள்ளது. இந்த நீரைச் சுத்தம் செய்து மக்களின் பாவனைக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அருகில் கடல் இருக்கின்றபோதும் நீரில் எந்தவித உவர்ப்புத் தன்மையும் இல்லை. நிலத்தடி நீரைப் பாதுகாக்கவேண்டும். வங்காலை மக்களும், அதனை சூழ்ந்துள்ள கிராம மக்களும் குறித்த நீரை பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (த-56)

# தற்காலிக வீடுகள் அமைக்க முதற் கட்டக் கொடுப்பனவு

முள்ளிக்குளம் மக்களுக்கு



மன்னார், ஒக். 25
மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்டுப் பின்னர் மீள் குடியேறி எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி காட்டுப் பகுதியினுள் வாழ்ந்து வரும் மக்களுக்கு வடக்கு மாகாண சபை அவசர தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் 82 தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதற் கட்டக் கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா பணம் வழங்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை முள்ளிக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது. இதன் போது வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினார்.

இதன்போது மக்கள் தாம் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

குறிப்பாக வீதி, மலசலகூடம் இன்மை மற்றும் விஷப் பாம்புகளின் நடமாட்டம், இதனால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் தெரியப்படுத்தினர். முள்ளிக்குளம் கிராமத்துக்கு மின்சாரம் இல்லாமையினால் மக்கள் இரவு நேரங்களில் வீட்டை விட்டு வெளியில் வர அஞ்சுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (த-56)

# 26,319 மெற்றிக் தொன் நெல் வவுனியாவில் உற்பத்தி

## 2016 இல் அது பன்மடங்கு அதிகரிக்கும்

வவுனியா, ஒக். 25
வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு 26 ஆயிரத்து 319 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 88 ஆயிரத்து 267 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வவுனியா மாவட்ட செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு நெல் சாகுபடி 13 ஆயிரத்து 272 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்பட்டு 47 ஆயிரத்து 334 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 126 ஹெக்ரெயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 26 ஆயிரத்து 319 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

> “எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 16 ஹெக்ரெயரில் 88 ஆயிரத்து 267 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இது தேசிய உற்பத்தியில் 1.8 சதவீதம் பங்களிப்பை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 16 ஹெக்ரெயரில் 88 ஆயிரத்து 267 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும். இது தேசிய உற்பத்தியில் 1.8 சதவீதம் பங்களிப்பை செய்யும் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஏனைய சாகுபடிகள் 2016 ஆம் ஆண்டு 11 ஆயிரம் ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்பட்டு 36 ஆயிரத்து 860 மெற்றிக் தொன் உற் பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு மரக்கறி ஆயிரத்து 101 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்பட்டு 17 ஆயிரத்து 959 மெற்றிக் தொன் அறுவடை செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு 746 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்பட்டு 12 ஆயிரத்து 690 மெற்றிக் தொன் அறுவடை செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு ஆயிரத்து 800 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்பட்டு 27 ஆயிரம் மெற்றிக் தொன் அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)



தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற் கொண்டு கொழும்பு சென்றவேளை அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர். பாடசாலையின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை மாணவிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர். மாணவியொருவர் ஜனாதிபதியின் உருவப்படத்தை வரைந்து கையளித்தமையைப் பாராட்டி மடிக்கணினி ஒன்றைப் பாடசாலை அதிபர் எஸ்.பவேந்திரனிடம் ஜனாதிபதி வழங்கினார். (த-421)

# மீண்டும் நாற்றமெடுக்கும் நந்திக்கடல்

முல்லைத்தீவு, ஒக். 25
வட்டுவாகல் நந்திக்கடல் பகுதியில் தொடர்ந்தும் இறந்த மீன்கள் கரையொதுங்கி வருகின்றன. இந்த மாதம் இரண்டாம் திகதி முதல் இரு வாரங்களாக கரையொதுங் கிய இறந்த மீன்களால் ஏற்பட்ட துர்நாற்றம் காரணமாக அங்கு மீன்பிடித் தடை போடப்பட்டிருந்தது.

எனினும் தொடர்ந்தும் மீன்கள் இறப்பதால் இந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்குகின்றனர்.

இறந்த மீன்களை இரணுவத்தினருடன் இணைந்து வட்டுவாகல் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அகற்றி வருகின்றனர்.

சிலாப்பி, கெளிறு, மணலை, மன்னா போன்ற மீனினங்களே இறந்து கரையொதுங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-433)

# கிளிநொச்சி பொதுச் சந்தையில் வர்த்தகர்கள் மழையால் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக். 25
கிளிநொச்சி பொதுச் சந்தையின் தற்காலிகக் கடைகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சுமார் 162 வர்த்தகர்கள் தற்போது பெய்து வரும் மழையினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையில் மரக்கறி மற்றும் மீன் விற்பனைத் தொகுதிகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளபோதும் ஏனைய கடைத் தொகுதிகள் தற்காலிக தொகுதிகளாகவே அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சந்தைப் பகுதியில் சுமார் 162 இற்கும் மேற்பட்ட புடைவை மற்றும் அழகு சாதனப்பொருள் வியாபாரிகள் தற்காலிகக் கொட்டகைகளில் வியாபாரம் செய்கின்றனர். குறித்த கடைகள் சேதமடைந்து காணப்படுவதனால் தற்போது பெய்து வரும் மழையினால் வர்த்தகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் குறித்த கடைகள் பாதுகாப்பின்மையால் இரு தடவைகளுக்கு மேல் உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனவும் வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையிடம் கேட்டபோது, கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாமையினால் அதனை அமைக்க முடியவில்லை. புதிய வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன்படி கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தனர். (த-55)

# கடந்த ஆறு வருடத்தில் மன்னாருக்கு 62 ஆயிரத்து 824 மில்லியன் ஒதுக்கீடு


பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு வருட காலத்தில் பல்வேறு துறைகளினூடான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமாக 62 ஆயிரத்து 824.42 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை பல்வேறு துறைகளுக் கும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. துறைசார் ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்த நிதி ஒதுக்கீடுகள் மன்னார் மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 646.77 மில்லியனும், 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 649.31 மில்லியனும், 2011 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 207.74 மில்லியனும், 2012 ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 589.88 மில்லியனும், 2013 ஆம் ஆண்டு 22 ஆயிரத்து 316.43 மில்லியனும், 2014 ஆம் ஆண்டு 22 ஆயிரத்து 414.29 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

துறைசார் ரீதியாக விவசாயத் துறைக்கு இதுவரை 3 ஆயிரத்து 443.79 மில்லியன் ரூபாவும், தொழில் மற்றும் சுற்றுலாத்துறைக்கு 187.4 மில்லியன் ரூபாவும், மனிதாபிமான குடியேற்றத்துக்கு 6ஆயிரத்து 800.11 மில்லியன் ரூபாவும், பொருளாதார உள் கட்டுமானத்துக்கு ஆயிரத்து 829.601 மில்லியனும், போக்குவரத்துக்கு 46 ஆயிரத்து 606.98 மில்லியனும், சமூக உட்கட்டுமானத்துக்கு 3 ஆயிரத்து 343.99 மில்லியனும், நிர்வாக நடைமுறைகளுக்காக 612.51 மில்லியன் ரூபாவுமாக அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (த-5)




நன்றி: டெய்லிமிரர்

## முக்கிய முடிவுகள் சில வாரங்களிலாம் அத்துரேலிய ரத்ன தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.25
ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் பயணம் தொடர்பில் அடுத்த சில வாரங்களுக்குள் முக்கிய தீர்மானங்கள் சில எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலியே ரத்ன தேரர்.



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதே தன்னுடையதும் ,கட்சியினதும் நிலைப்பாடு எனவும் அரசே தற்போது அந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடானது கல்லில் செதுக்கப்பட்ட கோடு போன்று எப்போதும் மாறாது. அரசிடம் கட்சி முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் அரசு தீர்மானங்கள் எதனையும் எடுக்காது போனால், அரசில் இருப்பது குறித்து தீர்மானிக்கப்படும். ஆனால் அப்படியான தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அரசில் இருந்து விலகுவதா அல்லது தொடர்ந்தும் இருப்பதா என்பதல்ல இங்கு பிரச்சினை. அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்து கொள்ள வேண்டும் என்பதே கட்சியின் ஒரே நோக்கம். ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு அவரிடம் இருந்து இதுவரை எந்த பதில்களும் கிடைக்கவில்லை"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## எஸ்.பிக்கு கட்சிக்குள் வலுக்கிறதாம் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.25
அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு மத்திய மாகாண சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு தோன்றியுள் ளது.

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவராக தற்போது உருவெடுத்துள்ளார். இந்த நிலையில் அவர் ஆளுங்கட்சியை விட ஐக்கிய தேசியக் கட்சியின் மீதே அதிக பாசம் கொண்டுள்ளார் என்று மத்திய மாகாண சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

அமைச்சர் மூலமாக வேலை வாய்ப்புப் பெறும் பலரும் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர் களாக இருப்பதாக அவர்கள் ஆதார



பூர்வமாக குற்றச் சாட்டுக்களை அடுக்கியுள் ளனர். மேலும் கட்சியில் ஏனையவர்களை மதிக்காது அமைச்சரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் அமைச்சர் திசாநாயக்கவுக்கு எதிராக மத்திய மாகாண அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து போர்க்கொடி உயர்த்தத் தீர்மானித்துள்ளனர். அதன் முதற்கட்டமாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபாலவிடம் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வந்துள்ள நிலையில் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் கண்டுகொள்ளாமல் ஒதுக்கப்படும் சாத்தியம் இருப்பதாகவும் ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# இலங்கையில் தற்போது இரு விஸா நடைமுறை

## நாட்டுக்கு வர ஒன்று; வடக்குக்குச் செல்ல ஒன்று சாடுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஒக்.25
வெளிநாட்டவர்கள் நாட்டுக்கு வருவதாயின் இலங்கைக் கும் வடக்குக்குமென இரண்டு நுழைவிசைவுகளைப் பெற வேண்டியுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் மோசடி செய்வதற்கே வடக்குக்கு வெளிநாட்டவர்கள் செல்வதற்கான தடையை அரசு பிறப்பித்துள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க.ட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

"ஐரோப்பிய குடும்பத்துக்கும் இலங்கைக்கும் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஐரோப்பிய நீதி மன்ற வழக்குத் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. எனவே அரசு தனக்கான பொறுப்புக்களை தட்டிக்கழிக்கின்றது"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2006ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் விடுதலை புலிகளை பயங்கரவாத குழுவாக பெயரிட்டது. அதற்கு எதிராக புலம்பெயர் தமிழர் அமைப்பு 2011ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தது. எனினும் குறித்த வழக்கை இலங்கை அரசு தட்டிக்கழித்தது. இது தொடர்பில் அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்திருந்தால் இந்தத் தீர்ப்பை பெற வேண்டியதில்லை. சர்வதேச விசாரணைகளை நிராகரித்ததைப் போன்று இந்த வழக்கினையும் அரசாங்கம் தட்டிக்கழித்தது."- என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"நாட்டின் வெளிநாட்டு தூதரக சேவை சீரழிக்கப்பட்டுள்ளது. தகைமையற்றோரை அரசு பதவிக்கு அமர்த்துகிறது. வெளிநாட்டு சேவையில் சண்டியர்களே உள்ளனர். இலங்கை அரச சண்டியர்களின் செயலை நியூயோர்க்கில் வைத்து முழு உலகமுமே பார்த்தது."- என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

"இலங்கை அரசு அரசியல் அமைப்பில் 13 மற்றும் 17 ஆம் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலாக வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை. தற்போது இலங்கை மீது ஐரோப்பிய குடும்பத்துக்கு நம்பிக்கையில்லை. ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற வழக்கு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அரசு தனக்கான பொறுப்புக்கள் முழுவதனையும் தட்டிக்கழித்துள்ளது."- என்றும் அவர் தெரிவித்தார்.

> "நாட்டின் வெளிநாட்டு தூதரக சேவை சீரழிக்கப்பட்டுள்ளது. தகைமையற்றோரை அரசு பதவிக்கு அமர்த்துகிறது. வெளிநாட்டு சேவையில் சண்டியர்களே உள்ளனர்."



வெளிநாட்டவர்களுக்கான வடக்குப் பயணத் தடை குறித்துக் குறிப்பிட்ட கிரியெல்ல, "வெளிநாட்டவர்கள் வடக்கிற்கு செல்ல அரசு தடை விதித்துள்ளது. அதனால் அண்மைக் காலமாக பலர் திருப்பியனுப்பப்பட்டனர். ஜனாதிபதி தேர்தலில் 2005 ஆம் ஆண்டை போன்று வடக்கு வாக்குகளை மோசடி செய்வதற்கே இந்த தடையை அரசு விதித்துள்ளது. சர்வதேச கண்காணிப்பாளர்களும் ஊடகவியலாளர்களும் வடக்குக்கு வருவார்கள் என்ற அச்சத்திலே இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது வெளிநாட்டவர்கள் இலங்கை வருவதாயின் இலங்கைக்கும் வடக்கிற்குமான இரண்டு நுழைவிசைவுகளைப் பெற வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. வின் வெற்றியை மாற்ற முடியாது"- என்று தெரிவித்தார். (ற)

## ராஜபக்ஷ பெயரில் தில்லுமுல்லு: பொலிஸிடம் 273 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.25
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரைப் பயன்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைப் பயன்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பில் 273 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களின் புகைப்படத்துடன் தமது புகைப்படத்தை இணைத்துக் கொள்ளல், ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் செல்லிடப்பேசியில் உரையாடுவது போன்றும் பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

ஜனாதிபதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள், குற்றச் செயல்களை தடுக்க விசேடப் பொலிஸ் பிரிவொன்று பௌத்தாலோக்க மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற)



ரஷ்ய ஏவுகணைக் கப்பல் மொஸ்காவா நல்லெண்ண அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். இலங்கைக் கடற்படையினரால் பாரம்பரிய முறைமையில் இக்கப்பலுக்கு வர வேற்பு நிகழ்வு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் 187 மீற்றர் நீளத்தினையும், 9,270 தொன் கொள்ளளவினையும், 514 கடற்படையினரையும் கொண்டுள்ளது. இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ரஷ்யன் கூட்டமைப்பின் தூதுவரும் முழு செயற்பாட்டினையும் தலைமைதாங்குபவருமான அலெக்ஸாண்டர் ஏ.கார்சாவா மற்றும் தலைமை அதிகாரிகளும் கப்பல் வருகையுடன் இணைந்து இலங்கை வந்துள்ளார்.

## சுதந்திரக் கட்சியுடைய கொள்கையே பிடிக்கும்

### அர்ஜுண ரணதுங்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.25
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளே என்றைக்கும் தனக்குப் பிடிக்கும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுண ரணதுங்க. சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுண, ஐ.தே.க. வுக்கு கட்சி மாறப் போகின்றார் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"பொதுமக்களுக்கு நல்லது செய்யும் ஒருவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அதன் போது கட்சி வேறுபாடுகள் பார்க்கக் கூடாது. என்னைப் பொறுத்தவரை என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள்தான் பிடித்தமானவை . இடதுசாரிக் கட்சிகளின் அரசியலும் பிடித்தமான விடமாகும்"- என்று தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு கட்சி மாறப் போவதை தனது ஆதரவாளர்களிடமும் பகிர்ந்து கொண்டிருந்த அர்ஜுண, தற்போது திடீர் 'பல்டி' அடித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ற)

# நொக்கியாவை நீக்க முடிவு



தங்களது லூமியா கைத்தொலைபேசிகளில் இருக்கும் நொக்கியா என்ற பெயரை நீக்க மைக்குரோ சொப்ட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

நொக்கியாவின் பேஸ்புக் பக்கத்தில் இந்தத் தகவல் பகிரப்பட்டுள்ளது. ஆனாலும், மைக்குரோ சொப்ட் நிறுவனத்திடமிருந்து இது குறித்த தகவல் ஏதும் வெளியாகவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு. 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நொக்கியாவை மைக்குரோ சொப்ட் வாங்கியது. ஆனால் நொக்கியா என்ற பெயரைத் தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

நொக்கியா தொழில்நுட்ப நிறுவனமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நொக்கியா என்ற பெயரையும் அந்நிறுவன உரிமையாளர்களே தக்கவைத்துள்ளனர். அந்தப் பெயரை பயன்படுத்துவதற்கான உரிமம் மைக்குரோ சொப்டிடம் உள்ளது.

புதிதாக பதவியேற்றுள்ள மைக்குரோ சொப்டின் தலைமை அதிகாரி சத்யா நாதெள:ள. மைக்குரோ சொப்டின் தொலைபேசி தயாரிப்பை பெரியளவில் கட்டுப்படுத்தியுள்ளார். இதனால் சமீபத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்டது. இதில் 18 ஆயிரம் மைக்குரோ சொப்ட் ஊழியர்களில் 12 ஆயிரத்து 500 ஊழியர்கள் தொலைபேசி தயாரிப்பில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீச்சல் குளத்தில் புடவை கட்டியா நடிக்க முடியும்



என்னுடைய முதல் பத்திரிகையாளர் சந்திப்பில், "நீங்கள் நீச்சல் உடையில்நடிப்பீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நான் வெகுளித்தனமாக, நீச்சல் குளத்தில் புடவையிலா நடிக்க முடியும்? என்று திருப்பிக் கேட்டதைத் தவறாக புரிந்து கொண்டு என்னைப் பற்றித் தவறாகவே எழுதினார்கள் என்று ஸ்ருதிஹாசன் தெரிவித்துள்ளார்.

ஒரு நடிகரோடு தொடர்ந்து இரண்டு படங்களில் நடித்தேன். படப்பிடிப்பில் அவருடன் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து, "நீங்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்யப் போறீங்களாமே" என்று கேட்டார்கள். எனக்கு அதிர்ச்சி! சேர்ந்து இருப்பது பாதுகாப்பு என்று சொல்லுவார்கள். ஆனால், ஒரு பெண்தனிமையில் இருப்பதுதான் பாதுகாப்பு என்று ஆகி விட்டது.

எனவே, கதாநாயகர்களோடு பேசாமல் இருப்பதும், ஒரு இடைவெளியை உருவாக்கிக் கொள்வதும்தான் இங்கே பாதுகாப்பு என்று கருதி ஒதுங்கி இப்போது நான்தனிமையில் இருக்கிறேன் என்று கவலையுடன் தெரிவிக்கின்றார் ஸ்ருதி.




# இவர்தான் ஆண்களில் அழகாம் !

ஸ்பெயின் நாட்டை சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் உலகின் ஆண் அழகன் என்ற பட்டத்தை பெற்றுள்ளார்.

கடந்த மாதம் பெரு நாட்டில் நடந்த பிரபஞ்ச ஆணழகன் போட்டியில் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த ரூபன் லோபஸ் என்ற 22 வயதான நபர் பங்கேற்று முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ஸ்பெயின் இராணுவத்தில் பணியாற்றி வரும் இவர் தன்னுடன் போட்டியிட்ட 40 சக அழகர்களை தோற்கடித்து பிரபஞ்சத்தின் ஆண் அழகன் என



மகுடத்தை வெற்றி கொண்டுள்ளார். இது குறித்து இவர் கூறுகையில், இந்த பட்டத்தை பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது என்றும் தொடர்ந்து இராணுவத்திலேயே பணியாற்றுவேன் எனவும் தெரிவித்துள்ளார். உடற்கல்வி படிப்பை படித்துவரும் இவர், நடிகராகவும் திகழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. கடந்தாண்டு ஸ்பெயினில் நடந்த அழகுப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதா மீண்டும் முதல்வராவார்



முன்னாள் தமிழக முதல்வர் சகல தடைகளையும் தகர்த்தெறிந்து மீண்டும், முதல்வராகப் பதவியேற்பார் என்று, சின்னத்திரை நடிகர் சங்கம் தெரிவித்துள்ளது.

சின்னத்திரை நடிகர் சங்கத் தேர்தல் அண்மையில் நடந்தது. இதில் நளினி தலைமையிலான அணி வெற்றி பெற்றது. சங்கத் தலைவர் நளினி, பொதுச் செயலாளர் பூ விலங்கு மோகன், பொருளாளர் தினகரன் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மக்களின் நலன் காக்கும் தங்கத் தலைவியாம் மக்களின் முதல்வர் அம்மா சோதனைகளை கடந்து தமிழகம் திரும்பியிருப்பது சின்ன்த்திரை கலைஞர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியே. அவர்கள் அனைத்து தடைகளையும் வென்றெடுத்து மீண்டும் தமிழக முதல்வராக ஆட்சிக் கட்டிலில் அமர்வது திண்ணம்.

பெற்ற தாய்க்கு மேலாக தன்னை நாடி வரும் கோடான கோடி தமிழ் இதயங்களின் தேவைகளை கொடுத்து, தமிழ் மக்களின் துயரங்களை துடைக்கும் புரட்சித்தலைவிக்கு கசந்த காலம் வசந்த காலமாக மாற சின்னத்திரை நடிகர் சங்கம் பிரார்த்தனை செய்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கடி ஜோக்ஸ்



நண்பர் 1: டேய் நாளைக்கு நான் சினிமாக்கு போறேன் நீயும் வாறியாடா ?
நண்பர் 2: முடிஞ்சா வாறேன்டா.
நண்பர் 1: முடிஞ்சா பிறகு ஏண்டா வாராய்? படம் ஆரம்பிக்கும் போது வாடா
நண்பர் 2: ?????

காதலன் : உன் வீட்டுக்குப் போயிருந்தேன், இனிமேலும் எமது கல்யாணம் நடக்கும் என்று எனக்கு தோன்றவில்லை.
காதலி : என்னோட அப்பாவா பார்த்திங்களா?
காதலன் : இல்லை. உன் தங்கச்சியைப் பார்த்தேன் அதான் ...
காதலி : ????

அப்பா : பிள்ளையாடா நீ. எல்லாப் பாடத்திலும் பெயில். என்னை இனிமேல் அப்பா என்று கூப்பிடாதே
மகன் : சரி மச்சி.. சும்மா சீன் போடாமல் கையெழுத்து போடு மச்சி
அப்பா : ?????




இரத்தத்தில் ஹீமோ குளோபினை அதிகரிக்கவும், இரத்தத்தில் உள்ள விஷத் தன்மையை வெளியேற்றவும் அறுகம் புல் ஜீஸ் உதவுகிறது.

# விஷத்தை விரட்டி அடிக்கும் அறுகம்புல்

புல்வகையை சேர்ந்த சிறிய மூலிகையான அறுகம்புல்லில் பல்வேறு மருத்துவக் குணங்கள் அடங்கியுள்ளன. அறுகம்புல் வேர், இலை உள்பட அனைத்துப் பாகமும் மருத்துவ குணம் உடையவை. இதில் இருந்து பெறப்படும் ஒருவித ஆல்கலாய்ட்ஸ், வாக்ஸீனியா வைரஸ் என்ற நுண்ணுயிரியை அழிக்க வல்லது. சிறுநீர்ப்பை கல், நீர்க் கோவை என்ற உடல் வீக்கம், மூக்கில் இரத்தக்கசிவு, குழந்தைகளுக்கான நாள்பட்ட சளித்தொல்லை, தடிமன், வயிற்றுப்போக்கு, கண் பார்வை கோளாறுகள், மூளையில் ஏற்படும் இரத்தக் கசிவு போன்ற நோய்களுக்கு இதன் வேர் மிகவும் சிறந்ததாகும். உடல் எடை குறைய, கொலஸ்ரோல் குறைய, நரம்புத் தளர்ச்சி நீங்க, இரத்த புற்றுநோய் குணமடைய, இருமல், வயிற்று வலி, இரத்தச் சோகை, மூட்டுவலி, இதயக் கோளாறு, தோல் வியாதிகள் போன்ற எல்லா நோய்களுக்கும் அறும்புல் ஒரு சிறந்த மருந்தாகும். இரத்தத்தில் ஹீமோகுளோபின் அதிகரிக்கவும், இரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றவும் அருகம்புல் ஜீஸ் உதவுகிறது.

தேவையான அளவு அறுகம்புல் சேகரித்து சிறிதளவு மஞ்சள் சேர்த்து பசையாக அரைத்து உடலில் தேய்க்க வேண்டும். ஒரு மணி நேரம் ஊறிய பின்னர் குளிக்க வேண்டும். உடல் அரிப்பு குணமாக இதனைத் தொடர்ந்து செய்து வரலாம்.



பொரித்த முட்டையை விட அரை வேக்காடு முட்டையை உட்கொள்ளுதலே நன்மை அளிக்கும். அதற்குக் காரணம் அதிலுள்ள அதி முக்கிய புரதம், ரிபோஃப்ளேவின் மற்றும் செலீனியம்.

முட்டை அதிகளவில் புரதத்தைக் கொண்டுள்ளது என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் கிடையாது. அதே போல் அதிகமாக சமைப் பதால் ஊட்டச்சத்து அதற்கேற்ப நீங்கிவிடும். அதனால் முட்டையை அரை வேக்காட்டில் உண்ணுவது சிறந்த வழியாகும். முட்டையின் மஞ்சள் கருவை அப்படியே பச்சையாக உட்கொண்டால் அதிக பயன் அளிப்பதால் சிலர் அதை விரும்புவார்கள்.

ஆனாலும் கூட உணவு நச்சு அல் லது சால்மோனெல்லா என்ற பாக் டீரியாவால் உடல் நலம் பாதிப் படையாமல் இருக்க முட்டையை அரை வேக்காட்டுடன் சமைத்துக் கொள்வது நல்லது.

மேலும் அதனை போதுமான அளவில் சமைத்து உட்கொண்டால், அவை போதிய ஊட்டச்சத்துக்களை உங்களுக்கு வழங்கும்.

அதற்கு அதனை சிறிது நேரத்துக்கு வேக வைத்தாலே போதும், அடம் பிடிக் கும் பக்ரீறியாக்கள் அழிந்து விடும்.

அதிக அளவிலான புரதத்தை கொண்டுள்ள முட்டை கலோரிகளை அதிகரிப்பதில்லை. பொரித்த முட்டை போன்ற இதர முட்டை வகைகளுடன் ஒப்பிடுகையில் அரை வேக்காடு முட்டையில் கலோரிகளின் அளவு குறைவே. அரை வேக்காடு முட்டையில் 78 கலோரிகளும், 5.3 கிராம் கொழுப் புகளும் மட்டுமே அடங்கியுள்ளது. அரை வேக்காடு முட்டை இந்த அதிமுக்கிய ஊட்டச்சத்துக்களை அழிக்காமல் பார்த்துக் கொள் ளும். அரை வேக்காடு முட்டை யில் வெள்ளை கரு நன்றாக வெந்திருக்கும். ஆனால் மஞ்சள் கருவோ அரை வேக்காட்டுடன் வழிந்து ஓடுகிற நிலையில் இருக் கும். நலிவாக நோய் எதிர்ப்புச் சக்தியை கொண்டவர்களுக்கு அரை வேக்காடு முட்டை பரிந்துரைக்கப் படுவதில்லை.

அதனால் வலுவற்ற நோய் எதிர்ப்புச் சக்தியை கொண்டுள்ள கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இதனைத் தவிர்க்க வேண்டும்.

வலுவான உடல்நலத்தை கொண்டுள்ளவர்களுக்குத் தான் அரை வேக்காடு முட்டை ஆரோக்கி யத்தை அளிக்கும். பொரித்த முட்டையுடன் ஒப்பிடுகையில் கண்டிப் பாக அரை வேக்காடு முட்டை ஆரோக்கியமானதே.



# முதுமையைத் தடுக்கும் கொய்யாப்பழம்

நான்கு அப்பிள் சாப்பிட்டால் கிடைக்கும் நன்மையானது, ஒரே ஒரு கொய்யாப்பழம் சாப்பிடுவதால் கிடைக்கும் என்பது தெரியுமா? மழைகாலங்களில் கிடைக்கும் மிகவும் விலை மலிவான பழங்களில் ஒன்று தான் கொய்யாப்பழம். இதில் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.

மழைக் காலங்களில் எளிதில் நோய்த் தொற்றிவிடும் என்பதால் தினமும் ஒரு கொய்யாப்பழத்தை சாப்பிடுவது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். இதில் விற்றமீன் பி, சி, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து மற்றும் தாது உப்புகளும் அடங்கியுள்ளன.

மலச்சிக்கலால் அவதிப்படும் நபர்கள் கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால், அந்தப் பிரச்சினையில் இருந்து மீளலாம். கொய்யாப் பழத்தை நறுக்கிச் சாப்பிடுவதை விட அப்படியே சாப்பிடுவதால் பற்கள், ஈறுகள் வலுவடையும்.

இரத்தச்சோகை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தால், நல்ல பலன் கிடைக்கும். இந்தப் பழத்தில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ளதால், இரத்த அழுத்தத்தை சீராக வைத் துக் கொள்ளலாம். கொய்யாப்பழத்தை தோல் நீக்கி சாப்பிடுவதை விட, தோலுடன் அப்படியே சாப்பிட வேண்டும், இது முகத் துக்கு பொலிவைத் தருவதுடன் தோல் வறட்சியையும் நீக்கும்.


அமுதவிழா வாழ்த்துக்கள்



அகவை எண்பதில் கால் பதிக்கும் எங்கள் தெய்வங்கள்
கதிரேவேலு பொன்னுச்சாமி, பொன்னுச்சாமி இராசம்மா
தம்பதியினரை பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

இல்லறத்தில் ஒளி வீசும்
நல்லறத்தின் குல விளக்குகளே!
சொல்லறத்தை எமக்கு ஊட்டி
பல்கலை பயிற்றுவித்தீரே

நீவிர் பெற்ற பிள்ளைகளை
சீர் தூக்கி ஏழ்மையிலும்
பார்போற்ற வாழவென
நேர்வழி வகுத்து நின்றீர்

வைத்தியராய், நல்லாசிரியராய்
மாண்புறு அதிபருமாய் எமை
மேதினியில் ஒளிர வைத்த அழகிய
தருவின் ஆணிவேர் நீவிர்.

அகவை எண்பதில்
காலடி பதிக்கையில்
உவகை கொள்ளுது எமதுளம்
உமது பிள்ளைகள் நாம்

பல்லாண்டு வாழ்கவென
எல்லாம் வல்ல இறை ஆசி
வேண்டி நிற்கின்றோம்
பல்லாண்டு வாழ்க! வாழ்க!

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பல்லவராயன்கட்டு, முழுங்காவில் பூநகரி.

அமுத விழாவினைக் குதூகலமாகக் கொண்டாடும் கதிரவேலு பொன்னுச்சாமி குடும்பத்தினர், முத்தான 50 மூத்த தமது ஆருயிர் நண்பர்களைக் கௌரவித்து வாழ்த்துகின்ற நிகழ்வும் முழங்காவிலில் இடம்பெறுகின்றது.

(C/17217)(5.6.3)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கனடாவில் தாக்குதல்

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஆயுததாரியும், கனேடிய பாதுகாப்புப் படைச்சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்; மூவர் காயமடைந்தனர். பயங்கரவாத அச்சுறுத்தல் மட்டத்தை அடுத்த கட்டத்துக்கு அதிகரித்திருப்பதாக கனடா அறிவித்து ஒரு சில மணிநேரத் தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதால் ஸ்ரீபன் ஹாார்பர் தலைமையிலான கனேடிய அரசுக்குத் தீவிரவாதிகள் விடுத்த சவாலாக இத்தாக்குதல் குறித்து சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர். கனேடிய நாடாளுமன்ற வளாகத்துக்குச் சமீபமாகவுள்ள போர் நினை வாலயத்துக்கருகில் காவலிலிருந்த படைச்சிப்பாயைச் சுட்டுக்கொன்ற ஆயுததாரி நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைய முற்பட்டபோது அங்கு பாதுகாப்பிலிருந்த பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமைக்குப் பின்னர் கனடாவில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும். ஆதலால், தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு கனடா கூட விதிவிலக்கு அல்ல என்பது நிரூபணமாகியுள்ளது. கடந்த திங்கட்கிழமை கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற சம்பவத்தில், சமீபத்தில் முஸ்லிமாக மாறியதாகக் கூறப்படும் ஒருவர் செலுத்திச் சென்ற வாகனம் மோதி கனேடிய இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இதன் பரபரப்பு அடங்க முன்னர் இரண்டாவது சம்பவம் இடம்பெற்றுள்ளதால், கனடா தனது பாதுகாப்பை உடனடியாகப் பலப்படுத்தவேண்டிய அவசர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆயுததாரி இனம் காணப்படவில்லை. எனினும், அவர் கனடாவில் பிறந்தவர் என்றும் முஸ்லிமாக மதமாற்றம் பெற்றவர் என்றும் கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேசமயம், ஈராக்கிலும், சிரியாவிலும் கணிசமான அளவு பகுதிகளைக் கைப்பற்றி இஸ்லாமிய தேசம் என்ற பெயரில் நாடு ஒன்றைப் பிரகடனம் செய்துள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளும் கனேடியத் தாக்குதல்களின் பின்னணியில் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா நடத்தும் வான் தாக்குதலில் வளைகுடா நாடுகளும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மட்டுமே இணைந்துள்ளன. இப்படியான நிலையில், கனேடிய நாடாளுமன்றம் இம்மாதம் 7ஆம் திகதி நிறைவேற்றிய தீர்மானத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு எதிராக அமெரிக்கா உருவாக்கிய சர்வதேச கூட்டணியில் கனடாவையும் இணைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளில் கனடாவும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தானில் கனடா தனது படைச்சிப்பாய்களில் 158 பேரை இதுவரை இழந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான அமெரிக் காவின் கூட்டு நடவடிக்கையிலும், ஈராக்கில் தலிபான்களின் கூட்டாளிகளான ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு எதிரான அமெரிக்காவின் கூட்டு நடவடிக்கைகளிலும் கனடா இணைந்துள்ளது. அதனால் இஸ்லாமிய தீவிர வாதிகளின் பார்வை கனடா பக்கம் திரும்பியிருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. கனடாவில் புதனன்று சுட்டுக் கொல்லப்பட்ட ஆயுததாரி கனேடியராக இருந்தாலும் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் அவருக்குத் தொடர்பு இருந்ததற்கான ஆதாரங்கள் குறித்து கனேடியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கனேடியத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் தான் நடத்தினார்கள் என்றால் மேற்கு நாடுகளின் எந்த வொரு நகரையும் தாக்கும் பலத்தை அவர்கள் பெற்று விட்டார்கள் என்பது உறுதியாகிறது. மரபுவழி யுத்தத்தில் இருந்து கெரில்லா யுத்தத்துக்குச் செல்லும் அளவுக்கு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது சிரியாவில் அஸாத்தின் இராணுவம். இது ஐ.எஸ். ஐ.எஸ். போராளிகளின் அடுத்த இலக்காகலாம். ஆகவே, உலக நாடுகள், ஹிட்லருக்கு எதிரான யுத்தம் போன்று போராடவேண்டிய நேரம் வந்துவிட்டது. உலகில் எந்தவொரு நாடும் பாதுகாப்பானது அல்ல என்பதை கனேடியத் தாக்குதல் மூலம் தீவிரவாதிகள் மீண்டும் நிரூபித்துள்ளனர். தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைவது அவசியமாகும்.

இருந்தபோதிலும் உரிமைகேட்கும் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்காக பயங்கரவாதத்தை முன்னிலைப்படுத்தும் இலங்கை போன்ற நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பில் உலக நாடுகள் அவதானமாக இருப்பதும் மிக அவசியமாகும்

# மஹிந்த சுதந்திரக் கட்சியை மீண்டும் மலரச் செய்வாரா?



சிங்கள மூலம் -மவ்பிம
தமிழில்-வீஎஸ்ரீ

1994ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் காமினி திஸநாயகா, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் குடும்பத்தினரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அவ்வேளை பிரேமதாசவின் அரசியல் வாழ்க்கையை காமினி திஸநாயகா பாழ்படுத்திவிட்டதாக பிரேமதாசவின் குடும்பத்தினர் அவர் மீது குற்றம் சாட்டினர். தாம் அவர்களது குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாக வும் அதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் காமினி திஸநாயகா தெரிவித்தார். அவ்விதம் அவர் நடந்து கொண்டது பிரேமதாச மீதான மதிப்பு மரியாதையினாலல்ல. தாம் ஐ.தே. கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டுமானால், கட்சிக்குள்ளும் நாட்டு மக்கள் மத்தியி லும் பிரேமதாசவுக்கிருந்த நற்பெயரை மீண்டும் நிலைநிறுத்த வேண்டியது அவசியமென அவர் உணர்ந்ததனாலேயே ஆகும்.

ரணில் விக்கிரமசிங்க தற்போது சஜித் பிரேமதாசவுக்கு ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வழங்கியிருப்பது, சஜித் மீது கொண்டுள்ள பாசத்தினாலல்ல. அது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளரான தாம் வெற்றியீட்டுவதற்கு பிரேமதாச தரப்பினருக்கு கட்சிக்குள் உரிய இடம் வழங்க வேண்டியது அவசியமென்பதை அவர் உணர்ந்ததனாலேயே ஆகும்.

ஜே.ஆர். ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்கும்வரை ஐ.தே.கட்சி சேனநாயகா குடும்ப பலத்திலேயே செயற்பட்டது. சேனநாயக குடும்பத்தினர் உயர் செல்வந்த வகுப்பினரையும் கிராமிய வறிய வகுப்பினரையும் ஒன்றிணைத்தே ஐ.தே.கட்சியை உருவாக்கினர். ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறிச் சென்ற பண்டாரநாயகா மத்தியதர வகுப்பினரின் ஆதரவுடனேயே சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

### ஜே.ஆரின் அரசியல் அணுகுமுறை

டட்லி சேனநாயகாவின் மறைவுக்குப் பின்னர் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்ற ஜே.ஆர்., பிரபுக்கள் வகுப்பைச் சேர்ந்தவரென பெயரெடுத்திருந்ததால் தம்மால் கிராமிய வறியவர்கள் தரப்பின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ள இயலுமா என ஐயமுற்றிருந்தார். இதனாலேயே ஜே.ஆர். ஐ.தே. கட்சிக்குள் பிரேமதாசவுக்கு முன்னிலை வழங்கி அவருக்கு பிரதமர் பதவியையும் வழங்கினார். ஆனால் பிரேமதாசவோ 1988ஆம் ஆண்டில் தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், பிரபு வர்க்கத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஜே.ஆரை ஓரம் கட்டியது மட்டுமன்றி, ஜே.ஆரின் நெருங்கிய ஆதரவாளர்களான லலித் அதுலத் முதலியையும் காமினி திஸநாயகாவையும் கூட புறம்தள்ளி வைத்துச் செயற்பட்டார்.

பிரேமதாசவின் படுகொலையை அடுத்து ஜனாதிபதிப் பதவியை ஏற்ற டி.பி.விஜேதுங்க உயர் பிரபு வர்க்கத்தைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கி, பிரேமதாசவின் ஆதரவாளர்களை கட்சியினின்றும் களை எடுப்பதில் ஆர்வம் காட்டினார்.

உண்மையில் ஐ.தே.கட்சியின் அத்திபாரமே கிராமிய வறிய தரப்பினரே. அந்த அத்திபாரத்தின் மீதே உயர் பிரபுக்கள் வர்க்கத்தினர் ஐ.தே.கட்சியைக் கட்டியெழுப்பினர். இன்று ரணில் நலிவு நிலை கண்டிருக்கும் ஐ.தே.கட்சிக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் நோக்கிலேயே சஜித் பிரேமதாசவுக்கு கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வழங்கியுள்ளார். அண்மைய ஊவா மாகாண சபைத் தேர்தலில் ரணிலின் இந்தப் புதிய உத்தி ஐ.தே.கட்சிக்குச் சாதக நிலையை ஏற்படுத்திக் கொடுத் துள்ளது. ஐ.தே.கட்சியின் இந்த எழுச்சி மஹிந்தவுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வைத்துள்ளது. ஐ.தே.கட்சிபோன்று சுதந்திரக் கட்சியையும் பலமடையச் செய்யவேண்டுமானால் பண்டார நாயகா குடும்பத் தரப்பினருக்கும் உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்பதை மஹிந்த நன்கறிவார். சுதந்திரக்கட்சியின் மேல் மட்ட மற்றும் கீழ் மட்ட ஆதரவாளர்கள் மத்தியில் பண்டாரநாயகா பரம்பரையினருக்கு இன்றும் தனியான மதிப்பும் மரியாதையும் உண்டு. பண்டாரநாயகா குடும்பத்தவர் மீதுள்ள மதிப்புக் காரணமாகவே, கட்சியின் தேர் தல் சின்னமான 'கை' சின்னம் மாறி, 'நாற்காலி' மற்றும் 'வெற்றிலை' சின் னங்கள் வந்தபோதும் அவற்றுக்கு அவர்கள் வாக்களித்தனர்.

மஹிந்த ஜனாதிபதிப் பதவியைப் பெற உதவியதும் பண்டாரநாயகா பரம்பரையினர் உருவாக்கிய சுதந்திரக் கட்சியே. சந்திரிகாவை கட்சித் தலைமைப் பதவியினின்றும் வெளியேற்றியமை, சந்திரிகாவின் ஆதரவாளர்களைப் புறமொதுக்கியமை, ஐ.தே.கட்சித் தரப்பினரைத் தமது தரப்புக்கு இழுத்துக் கொண்டமை போன்ற மஹிந்தவின் செயற் பாடுகள் குறித்து சுதந்திரக் கட்சியின் அபிமானிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். 2009ஆம் ஆண்டில் போரில் புலிகளைத் தோற்கடித்ததால் பண்டாரநாயகா பரம்பரை யினரை விட மஹிந்த சுதந்திரக் கட்சியின் அனுதாபிகளால் வீரதீரத் தலைவனாக கணிக்கப்பட்டார்.

இன்று மஹிந்தவின் போர் வெற்றி மக்கள் மத்தியில் பெரிய தொன்றாகக் கருதப்படவில்லை. போர் வெற்றியால் நீறு பூத் திருந்த அதிருப்தி என்ற நெருப்பு மீண்டும் தலை யெடுக்க ஆரம்பித்துள்ளது.

உண்மையில் சந்திரிகா, சுதந்திரக் கட்சி அனுதாபிக ளிடம் நல்லெண்ணத்துடனேயே நடந்து கொண்டி ருந்தார். மஹிந்தவோ ஐ.தே.கட்சியிலிருந்து அரசுடன் இணைந்து கொண்டவர்கள், ஹெல உறுமய மற்றும் விமல் வீர வன்ச வின் கட்சியினர் மீதே அக்கறை செலுத்திச் செயற்படுகிறார்.

### ரணில் இழைத்த தவறு

மஹிந்த இழைத்த இது போன்ற தவறையே 2001 ஆம் ஆண்டில் ரணிலும் இழைத்தார். நலிவு நிலை கண்டிருந்த ஐ.தே.கட்சியின் பின்னடைவை மூடி மறைக்க அந்த வேளையில் சந்திரிகா மீது சுதந்திரக் கட்சி அனுதாபிகள் மத்தியில் வியாபித்திருந்த அதிருப்தி அலையை, ரணில் பயன்படுத்திக் கொண்டார். கட்சிக்குள் பிரேமதாச தரப்பினரின் பலத்தை முடக்க, சந்திரிகாவின் அரசிலிருந்து வெளியேறி ஐ.தே. கட்சியுடன் இணைந்து கொண்ட எஸ்.பி.திஸாநாயக, ஜீ.எல்.பீரிஸ், பந்துல குணவர்த்தன போன்றோருக்கு ரணில் அமைச்சுப் பதவிகளை வழங்கினார். ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் பலர் அந்தத் தேர்தலில் வாக்களிப்பையே புறக் கணித்தனர்.

மஹிந்தவுக்கும் இதேநிலை ஏற்படுமா? என்பது குறித்து தற்போது உறுதியாக எதனையும் கூற இயலாதுள்ளது. ஆனால் 2009 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலில் மஹிந்த தரப்புக்குக் கிட்டிய வாக்கு வீதம் தற்போது வீழ்ச்சிகண்டிருப்பதிலிருந்தும், வாக்களிப்பை புறக் கணிக்கும் வாக்காளர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதிலிருந்தும் மஹிந்த தரப்பு மீது அதிருப்தி கொண்டுள்ள சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் தொகை அதிகரிப்பது புலனாகின்றது.

இந்தநிலையில் மஹிந்த் சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்பி எவ்வாறு பலமடையச் செய்யப் போகிறார் என்ற கேள்வி எழுவது நியாயமே. பண்டார நாயகா பரம்பரையினருடனான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே இதற்கான ஒரே வழியாகும். கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு சந்திரிகாவுக்கு அழைப்பு விடுக் காததன் மூலம் சுதந்திரக் கட்சி அனுதாபிகள் மத்தியில் சந்திரிகா குறித்து அனுதாப அலையை மஹிந்த ஏற் படுத்தியுள்ளார். சந்திரிகாவைப் புறக்கணிக்கப் புறக் கணிக்க, சந்திரிகா பொது மக்கள் மத்தியில் பலமடைகிறாரே யொழிய, நலிவடையவில்லை. விரும்பியோ, விரும்பாமலோ சந்திரிகா, மஹிந்தவுக்குத் தனது அமைச்சரவையில் பதவி வழங்கினார். மஹிந் தவை எதிர்க்கட்சித் தலைவராக்கினார்; பிரதமராகவும் ஆக்கி வைத்தார். சுதந்திரக் கட்சி தென் பகுதியில் அரசியல் வெற்றி பெறுவதானால் ராஜபக்ஷ பரம்பரையினது ஆதரவு நிச்சயம் தேவை என்பதனாலேயே சந்திரிகா, மஹிந்த வுக்கு அவற்றையெல்லாம் வழங்கி முன்னிலைக்குக் கொண்டு வந்தார்.

2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற மஹிந்தவுக்கு போர் வெற்றி கை கொடுத்தது. இன்று அந்த வெற்றி அலை வலுவிழந்து போயுள்ளது. இதனாலேயே சுதந்திரக் கட்சியின் தீவிர அனுதாபிகள்,ஆதரவாளர்களுக்கு இன்று பண்டாரநாயகர் தரப்பினர் குறித்த நல்லெண்ணம் தலைதூக்கியுள்ளது. உண்மையில், சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களின் ஆதரவை மஹிந்த ஈட்டிக் கொள்ள வேண்டுமானால், இன்று சுதந்திரக் கட்சியின் வீரராகக் கருதப்படும் மைத்திரிபால சிறிசேனாவை மஹிந்த பிரதமராக நியமித்தால் அது ஐ.தே.கட்சியை ஸ்திரப்படுத்த ரணில், சஜித் பிரேமதாசவை கட்சியின் பதில் தலைவராக நியமித்தமையை ஒத்ததொன்றாக அமையும். ஆனால் தலைதூக்கும் கேள்வி இதுதான். மஹிந்த, மைத்திரி பால சிறிசேனாவைப் பிரதமராக நியமிப்பாரா? இதற்கான பதில்: இல்லை; ஒருபோதுமில்லை, என்பதே.

# பழமையான நோய்

பெலீசியா சிறீசரவணபவானந்தன்.
தோல் வைத்தியநிபுணர்
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

தொழுநோய் என்பது மைக்கோ பக்ரீரியம் லெப்றே எனப்படும் பக்ரீரியாக் கிருமியினால் ஏற்படும் நோயாகும். இது உடலில் அங்கவீனத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நோயாகும். இது உலகில் காணப்படும் மிகப் பழைமையான நோயாகும். கி.மு 4000 ஆண்டளவில் பண்டைய எகிப்திலும் கி.மு 460 களில் கிப்போகிரட்டிஸ் காலத்திலும் இந்த நோய் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இன்றைய உலகில் நவீன வசதிகள் உள்ளபோதிலும் இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. ஏனெனில் இந்த நோய் மெதுவாக அறிகுறிகளின்றி ஆரம்பித்து நீண்டகாலத்தின் பின்னரேயே பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. தொழுநோய்க்கான கிருமியை நோர்வே நாட்டு விஞ்ஞானியான ஹன்சன் என்பவர் 1873 ம் ஆண்டில் கண்டறிந்தததால் இந்நோயை ஹன்சன் நோய் எனவும் அழைப்பர்.

தொழுநோய்க்கான கிருமியை நோர்வே நாட்டு விஞ்ஞானியான ஹன்சன் என்பவர் 1873 ம் ஆண்டில் கண்டறிந்தததால் இந்நோயை ஹன்சன் நோய் எனவும் அழைப்பர்.

தொழுநோயின் ஆரம்ப நிலையில் தோலின் சில பகுதிகள் உணர்ச்சியற்றோ அல்லது உணர்ச்சி குறைந்தோ காணப்படலாம். ஒன்று தொடக்கம் மூன்று வரையான தழும்புகள் தெளிவற்ற நிறம் மங்கிய நிலையில் காணப்படலாம்.

தோலின் நிறம் மங்கிய பகுதிகளில் உணர்ச்சிகளைப் பல முறைகள் மூலம் பரிசோதிப்பதன் மூலமும் இன்னொரு வகையாகத் தோலின் உணர்ச்சியற்ற பகுதிகளில் இருந்து ஒரு சிறிய துண்டை எடுத்து நுணுக்குக்காட்டியினூடாக பரிசோதிப்பதன் மூலமும் தொழுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

**தொழுநோய் எவ்வாறு பரவுகின்றது?**
மைக்கோபக்ரீரியம் லெப்றே எனும் கிருமி 45 நாள்கள் தொடக்கம் 5 மாதங்கள் வரை எமது உடலுக்கு வெளியே தகுந்த சூழலில் உயிர்வாழக்கூடியது. பாதிக்கப்பட்ட நோயாளியுடன் வாழும் மற்றைய சுகதேகிகளின் மூக்கில் இக் கிருமிகள் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே தொழுநோய்க்கான கிருமி சுவாசிப்பதன் மூலமே பெரும்பாலும் பரவுவதாக நம்பப்படுகின்றது.

**தொழுநோய்க்கிருமி தொற்றியவுடன் உடலில் என்ன நடைபெறுகின்றது?**
இந்தக் கிருமி உடலில் தொற்றியவுடன் எமது உடல் அதற்கான எதிர்த் தாக்கங்களை உண்டாக்கும். இதன் விளைவாக உடலில் இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆரம்பமாகும். தோலில் குறிப்பிட்ட சில பகுதிகள் உணர்ச்சி குறைந்தும் வெண்மையான தேமல் போன்றும் தோற்றமளிக்கும்.

**தொழுநோய்க்கான அறிகுறிகள்**
முன்னர் கூறியவாறு நோய்க்கிருமிக்கு எதிராக எமது உடலின் எதிர்த் தாக்கங்களின் வீரியத்தைப் பொறுத்து வெவ்வேறுபட்ட அறிகுறிகள் ஏற்படலாம். இதனை வைத்தே தொழுநோயைப் பல வகைகளாக வகைப்படுத்தியுள்ளார்கள்.

**பின்வருவன முக்கியமான அறிகுறிகளாகும்**
தொழுநோயின் ஆரம்ப நிலையில் தோலின் சில பகுதிகள் உணர்ச்சியற்றோ அல்லது உணர்ச்சி குறைந்தோ காணப்படலாம். ஒன்று தொடக்கம் மூன்று வரையான தழும்புகள் தெளிவற்ற நிறம் மங்கிய நிலையில் காணப்படலாம். இது பொதுவாக தொழுநோய் அதிகமுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முகத்தில், உடம்பில் அல்லது புறங்கை, புறங்கால்களில் இவை காணப்படலாம். சில சமயங்களில் தடிப்பமான வெண்மையான அடையாளங்கள் தோலில் ஏற்படலாம். இவையும் அதிகமாக முகம், கை, கால்கள் மற்றும் பிட்டப்பகுதிகளில் ஏற்படலாம். அனேகமாக ஒரு பக்கத்திலேயே தடித்த, சிவந்த உலர்ந்த தெளிவான அடையாளங்களாகக் காணப்படலாம். இவையும் தொடுகையின் போது உணர்வற்றவகையாகக் காணப்படும். ஒரு தொழுநோயாளி வைத்திய ஆலோசனைக்கு முதன்முதலில் வரும்போது காணப்படும் மிகப்பொதுவான அறிகுறிகளாக மூன்று தொடக்கம் 10 வரையான தெளிவான தடிப்பமான உணர்வற்ற தழும்புகள் காணப்படும்.
சில வகையான தொழுநோயின்போது நோயின் பிந்திய நிலையில் நெற்றி, முகம் என்பவற்றின் தோல்கள் தடிப்படைந்து காதுச் சோணைகளும் தடிப்படைந்து சிங்கத்தின் முகம்போன்று முகம் விகாரமடைந்து காணப்படலாம். கைகால்களில் உணர்ச்சி குறைவடைவதனால் இலகுவில் மாறாத புண்கள் ஏற்படும்.
தொழுநோயின்போது நரம்புகள் தடிப்படைவதனால் அவற்றைக் கை, கால்களில் தொட்டுணரக் கூடியதாக இருப்பதுடன் நரம்புகளின் பாதிப்பால் கை, கால்களின் உணாச்சி குறைவடைந்து இலகுவில் காயங்கள், புண்கள் ஏற்படலாம். சில வேளைகளில் நரம்புகள் மிகப் பாதிப்படைவதனால் திடீரெனக் கை, கால்கள் செயற்பட முடியாமலும் போகலாம்.

**தொழுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை எவ்வாறு கண்டறியலாம்**
மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படும்போது குறிப்பாக ஆரம்ப நிலை அறிகுறிகள் தென்படும் போதே வைத்திய ஆலோசனை பெற்றால் வைத்தியர்கள் நோயாளியைப் பாசோதித்து தோலின் நிறம் மங்கிய பகுதிகளில் உணர்ச்சிகளைப் பல முறைகளினால் பாசோதிப்பதன் மூலமும் இன்னொரு வகையாகத் தோலின் உணர்ச்சியற்ற பகுதிகளில் இருந்து ஒரு சிறிய துண்டை எடுத்து நுணுக்குக்காட்டியினூடாக பாசோதிப்பதன் மூலமும் தொழுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். எனவே தொழுநோயை ஒரு நோயாளிக்கு ஏற்படும் அறிகுறிகளை மாத்திரம் கொண்டே அறிந்துகொள்ள முடிவதுடன், சிகிச்சையும் வழங்கமுடியும்.

**தொழுநோய்க்கு அளிக்கப்படும் சிசிக்சைகள்**
தொழுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் சிக்கல்கள் ஏற்படமுன்னரே மருந்துகள் மூலம் இலகுவில் குணப்படுத்த முடியும். அதற்காக தொழுநோய்த்தடுப்பு இயக்கம் அரச வைத்திய சாலைகளினூடாக இலவசமாக மருந்துகளை வழங்குகிறது. இந்த மருந்துகளைத் தொழுநோயின் வகைகளைப் பொறுத்து 6 மாதம் தொடக்கம் 12 மாதம் வரை உட்கொள்ளல் வேண்டும். இந்த மருந்துகளை மறக்காமல் இலகுவில் உட்கொள்வதற்காக அவை அலுமினிய அட்டையில் ஒவ்வொரு மாதத்துக்குமான அளவில் வழங்கப்படுகின்றன. நோய் முற்றிய நிலையில் ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட அங்கவீனங்களுக்காக புனர்வாழ்வுச் சிகிச்சைகள் வழங்கவேண்டிய தேவைகள் ஏற்படலாம். சில சமயங்களில் சில அங்கவீனங்களுக்காக் சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம்.

**தொழுநோயாளி மருந்துகளை உட்கொள்ளும் போது அவதானிக்க வேண்டியவை**
தொழுநோய்க்காக ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகளை உட்கொள்ள வேண்டியுள்ளதனால் அந்த மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளையும் நோய்க்கிருமிகள் அழியும்போது அரிதாக ஏற்படக் கூடிய விளைவுகளையும் அவதானிக்க வேண்டும். பின்வரும் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும்.
உடல் வெளிறிக் காணப்படல்.
தேநீர் போன்ற நிறமாகச் சலங்கழித்தல்.
கண்கள் மஞ்சள் நிறமடைதல்.
தோல்களில் ஏற்படும் சிவப்பு நிறமான தழும்புகள்.
வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுநோ போன்ற சமிபாட்டுப் பிரச்சினைகள், காய்ச்சல்.

**தொழுநோயை ஒரு பிரதேசத்திலிருந்து இல்லாதொழிக்க வேண்டுமானால் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்**
தொழுநோய் ஏற்பட்டால் தகுந்த சிகிச்சையை தொடர்ச்சியாக சிகிச்சைக்குரிய காலம் வரை இடைநிறுத்தாமல் சரிவரப் பெறவேண்டும். தொழுநோயாளி காணப்பட்ட பிரதேசத்தில் அவருடன் தொடர்பு... ஏனையோரையும் பாசோதிப்பதன் மூலம் ஆரம்பத்திலேயே தொழுநோயாளியைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கல்.
சுகாதார ஊழியர்கள் தொழுநோய் அதிகமாக உள்ள இடங்களில் நடமாடும் சேவை... நடத்தும் போது அங்குள்ள அனைவரும் அதில் பங்குபற்றி... களுக்குத் தொழுநோய் உள்ளதா என்பதைக் கண்டறிய... வேண்டும். தொழுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்... உடனேயே வைத்திய ஆலோசனையைப் பெறல் வேண்டும்.
எனவே தொழுநோயானது இலகுவில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவாவிடினும் அது தொற்றினால் ஒருவருக்கு மிகத் தாமதமாகவே பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இதைஉணராமல் நோய் முற்றிய நிலையிலேயே பலர் வைத்தியரை அணுகுகின்றார்கள். எனவே ஆரம்ப அறிகுறிகளான நிறம் மங்கிய, விறைப்பான அல்லது தோலில் உணர்வற்ற தழும்புகள் காணப்படின் வைத்திய ஆலோசனையைப் பெறல் வேண்டும். இறுதியாக நாம் மனதில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் தொழுநோயைப் பற்றிய பூரண அறிவு எமக்கு இருப்பின் தொழுநோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்பதாகும்.

# கந்தபுராணத்தில் பாலியல் கல்வி

மருத்துவர் சி.யமுனாநந்தா



பாலியல் கல்வி என்பது மானிட வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. மருத்துவத்தில் பல வருடங் களாக பாலியல் உறவில் திருப்தி இல்லாத பல பிரச்சினைகளுடன் நோயாளிகள் வருவதுண்டு. ஒருவரின் வாழ்நாளில் கிடைக்காத அனுபவம் சிறந்த கல்வியூட்டல் மூலம் அளிக்கக்கூடியதாக உள்ளது. இன்றைய காலத்தில் காணொலிகள் மூலம் பாலியல் கல்வி அளித்தாலும் எமது பண்டைய இலக்கியங்களில் கூறப்பட்ட வரைவிலக்கணங்களில் இக்கால உளவியல் கல்வியூட்டலைவிட மிகையானவை. மதனக்கலை பற்றி கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் சிலவற்றை நாம் உற்றுநோக்கலாம்.
பெண்களை மான்சாதியினரான மானியர், பெட்டைக்குதிரைச் சாதியினரான வடவையர் பெண்யானைச் சாதியினரான அத்தினியர் என மூவகைப்படுத்தி உள்ளார். ஆண்களை குற்றமற்ற முயல்சாதியினர், காலைச் சாதியினர், அசுவச்சாதியினர் என மூவகைப் படுத்தியுள்ளார்.

வசை தவீர் மானினி மால்வட வைப்பேர்
இசையினி அத்தினி ஏந்திழை யோர்க்காம்
அசைவது தொல்மரபு ஆடவர் யார்க்குஞ்
சசன் இடபன் அகவன் இவை தாமே

மேலும் மனிதர்களின் உணர்வுகள் தேய்பிறை, வளர்பிறைக் காலங்களில் இறங்கியும் ஏறியும் நிற்கின்ற தன்மையினால் அவை இருக்கும் இடத்தை தேடிக்குற்றம் நீங்கித் தக்கதைச் செய்தல் வேண்டும்.


மக்கள் காமம் வடிவினில் வைகலும்
பக்கம் தோறும் இழிந்துயர் பான்மையால்
புக்க தோரிடை நாடிப் புரை யொரீ இத்
தக்க செய்வதும் சாற்றிய மேலதே

பாலியல் விருப்பம் உள்ளவர்களையும் இல்லாதவர்களையும் அடைந்தவர்களையும் அடையாதவர்களையும் இவை அல்லாதவர்களையும் ஆடவர் தெரிந்து கொள்ளுமாறு பொருந்திய செயல்களை மனதில் கொள்ளவேண்டும் என்கிறார் கச்சியப்பர். பாலியல் தொடர்பான சமூக உளப்பிரச்சினைகள் தோன்றாது இருப்பதற்கு இது மிகவும் இன்றியமை யாதது ஆகும்.
எனவே தமிழிலக்கியங்களில் உள்ள அரிய கருத்துக்களை நாம் எடுத்துரைக்க வேண்டிய கடமைக்கு உள்ளாகி உள்ளோம். திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், அகநானூறு என்பவற்றிலும் இத்தகைய இலக்கிய எடுத்துக் காட்டுக்கள் உள்ளன.
பாலியல் கல்வி தவறெனவும் எமது கலாசாரத்துக்கு உகந்ததல்ல எனவும் கூறுபவர்களுக்கும் பாலியல் கல்வி தவறல்ல எனவும் எமது கலாசாரத்துக்கும் பாலியல் கல்வி தொடர்பான சமூக வடுவை அகற்றவும் சிறந்த இலக்கிய எடுத்துக்காட்டுக்கள் அவசியமானவை. மேலும் ஆங்கில மோகம், ஆங் கிலத்தில் கல்வி கற்பிக்கும் பெற்றோர்களுக்கு தமிழ்மொழி... இழிவு அல்ல என்பதையும் எமது பண்டைய இலக்கிய ஆதாரங்கள் எடுத்துக்கூறும். பாலியல் தொடர்பான சமூக உளப் பிரச்சினைகளுக்கு கலாசார அணுகுமுறைகளுக்கூடான எதிர்வு கொள்ளல் நவீன உளமருத்துவத்திலோ சட்டங்களிலோ உள்ள வெற்றிடத்தின் சில பகுதிகளை நிரப்பும் என்பது திண்ணம்.



இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதியான இமயமலையில் உள்ள சியாச்சினுக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அங்குள்ள ராணுவ வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடினார். இராணுவத்தினருக்கு உணவு பரிமாறி அவர்களுடன் கலந்துரையாடினார். (வ)

## மங்கள்யான் செவ்வாயை அடைந்து ஒரு மாதம் நிறைவு



டில்லி, ஒக்.25

இந்தியாவின் மங்கள்யான் விண்கலம் செவ்வாய்க்கிரக சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டு நேற்றுடன் ஒரு மாதம் நிறைவடைகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி தனது முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் மங்கள்யான் விண்கலத்தை நிலைநிறுத்தி இந்தியா வரலாற்றுச் சாதனைப் படைத்தது.

சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படும் செவ்வாய்க்கிரகத்தில், தண்ணீர் மற்றும் கனிம வளங்கள் உள்ளனவா? அதன் மேற்பரப்பு எப்படி இருக்கிறது? என்பது உள்ளிட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 450 கோடி ரூபா செலவில் மங்கள்யான் விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது. (வ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலித்துகள் கொலை

**மஹராஷ்டிராவில் பரிதாபம்**



புனே, ஒக்.25

மஹராஷ்ட்ராவின் அஹமத் நகர் மாவட்டத்தில், தலித் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொலை செய்யப்பட்டு, அவர்களது சிதைந்த உடல் பாகங்கள் வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பைத் தோற்றுவித்துள்ளது.

புனே நகரிலிருந்து சுமார் 180 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அஹமத்நகர் மாவட்டத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வேளையில், சஞ்ஜய் ஜாதவ் என்ற 42 வயது நபரும், அவரது மனைவியும், அவர்களது 19 வயது மகனும் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இது உயர் சாதி சமூகத்தினரால் செய்யப்பட்ட கொலை என்று அந்தக்குடும்பத்தின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட ஜாதவ் என்பவரின் பண்ணைக்கு அருகில் வாழும் மேல்சாதியைச் சேர்ந்த திருமணமான பெண்ணொருவருக்கு, ஜாதவ் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவருடன் தகாத உறவு இருந்ததாக வதந்திகள் பரவியிருந்தன என்றும், அந்தப் பிரச்சினைதான் இந்தக் கொலைச் சம்பவத்துக்குத் தூண்டுதலாக இருந்திருக்கலாம் என்றும் அந்தக் குடும்பத்துக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால் அதே தலித் சமூகத்தை சேர்ந்த ஒரு பெண்ணுடன்தான் அந்த ஜாதவ் குடும்ப உறுப்பினர் தகாத உறவு வைத்திருந்ததாக வேறு சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் செய்தி ஊடகம் ஒன்றிடம் பேசிய அந்த மாநிலப் பொலிஸ் துறை கண்காணிப்பாளர் லக்ஷ்மி கவுதம், இந்தக் கொலைகள் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு வருவதாகவும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கொலைக்கான காரணம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். (வ)

# காஷ்மீருக்கு ரூ.745 கோடி

## வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கினார் பிரதமர் மோடி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் மாநில நிவாரணப் பணிகளுக்காகக் கூடுதலாக ரூ.745 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சியாச்சினில் பனிமலையில் உள்ள ராணுவ வீரர்களுடனும், காஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடனும் நேற்று முன்தினம் தீபாவளியைக் கொண்டாடப்போவதாகப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன்படி, நேற்று முன்தினம் காலை 7.30 மணி அளவில் டில்லியிலிருந்து, பிரதமர் மோடி சியாச்சின் புறப்பட்டுச் சென்றார். சியாச்சின் போய்ச் சேர்ந்த அவர், அங்கு பணியாற்றும் இந்திய ராணுவ வீரர்களைச் சந்தித்துப் பேசினார்.

அதன்பின்னர் அங்கிருந்து பிரதமர்மோடிஜம்முகாஷ்மீருக்குப்புறப்பட்டுச்சென்றார். ஸ்ரீநகர் விமான நிலையத்தில் காஷ்மீர் ஆளுநர், முதல்வர் ஒமர் அப்துல்லா உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர். அதையடுத்து, அங்கு கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளச் சேதம் குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

அப்போது, காஷ்மீருக்கு மேலும் அதிகநிவாரணம்வழங்கவேண்டும் என்று முதல்வர் ஒமர் அப்துல்லா, பிரதமர்மோடியிடம் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

அதையடுத்து, பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் கூறுகையில், "காஷ்மீரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிலையில், மேலும், 745 கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய இன்று முடிவு செய்துள்ளோம்.

இதில், வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை சீரமைக்க ரூ.570 கோடியும், வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள 6 பெரிய மருத்துவமனைகளை சீரமைக்க ரூ.175 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்களுக்கான நிவாரணத்தை, வெள்ளத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கான நிவாரண தொகையை வங்கிகள் மூலம் செலுத்தப் பரிசீலிப்போம் - என்றார். (வ)

## நடிகர் எஸ்.எஸ்.ஆர். நேற்று காலமானார்



சென்னையில் உள்ள மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாகச் சிகிச்சைபெற்று வந்து பழம் பெரும் நடிகர் எஸ்.எஸ்.ஆர். ராஜேந்திரன் தனது 86 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

பூம்புகார், மறக்க முடியுமா, பார்மகளே பார் உட்படப் பல படங்களில் இவர் நடித்துள்ளார். 1962 இலும் 1980 இலும் தேனி, ஆண்டிபட்டித் தொகுதிகளில் இருந்து எம்.எல்.ஏ-வாக தேர்வானவர் எஸ்.எஸ். ராஜேந்திரன். தயாரிப்பாளர், இயக்குநராகவும் செயற்பட்ட எஸ்.எஸ்.ஆர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். (வ)

## அமைச்சர்களின் வாய்மொழி உத்தரவை செயற்படுத்தத் தடை

டில்லி, ஒக்.25

அமைச்சர்களின் வாய்மொழி உத்தரவை ஏற்று அதிகாரிகள் செயற்படக் கூடாது என்று உயர் அதிகாரிகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பதவியேற்றதில் இருந்து மத்திய அமைச்சர்கள் மற்றும் மத்திய அரசின் அதிகாரிகளுக்கு பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறது.

மத்திய அரசு அதிகாரிகள் அனைவரும் சரியான நேரத்துக்கு அலுவலகத்திற்கு வர வேண்டும். அலுவலகங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு உத்தரவுகளை மத்திய அரசு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், அமைச்சர்களின் வாய்மொழி உத்தரவை ஏற்று அதிகாரிகள் செயற்படக் கூடாது என்று மத்திய அரசு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து விடுத்துள்ள உத்தரவில், 'அமைச்சர்களின் வாய்மொழி உத்தரவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, மத்திய அரசு அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்து எழுத்துமூலமான உத்தரவைப் பெற்ற பின்னரே அமைச்சரின் உத்தரவை செயற்படுத்த வேண்டும்:

இந்த உத்தரவு, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும்.

மாநிலங்களில் உள்ள மத்திய அரசின் அலுவலகங்களும் இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த உத்தரவால், அமைச்சர்கள் பெயரைப் பயன்படுத்தி உயர் அதிகாரிகள் தவறு செய்ய முடியாது என்று பிரதமர் அலுவலகம் கருதுகிறது.

இருப்பினும், சில அவசர நேரங்களில் அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (வ)

# அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடோம்

**ஐ.நா. சபையில் இந்தியா தெரிவிப்பு**

நியூயோர்க், ஒக்.25

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது என்று ஐ.நா. சபையில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார். ஐ.நா. பொதுச் சபையில் ஆயுத ஒழிப்பு மற்றும் சர்வதேச அமைதி தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஆயுத ஒழிப்பு மாநாட்டுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி டி.பி. வெங்கடேஷ் வர்மா பங்கேற்றுப் பேசியதாவது:

அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் கொள்கையில் இந்தியா உறுதியாக உள்ளது. அதே நேரத்தில், அதில் பாரபட்சம் இருக்கக்கூடாது என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அணு ஆயுத விவகாரத்தைப் பொறுத்தவரை, எந்த நாட்டின் மீதும் இந்தியா முதலில் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்காது. அதேபோல், அணு ஆயுதம் இல்லாத நாட்டின் மீதும் இந்தியா இத்தகைய தாக்குதலை நடத்தாது. இந்தஇரண்டு விடயங்களிலும் இந்தியா தெளிவாக உள்ளது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியாவை இணையும்படி வல்லரசு நாடுகள் கூறுவது ஒருதலைப்பட்சமானது.

இந்த விவகாரத்தில் அணு ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்கு அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய 5 நாடுகளுக்கு மட்டும் அனுமதி அளித்திருப்பதை பாரபட்சமான நடவடிக்கையாக இந்தியா கருதுகிறது.

எனவே, அணு ஆயுதமே இல்லாத நாடாக மாறி இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடும் என்ற பேச்சுக்கே இடமில்லை - என்றார் டி.பி. வெங்கடேஷ் வர்மா. (வ)

## அல்குவைதாவுக்கு ஒத்துழைப்பு பெண்கள் நால்வருக்கு சிறை

அல்குவைதா இயக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றத்துக்காகச் சவூதி அரேபியாவில் பெண்கள் நால்வருக்கு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

தங்களது மகன்மார் ஜிஹாத் போராளிகளாவதற்கு உதவிய குற்றச்சாட்டும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அந்தப் பெண்களுக்கு 4 முதல் 10 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாக சவூதி அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து போராட்டம் தொடர்பான விடயங்களை தரவிறக்கம் செய்தமை தொடர்பில் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சவூதி பிரஜைகள் ஜிஹாத் குழுக்களில் இணைவதை தடுப்பதற்காகக் கடந்த ஆண்டில் சவூதி அரசு கடுமையான புதிய தண்டனைகளை அறிவித்திருந்தது. இணையத்தளத்தில் சமூக மற்றும் அரசியல் ரீதியான கருத்துக்களை வெளியிடுவோரையும் இந்தப் புதிய சட்டங்கள் இலக்குவைப்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். (வ)

# ஐ.எஸ். தீவிரவாதிகள் 25 பேர் உயிரிழப்பு

## அமெரிக்காவின் தாக்குதலில்



பக்தாத், ஒக்.25

ஈராக்கின் வடக்கே பைஜி நகரில் நேற்று முன்தினம் அமெரிக்க மற்றும் கூட்டுப் படைகள் வான்வழி தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 25 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஊடுருவியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் பணியில் அமெரிக்கா தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. சிரியா மற்றும் ஈராக் எல்லைப் பகுதியில் நாள்தோறும் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலுக்குப் பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல்வேறு மேற்கத்திய மற்றும் அரபு நாடுகள் ஆதரவு தெரிவித்து உள்ளன. அந்தநாட்டு போர் விமானங்களும் சிரியா எல்லையில் உள்ள பல்வேறு பிராந்தியங்களில் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈராக்கின் வடக்கே சிரியாவின் எல்லைப் பகுதியில் அன்பர் பிராந்தியத்தில் உள்ள அமிரிய பலுஜா, ரமாதி, பைஜி உள்ளிட்ட பல்வேறு நகரங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி உள்ளனர். அத்துடன், அந்தப்பகுதிகளில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் அந்தப்பகுதியில் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அந்தப்பிராந்தியத்தில் அயின் அல் ஆசாத் விமானதளம், ஹதிதா அணை உட்பட பல்வேறு எண்ணெய் கிணறுகளையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தநிலையில், துருக்கி மற்றும் சிரியாவின் எல்லையில் உள்ள கோபானி நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் முகாமிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். அந்தநகரின் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. அத்துடன், அமிரியா பலுஜா, கர்மா மற்றும் பைஜி நகரங்களில் ஈராக் இராணுவ பீரங்கி தாக்குதல் நடத்தி வருகிறது. ஈராக் இராணுவத்துக்கு உதவியாக அமெரிக்கப் போர் விமானங்கள் இந்த நகரங்களின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தின. இத் தாக்குதலில் அந்தப் பகுதிகளில் இருந்த 25 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பலியானார்கள் என்று ஈராக் இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. இதை அறிந்ததும் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்து, ராணுவ வீரர்களுடன் கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர். (வ)

## நியூயோர்க்கில் மருத்துவருக்கு எபோலா பாதிப்பு



நியூயோர்க்.ஒக்.25

அமெரிக்காவின் நியூயோர்க்கில் மருத்துவர் ஒருவருக்கு எபோலா வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரை மருத்துவமனையில் தனி விடுதியில் வைத்து மருத்துவர்கள்சிகிச்சைஅளித்து வருகின்றனர்.

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள லைபீரியா, நைஜீரியா, மாலி, கின்யா, உட்பட 6 நாடுகளில் எபோலா என்ற வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இந்த நாடுகளில் இந்தக் கொடிய நோய்க்கு இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் தற்போது உலகையே மிரட்டி வருகிறது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதே நேரத்தில் இதைத் தடுப்பதற்கானமருந்துகளும்இல்லை. எனவே இந்த நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவது நிச்சயம் என்று மருத்துவர்கள் தரப்பில் கூறப்படுகிறது. (வ)



## 2 வருடங்களாக கோமாவில் இருப்பதாக நாடகமாடிய நபர்

பிரிட்டனைச் சேர்ந்த நபர் ஒருவர் 2 ஆண்டுகளாகத் தான் கோமாவில் இருப்பது போல நடித்து வந்துள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த ஹெலன் நைட் என்ற நபர் தனது அயல் வீட்டிலுள்ள முதியவரிடம் அன்பாகப் பேசி அவரிடமிருந்து சுமார் 40, 000 பவுண்டுகளை திருடியுள்ளார்.

இதுதொடர்பான வழக்கு ஸ்வான்சீ கிரவுத் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்துள்ளது. இந்தநிலையில் தன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு விடும் என்பதால், ஹெலன் நைட் கடந்த 2 வருடங்களாக நீதிமன்றத்தில் முன்னிலையாவதைத் தவிர்த்தார். மேலும் தன்னை முன்னிலையாக அழைக்கும் பொலிஸாரை ஏமாற்ற, தனக்குக் கோமா வந்ததைப் போல் நடித்து வீட்டுக்குள் இருந்துள்ளார்.

எனினும் அவரைக் கண்காணித்து வந்த பொலிஸார், செவ்வாய்க்கிழமை ஹெலன் காரை ஓட்டிச் செல்வதையும், அங்குள்ள மளிகை கடையொன்றுக்குத் தனது மனைவியுடன் நடந்து செல்வதையும் கண்காணிப்புக் கமராவின் மூலம் கண்டுபிடித்துள்ளனர். அதன்பின் ஹெலன் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, அடுத்த மாதம் 7 ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்ததுடன், அதுவரைப் பொலிஸாரின் பாதுகாப்பில் ஹெலன் இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். (வ)

# சந்திரனுக்கு அருகில் சென்று மீண்டும் திரும்பும் விண்கலம்

## சோதனைகள் நேற்று ஆரம்பம்

பீஜிங், ஒக்.25

சந்திரனுக்கு புதிய விண்கலமொன்றை விரைவில் அனுப்பி ஆய்வு நடத்த சீனா திட்டமிட்டுள்ளது. இதற்கான சோதனைப் பணியை நேற்று ஆரம்பித்துள்ளது. இந்த எதிர்கால ஆய்வுப் பணியில் சேன்ஜ் இ- 5 என்ற புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தத்திட்டமிட்டுள்ளது. இந்தச் சோதனை விண்கலம் சநதிரனுக்கு அருகில் குறிப்பிட்ட இடம் நோக்கிச் சென்று விட்டு மீண்டும் பூமிக்குத் திரும்பி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சீன தேசிய பாதுகாப்பு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.



இதற்கான மாதிரிச் சோதனை மாதிரி தற்போது தென் மேற்கு சீனாவின் ஷிசங் செயற்கைக்கோள் பரிசோதனை நிலையத்தில் நேற்று ஆரம்பமானது. இதன் முழுமையான பணிக்கு 8 தினங்கள் எடுத்து கொள்ளப்படும். இந்த விண்கலத்தைஅனுப்பதேவையான வானிலை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

குறித்த நிலையத்தின் தலைமைப் பொறியியலாளர் கூறும் போது சந்திரனின் அரைச் சுற்றுவட்டப் பாதையில் 3 லட்சத்து 80 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று விட்டு விண்கலம் திரும்பவுள்ளது. இந்தச் சோதனை சீனாவின் முதல் முயற்சியாகும்.

மேம்பட்ட லாங் மார்ச் 3 சி தாங்கிச்செல்லும் ரொக்கெட்டை இந்தச் சோதனையின்போது சீனா அறி முகப்படுத்துகிறது. சந்திரன் ஆய்வு சேன்ஜ்ச் -5 2017 இல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் சந்திரனில் இறங்கி அங்கு மாதிரிகளைச் சேகரித்துக்கொண்டு பூமிக்குத் திரும்பத் திட்டமிடப்பட்டுள்ளது. (வ)

## வெள்ளை மாளிகையில் அத்துமீறி நுழைந்த மற்றொருவர் கைது



வொஷிங்டன், ஒக்.25

அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் வெள்ளை மாளிகை வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த 23 வயது இளைஞர் ஒருவரை அந்தநாட்டின் உளவுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

புதன்கிழமை, உள்ளூர் நேரப்படி இரவு சுமார் 7.16 மணிக்கு டாமினிக் அடெசன்யா (வயது 23) என்பவர், ஜனாதிபதி மாளிகையின் வெளிப்புறச் சுவர் ஏறி உள்ளே குதித்தார். அவர் உட்புறம் குதித்ததும், வெள்ளை மாளிகையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள உளவுத் துறையினரின் மோப்ப நாய்கள் அவர் மீது பாய்ந்தன.

அதையடுத்து, காவலர்கள் டாமினிக்கை கைது செய்தனர். நாய்களுடன் டாமினிக் சண்டையிட்டு அவற்றுக்கு காயம் ஏற்படுத்தியதாக உளவுத்துறையினர் கூறினர். காயமடைந்த நாய்கள் சிகிச்சை பெற்று வருகின்றன. கடந்த இரு மாதங்களில் வெள்ளை மாளிகையில் நடைபெறும் இரண்டாவது சம்பவம் இது. (வ)

# பிரிட்டன் அரண்மனையில் எங்கள் கொடி பறக்கும்

## சபதமிடும் 17 வயது ஜிகாதி

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸில்இணைந்த 17 வயது இளைஞன் ஒருவன் பிரிட்டன் அரண்மனையில் தங்களது கொடி பறக்கும் என்று சபதமிட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னிலிருந்து அப்துல்லா எல்மீர் என்ற இளைஞன் தனது தாயாரிடம் மீன்பிடிக்கச் செல்வதாகப் பொய் கூறிவிட்டு சிரியாவுக்குச் சென்று கடந்த ஜுன் மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்துள்ளான்.


தற்போது தனது பெயரை அபு காலித் என்று மாற்றி வைத்து கொண்டுள்ளஅவன் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளான்.

அந்தக் காணொளியில், "எத்தனை நாடுகள் சேர்ந்து வந்தாலும் எங்களை அழிக்க முடியாது என்றும் எங்கள் அமைப்பின் கறுப்பு கொடி பிரிட்டனின் பக்கிங்காம் அரண்மையிலும், அமெரிக்கா வின் வெள்ளை மாளிகையி லும் பறக்கும் வரை எங்களது போராட்டம் முடிவுக்கு வராது" என்றும் பேசியுள்ளான்.



அவன் ஆஸ்திரேலியாவை விட்டுவெளியேறியதில் இருந்து அவனது குடும்பத்தினர் மனமுடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து ஆஸ்திரேலியாவின் அரச செய்தி தொடர்பாளர்கூறுகையில், இதுபோன்ற சம்பவங்களினால் தான் ஆஸ்திரேலியா மற்ற நாடுகளுடன் சேர்ந்து ஈராக்கின்ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பை அழித்து நாட்டைப் பாதுகாக்க போராடுகிறது என்று தெரிவித்துள்ளார். (வ)

# சிறந்த உடற்பயிற்சிக்கு உதவும் நவீன சாதனம்



உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் சிறந்த உடற்பயிற்சியை மேற்கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்கள் இலத்திரனியல் கைப்பட்டிகளை அறிமுகம் செய்துள்ளன.
இந்த நிலையில் இலகுவாகவும், துல்லியமான முறையிலும் பயன்படுத்தக்கூடிய நவீன கைப்பட்டி ஒன்றை ஜேபிர் (Jaybir) நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.
நாளை அமெரிக்காவில் அறிமுகம் செய்யப் படவுள்ள இந்தக் கைப்பட்டியின் விலை 199 டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
Androi- அல்லது IOS சாதனங்களுடன் இணைத்து இதனைப் பயன்படுத்த முடியும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 6 | 2 | 5 | | 9 | | 3 |
| 9 | | 2 | | | | 1 | | |
| | | | 6 | | | | 7 | 4 |
| | | 7 | | | 8 | 4 | | |
| | 8 | | 1 | 9 | 5 | | 3 | |
| | | 3 | 7 | | | 8 | | |
| 5 | 7 | | | | 6 | | | |
| | | 8 | | | | 7 | | 6 |
| 3 | | 9 | | 7 | 4 | 5 | 2 | |

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 1 | 6 | 2 | 8 | 7 | 3 | 5 |
| 5 | 7 | 8 | 1 | 9 | 3 | 6 | 2 | 4 |
| 2 | 3 | 6 | 5 | 7 | 4 | 9 | 8 | 1 |
| 1 | 4 | 9 | 2 | 8 | 7 | 3 | 5 | 6 |
| 6 | 2 | 5 | 3 | 4 | 1 | 8 | 9 | 9 |
| 3 | 8 | 7 | 9 | 6 | 5 | 4 | 1 | 2 |
| 8 | 5 | 4 | 7 | 1 | 9 | 2 | 6 | 3 |
| 7 | 1 | 2 | 4 | 3 | 6 | 5 | 9 | 8 |
| 9 | 6 | 3 | 8 | 5 | 2 | 1 | 4 | 7 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## பக்தி



தான் அன்பு செய்கின்ற ஒருவரிடம் ஒருமித்த பற்று இல்லாமல் தூய அன்பு வளர முடியாது. ஆனால் பல நேரங் களில் இந்தப் பற்றே மற்ற எல்லாவற்றையும் வெறுத்து ஒதுக்குவதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, எந்த நாட்டிலும் சரி, பலவீனமான, வளர்ச்சியுறாத மனிதர்களைப் பொறுத்தவரை, தங்கள் சொந்த லட்சியத்தை நேசிப்பதற்கான ஒரே வழி பிற லட்சியங்கள் அனைத்தையும் வெறுப்பதே. அதனால் தான், தான் வழிபடுகின்ற தெய்வத்திடம் பேரன்பும் பற்றும் கொண்டவன், தனது மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவன், பிற மதத்தினரைக் கண்டாலோ கேட்டாலோ எதிர்க்கிறான். எஜமானனுடைய சொத்தைப் பிறர் கவர்ந்து விடாமல் காத்து நிற்கின்ற நாயின் குணத்தைப் போன்றதே இத்தகைய வெறி, சொல்லப்போனால் நாயின் குணம் மனிதனது பகுத்தறிவை விட மேலானது. ஏனெனில் எஜமான் எந்த வேடத்தில் வந்து நின்றாலும் நாய் அவனைஅறிந்துகொள்ளும். அவனை அது பகைவன் என்று நினைப்பதில்லை. கொள்கை வெறியனோ எல்லாப் பகுத்தறிவையும் இழந்து விடுகிறான். தனது சொந்த எண்ணங்களிலேயே ஊறிப்போய் கண்மூடிக் கிடக்கும் இந்த வெறியன், ஒருவன் என்ன சொல்கிறான், அவன் சொல்வது நல்லதா கெட்டதா என்பது பற்றியே கவலைப்படுவதில்லை. சொல்பவன் யார் என்பதுதான் அவனது கவலையெல்லாம். தனது மதத்தினரிடம் இரக்கமுடையவனாக, நல்லவனாக, நேர்மையாளனாக அன்புடையவனாக இருக்கின்ற இவன் தனது மதக் கோட்பாடுகளுக்குப் புறம்பாக உள்ளவர்களிடம் கொடிய ஈனச் செயல்களைச் செய்வதற்கும் தயங்குவதில்லை. இந்த அபாயம் ஆரம்ப நிலையில் உள்ள பக்தியில் தான் உள்ளது. பக்திகனிந்துஉயரிய பக்தியாக உருவெடுக்கும்போது மதவெறியால் ஏற்படும் பயங்கரச் செயல்கள்பற்றி பயம் கொள்ள வேண்டியதில்லை. பக்திக்கு வசப்பட்டிருக்கும் பக்தன் அன்பே வடிவமான இறைவனுக்கு மிகமிக அருகில் சென்று விடுவதால் வெறுப்பைப் பரப்புகின்ற ஒரு கருவியாக அவன் இருப்பதில்லை.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எல்லா நன்மைகளையும் தடையின்றி அடைவீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். இதுவரை தொந்தரவு கொடுத்து வந்த நோய் விலகும். அதனால் ஏற்பட்ட மனப் பாரம் குறையும்.



**இடபம்**: புதிய ஒப்பந்தங்கள் கைகொடுக்கும். தொழிலதிபர்கள் பங்குதாரர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வியாபாரிகள் எந்தக் கொள்முதலையும் தயக்கமின்றிச் செய்யலாம். போட்டியாளர்கள் விலகிச்செல்வார்கள்.



**மிதுனம்**: ஊழியர்களுக்கு வரவேண்டியவை அனைத்தும் வந்துசேரும். கேட்ட இடத்திற்கு மாறுதல் கிட்டும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல வாய்ப்புகளைப் பெற்றுத்தரும். உங்களை ஒதுக்கியவர்களே உங்களைத் தேடிவருவார்கள்.



**கடகம்**: கவனத்துடன் செயற்படவேண்டிய நாள். தொழிலாளர்கள் ஓய்வில்லாமல் உழைக்க நேரும். அதற்கேற்றவாறு கூடுதல் வருமானமும் வரும். புதிய ஒப்பந்தங்கள் வரும். உடல்நிலையில் இருந்து வந்த சிரமங்கள் முற்றிலும் நீங்கும்.



**சிங்கம்**: நீண்ட நாள்களாக தொல்லை கொடுத்து வந்த நோய் மருந்துக்கு கட்டுப்பட்டு விடும். மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உடன்பிறந்த சகோதரர்கள் ஒன்று சேர்வார்கள்.



**கன்னி**: வெளிநாடு செல்லும் திட்டம் நிறைவேறும். சமூகத்தில் நல்ல அந்தஸ்தைப் பெறுவீர்கள். இதுவரை தொல்லை கொடுத்துவந்த எதிரிகள் விலகிச் செல்வார்கள். தைரியமாகச் செயற்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துப் போகவும்.



**துலாம்**: பொதுக்காரியத்தில் உள்ளவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் பெறுவார்கள். நினைத்தபடி பணவரவுகளைப் பெறலாம். தொழிலதிபர்கள் அதிக உற்பத்தியையும், இலாபத்தையும் பெறுவார்கள்.



**விருச்சிகம்**: பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். வியாபாரிகள் மறைமுக போட்டிகளால் நெருக்கடிகளைச் சந்திக்கலாம். இதுவரை குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த பிள்ளைகள் வந்து சேர்வார்கள்.



**தனுசு**: ஊழியர்கள் நினைத்த இடத்துக்கு இடமாற்றம் பெறுவார்கள். வியாபாரிகள் நல்ல நிலையை அடைவார்கள். வேலைதேடும் இளைஞர்களுக்கு எதிர்பார்த்தபடி வேலைவாய்ப்புகள் வந்துசேரும். அயல் நாட்டில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும்.



**மகரம்**: தொழிலதிபர்கள் வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். இலாபம் அதிகரிக்கும். வியாபாரிகள் போட்டியின்றி வியாபாரம் செய்து இலாபத்தைப் பெறுவார்கள்.மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**கும்பம்**: நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வருவாய் உண்டு. சோதனைகள் வெற்றியாக மாறும். குடும்பத்தில் சிற்சில சண்டைகள் வந்து சமாதானமாகும்.



**மீனம்**: காரியங்கள் அனைத்தும் கைகூடும். உங்கள் செயற்பாடுகள் மற்றவர்களைக் கவரும். மன அடக்கம் பெற தியானம் செய்யுங்கள். படிப்பில் நாட்டம் கூடும். செலவுகளும், அலைச்சலும் கூடும் நாள். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும்.

## நாளை

**ஐப்பசி-09 ஞாயிற்றுக்கிழமை | 26.10.2014**

திதி: திருதியை பி.இ.03.17 வரை
நட்சத்திரம்: விசாகம்
கா.6.20 வரை

சுபநேரம்:09.03-10.33 வரை
இராகுகாலம்:04.33-06.03 வரை

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.25
கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாவது வருடமாக நடத்தும் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 18 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதில் ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 8 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாவட்ட மட்ட துடுப்பாட்ட, உதைபந்து இறுதிப் போட்டிகள் இன்று மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.
கழகத் தலைவர் ஒ.அருட்சகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை அரச அதிபர் என்.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.
துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் சென் ஜீவன்ஸ், வித்தியா விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்காக சென்.ஜூட் விளையாட்டுக்கழகமும் உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி-433)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.25
விளையாட்டுத்துறை அமைச்சும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்தும் 40 ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவின் தடகளப் போட்டி இன்று சனிக்கிழமை அனுராதபுர விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இன்று ஆரம்பமாகும் தடகளப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.
இன்றைய போட்டிகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. அதேவேளை உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதமர் டி.எம் ஜயரத்ன கலந்து கொள்ளவுள்ளார். (ரி- 23)

# மத்திய கல்லூரி ஆதிக்கம்




ஸ்கந்தவரோதயவுடனான உதைபந்தாட்டப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய மத்திய கல்லூரி அனைத்து வயதுப் பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.
யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல் லூரி அணிக்கும் இடையிலான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கிலும், 16வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 7:0 என்ற கோல் கணக்கிலும், 18 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 5:1 என்ற கோல் கணக்கிலும், 20 வய துப்பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றன. (ரி- 23)

# மனோகராவை தோற்கடித்து அரையிறுதியில் மகாத்மா



யாழ்ப்பாணம்,ஒக்.25
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதற் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கியதால் ஆட்டம் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன் போது இரு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற கடுமையாகப் போராடினர். இதன் போது ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் மனோகரா அணி வீரர் பழம் தனக்கு கிடைத்த பந்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு தமது அணிக்கான கோலினைப் பெறுவதற்காக சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி கடுமையாகப் போராடியது. ஆனால் முதற்பாதி முடியும் வரை அவர்களால் தமது அணிக்கான கோலினை பெற முடியவில்லை. முதற் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் முதற்பாதியை விடவும் விறுவிறுப்பாக இருந்தது. இதன் போது மகாத்மா அணி வீரர்கள் தமது அணிக்கான கோலினை பெற மனோகரா அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்டனர். இதன்பயனாக ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் மகாத்மா விளையாட்டுக்கழக அணிவீரர் ராஜதீபன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்து கோல்களின் எண்ணிக்கையைச் சமப்படுத்தினர். ஆட்ட நேரம் முடியும் வரை இரு அணியினரும் மேலதிகமாக கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.(ரி- 23)

# இறுதியாட்டத்துக்கு முன்னேறின மல்லாவி மத்தி, இராமநாதன் மகளிர்





யாழ்ப்பாணம்,ஒக். 25
பரபரப்பான அரையிறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.
வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முதல் கால்பகுதி ஆட்டத்தில் இரு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு விளையாடி தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். முதல் கால் பகுதி ஆட்டத்தின் முடிவில் வேம்படி மகளிர் கல்லூரி அணி 4 புள்ளிகளையும் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 11 புள்ளிகளையும் தமது அணிகள் சார்பாக பெற்றனர். இதில் வேம்படி அணி சார்பில் துவாரகா 4 புள்ளிகளையும், இராமநாதன் அணி சார்பில் ஐஸ்வரியா 6, சுபோசனா 3, கேதுஷா 2புள்ளிகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். ஆட்டத்தின் 2ஆம் கால் பகுதி ஆட்டத்தில் வேம்படி சார்பாக புள்ளிகள் பெறப்படாத அதே வேளை, இராமநாதன் அணி சார்பில் சுபோசனா 8புள்ளிகளையும், ஐஸ்வரியா ஒரு புள்ளியையும், லதீனா 2புள்ளிகளையும் பெற்றனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 22:4 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. ஆட்டத்தின் 3ஆம் கால் பகுதி ஆட்டத்தில் வேம்படி அணி தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்து விளையாடி 11 புள்ளிகளைப் பெற்றது. பதிலுக்கு இராமநாதன் அணியும் 10 புள்ளிகளைக் குவித்தது. வேம்படி சார்பில் துவாரகா 6, பவதாரணி 2, பிரியந்தி 3 புள்ளிகளைப் பெற்றனர். இராமநாதன் சார்பில் சுபோசனா 5 புள்ளிகளைப் பெற்றார். 4ஆவது கால்பகுதியாட்டத்தின் முடிவில் இராமநாதன் அணி 5, வேம்படி அணி 10 புள்ளிகளை பெற்றன. ஆட்டத்தின் முடிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 37:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.
ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. முதல் கால் பகுதி ஆட்டத்தில் இரு அணியினரும் தமது அசத்தலான ஆட்டத்தின் மூலம் மாறி மாறி தமது அணிக்கான புள்ளிகளை பெற்ற வண்ணம் இருந்தனர்.இதில் ஏஞ்சல் அணி 8 புள்ளிகளையும், மல்லாவி அணி 9 புள்ளிகளையும் பெற்றன. ஏஞ்சல் அணி சார்பில் சாஜிராம் 4, சஞ்சேய் 4 புள்ளிகளையும், மல்லாவி அணி சார்பில் றெஜிதன் 7, லதீசன் 2 புள்ளிகளையும் பெற்றனர். இரண்டாம் கால் பகுதி ஆட்டத்தின் முடிவில் மல்லாவி அணி 10 புள்ளிகளையும், மானிப்பாய் ஏஞ்சல் அணி 8 புள்ளிகளையும்பெற்றது. இதில் மானிப்பாய் அணி சார்பில் மக்சன்4, சஞ்சேயன் 2, சாஜிராம் ஒரு புள்ளிகளையும், மல்லாவி அணி சார்பில் லோஜீதன் 8, லதீசன் 2 புள்ளிகளையும் பெற்றனர். இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது மல்லாவி மத்திய கல்லூரி அணி 19:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில்இருந்தது. 3ஆம்கால் பகுதி ஆட்டத்துக்கு இரு அணிகளதும் பயிற்றுநர்களின் ஆலோசனைக்கு அமைய தமது ஆட்டத்தில் மாற்றங்களை மேற்கொண்டு களமிறங்கின. 3ஆம் கால்பகுதி ஆட்ட முடிவில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 11புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி 8 புள்ளிகளையும் பெற்றன. இதில் ஏஞ்சல் அணி சார்பில் சிம்ரென் 4, ம்க்சன் 2, சாஜிராம் 2 புள்ளிகளையும், மல்லாவி அணி சார்பில் லோஜீதன் 7, லதீசன் 4 புள்ளிகளையும் தமது அணி சார்பாக பெற்றனர். 4ஆவது கால்பகுதி ஆட்டத்தில் ஏஞ்சல் அணிக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவற்றைத் தவறவிட்டனர். ஏஞ்சல் அணி சார்பில் சாஜிராம் 4, சஞ்சேயன் 2, மக்சன் 2 என 8 புள்ளிகளும், மல்லாவி அணி சார்பில் லோதீசன் 2, லதீசன் 2 என 4 புள்ளிகளையும் பெற்றனர். ஆட்ட நேர முடிவில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 34:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ரி- 23)



# ஐ.எஸ்.எல்லில் தொடர்கிறது கொல்கொத்தாவின் வெற்றி

கோவா அணிக்கு எதிரான போட்டியில், இந்தியாவின் கவின் லோபோ இரண்டு கோல்கள் அடித்துக் கைகொடுக்க, கொல்கொத்தா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரில் மூன்றாவது வெற்றியைப் பதிவுசெய்தது.

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து தொடரில் நேற்று முன் தினம் கொல்கொத்தா அணியும், கோவா அணியும் மோதிக் கொண்டன. தொடக்கம் முதலே இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடினர். ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் கொல்கொத்தாவின் பிக்ரு, கோவாவின் கிரிகோரியின் தலையில் லேசாக முட்டினார். இதனால் இருவரையும் போட்டி நடுவர் எச்சரித்தார். பின், 12ஆவது நிமிடத்தில் கோவாவின் ஆன்ட்ரி சாண்டோசை தள்ளியதால், கொல்கொத்தா அணித்தலைவர் போர்ஜாவுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. இந்த நிலையில் 21ஆவது நிமிடத்தில் கோவா வீரர் ஆன்ட்ரி சாண்டோஸ் முதல் கோல் அடித்தார். இதற்கு கொல்கொத்தா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் கோவா அணி 1:0 என்ற நிலையில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட கொல்கொத்தா அணிக்கு, 71ஆவது நிமிடத்தில் பிக்ரு கொடுத்த பந்தை, கவின் லோபோ கோலாக மாற்றினார். ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் கிடைத்த பிரீ கிக் வாய்ப்பை கோவா வீரர் சாண்டோஸ் வீணடித்தார். தொடர்ந்து அசத்திய கொல்கொத்தா அணிக்கு 84ஆவது நிமிடத்தில் கவின் லோபோ இரண்டாவது கோல் அடித்தார். மேலதிகமாக ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமநிலை செய்ய போராய கோவா அணியினரின் அனைத்து முயற்சிகளும் வீணாகின. ஆட்டநேர முடிவில் கொல்கொத்தா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை விளையாடிய 4 லீக் போட்டிகளில் மூன்று வெற்றி, ஒரு சமநிலை உட்பட கொல்கொத்தா அணி 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (ரி)

# வில்லங்கமான விதிமுறை

பிரேஸில் வீரர்கள் நாட்டு உதைபந்தாட்ட வீரர்களுக்கு வில்லங்கமான புதிய விதிமுறைகளை விதித்திருக்கிறார் அந்த அணியின் பயிற்சியாளர் துங்கா.

பொதுவாக வீரர்கள் என்றால் அவர்களுக்கு சுதந்திரமான சூழல் இருக்கும். அவர்கள் தங்களுக்கு பிடித்தமான தோடு, பாதணி, பச்சை குத்திய உருவங்கள் என அனைத்தையும் அணிந்து கொள்வார்கள்.



ஆனால் தற்போது பிரேஸில் வீரர்களுக்கு இதையெல்லாம் பயன்படுத்தக் கூடாது என்று பயிற்சியாளர் புதிய வரையறை ஒன்றை வகுத்துள்ளார். அதன்படி பாதணி, தோடு, தொப்பி, கையடக்கத் தொலைபேசி, மடிக்கணினி எனஎதையும்பயன்படுத்தக் கூடாது என அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் பிரேஸில் அணி துருக்கி மற்றும் ஆஸ்திரேலிய அணியுடன் நட்பு உதைபந்து போட்டியில் மோதவுள்ளது. இதற்கான அணியை வெளியிட்ட துங்கா, வீரர்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற வரையறையும் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில்: எல்லா நிறுவனத்திலும் சில விதிகள் இருக்கும். குடும்பத்தில் கூட அப்படி தான். இது போன்ற சில விதிகள் நல்லுறவை வளர்க்க உதவும். வீரர்களின் செயல்கள் அவர்களை மட்டுமே சாரும். நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அதன்படி தான் எல்லாம் நடக்கும் என்று கூறியுள்ளார். (ரி)



# மெஸ்சி, நெய்மர் கோல் பார்சிலோனா வெற்றி

மெஸ்சி, நெய்மர் தலா ஒவ்வொரு கோல் அடிக்க அஜாக்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் உதைபந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. பார்சிலோனாவில் நடந்த இதன் லீக் போட்டியில் அஜாக்ஸ், பார்சிலோனா அணிகள் மோதின.

போட்டியின் 7ஆவது நிமிடத்தில் பார்சிலோனா இளம் வீரர் நெய்மர் ஒரு கோல் அடித்தார். நட்சத்திர வீரர் மெஸ்சி 24ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா முதல் பாதியில் 2:0 என்ற நிலையில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் 88ஆவது நிமிடத்தில் அஜாக்ஸ் அணி சார்பில் எல்.காஜி ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா அணியின் சாண்ட்ரோ மேலதிகமாக வழங்கப்பட்ட ஆட்ட நேரத்தின் 4ஆவது நிமிடத்தில் ஸ்டாப்பேஜ் கோல் அடித்து பதிலடி தந்தார். ஆனால், முடிவில், பார்சிலோனா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி)



# அரையிறுதி சந்தேகம்

டபிள்யு.டி.ஏ. ரென்னிஸ் தொடரில் இரண்டாவது தோல்வியைப் பதிவு செய்த ரஷ்யாவின் மரியா ஷரபோவாவின் அரையிறுதி வாய்ப்பு சந்தேகத்தில் உள்ளது.

சிங்கப்பூரில் பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ. பைனல்ஸ் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் உலகின் முன்னிலை வீராங்கனைகள் இரண்டு பிரிவுகளாக விளையாடுகின்றனர்.

நேற்று முன்தினம் நடந்த முதலாவது லீக் போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியிடம் வீழ்ந்த ரஷ்யாவின் மரியா ஷரபோவா, இரண்டாவது லீக் போட்டியில், செக் குடியரசின் பெட்ரோ கிவிட்டோவாவை சந்தித்தார். இதில் ஷரபோவா 3:6, 2:6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தார். அடுத்தடுத்து இரண்டு தோல்விகளை பெற்ற ஷரபோவாவின் அரையிறுதி வாய்ப்பு தற்போது சந்தேகமாக உள்ளது. ஷரபோவா அரையிறுதிக்கு முன்னேற, போலந்தின் ரத்வன்ஸ்காவுக்கு எதிரான கடைசிப் போட்டியில் நேர் செற் கணக்கில் வெற்றி பெற வேண்டும். அதேவேளையில், டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, செக்குடியரசின் கிவிட்டோவாவை நேர் செற் கணக்கில் வீழ்த்த வேண்டும். தவிர இவர், டபிள்யு.டி.ஏ. தரவரிசையில் முதல் இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பும் குறைந்தது.

மற்றொரு போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 7:5, 6:3 என்ற நேர் செற் கணக்கில் போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்காவை வீழ்த்தினார். தொடர்ந்து இரண்டு வெற்றிகளை பதிவு செய்த வோஸ்னியாக்கி அரையிறுதி வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டார். (ரி)

# சாய்னா, காஷ்யப் காலிறுதியில்

பிரெஞ்ச் ஓபன் பூப்பந்தாட்ட தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் செய்னா நேவல், காஷ்யப் ஆகியோர் முன்னேறினர்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில், பிரெஞ்ச் ஓபன் பாட்மின்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல், ஸ்கொட்லாந்தின் கிர்ஸ்டி கில்மோரை சந்தித்தார். அபாரமாக ஆடிய சாய்னா 21:19, 21:16 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் இந்திய வீராங்கனை சிந்து 21:12, 18:21, 16:21 என பிரான்ஸின் புரானாபிராஸ்டிக்கிடம் போராடி தோல்வியடைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் காஷ்யப் 21:19, 21:18 என்ற நேர் செற் கணக்கில் சீனாவின் டியனை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

சாய்னாவும், காஷ்யப்பும் சமீபத்தில் நடைபெற்ற டென்மார்க் ஓபன் தொடரில் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)



# ஜோன்சன் ஒன்றும் அக்ரம் இல்லை



வேகப்பந்து வீச்சில் கலக்கி வரும் ஆஸ்திரேலியாவின் மிச்செல் ஜோன்சன் ஒன்றும் அக்ரம் இல்லை என்று கூறியுள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரும், தற்போதைய பந்து வீச்சுப் பயிற்சியாளருமான வோகார் யுனிஸ்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நான் வசிம் அக்ரமுடன் எவரையும் ஒப்பிட மாட்டேன். இதில் உறுதியாக இருக்கிறேன். அவர் ஒரு தலைசிறந் பந்து வீச்சாளர். பாகிஸ்தானுக்காக பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். மிச்செல் ஜோன்சனை வசிம் அக்ரமுடன் ஒப்பிட வேண்டுமென்றால் ஜோன்சன் இன்னும் நீண்ட தூரம் வந்தாக வேண்டும். ஆனாலும் ஜோன்சன் ஒரு அச்சுறுத்தல் மிக்க சிறந்த பந்து வீச்சாளர் தான் என்று தெரிவித்துள்ளார். கடந்த சில ஆட்டங்களில் அவரது பந்து வீச்சில் மாற்றம் தெரிகிறது. அவர் தாக்குதல் முறையில் பந்து வீசுகிறார். இதனால் வெற்றி அடைகிறார் என்று அவர் தெரிவித்தார்.

# சகோதரிகளுக்கு கடிதம்



வில்லியம்ஸ் சகோதரிகளுக்கு தீங்கு இழைக்கும் நோக்கத் துடன் தான் கருத்து கூறவில் லை என்று சகோதரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார் ரஷ்ய ரென்னிஸ்நிர்வாகிடர்பிஸ்சொர்வ்.

டர்பிஸ்சொர்வ் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போது, அமெரிக்காவை சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் சகோதரிகளை பார்த்ததால் பயமாக இருக்கிறது. அவர்கள் வில்லியம்ஸ் சகோதரர்கள் என்று தெரிவித்திருந்தார். அப்போது இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து டர்பிஸ் சொர்வ்வுக்கு அபராதம் விதித்து, ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் செரீனா வில்லியம்சிடம் மன்னிப்பு கேட்டு டர்பிஸ்சொர்வ் கடிதம் எழுதியுள்ளார். அதில் தீங்கு இழைக்கும் நோக்கத்துடன் தான் கருத்து கூறவில்லை என்று கூறியுள்ளார்.

இந்த தகவலை சிங்கப்பூரில் நடக்கும் உலக சம்பியன்ஷிப் போட்டியில் விளையாடி வரும் செரீனா வில்லியம்ஸ் தெரிவித்தார். என்னிடமும், சகோதரி வீனஸ் வில்லியம்சிடமும்டர்பிஸ் சொர்வ் மன்னிப்பு கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார். அவரிடம் நாங்கள் பேசவில்லை என்று செரீனா மேலும் தெரிவித்தார். (ரி)

## பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

இந்திய - மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபைகளுக்கு இடையே நிலவும் பிரச்சினையை விரைவில்தீர்க்கவேண்டும்என்று மேற் கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் இயன்பிஷப் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை இந்தியத் தொடரை ரத்துச் செய்ததன் காரணமாக இந்திய மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்திய பயணம் பாதியில் ரத்து செய்தது மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அந்த அணி யின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் இயன் பிஷப் [illegible] தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் இந்திய சுற்றுப்பயணத்தில் பாதியில் நாடு திரும்பியதை தொடர்ந்து கிரிக்கெட் சபை விழித்து கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும். இல்லையென்றால் இது அணிக்குஅச்சுறுத்தலை ஏற்படுத்திவிடும். மற்ற அணிகள் நமது அணியுடன்விளையாட யோசிக்கும் நிலை ஏற்படும். இப்பிரச்சினை விரைவில்தீர்க்கப்படும்என்று நம்புகிறேன் என்று அவர்கூறினார். (ரி)


World concern
witness the transformation

**EMPLOYMENT OPPORTUNITIES**

We are an international non-governmental organization registered in Sri Lanka implementing relief and development programmes. The below position is for immediate hire.

**DAIRY PROJECTCOORDINATOR- MULLAITHIVU**

**The candidate should direct and implement the Dairy Project with minimum supervision. Able to lead a team and required to be a strong team player.**

Minimum Skills & Educational Qualifications Required:

- University Degree or Diploma in relevant field.
- Minimum 03years' experience in relief/development program management.
- Experience managing field budgets.
- Working knowledge on Sri Lankan laws, policies and procedures relevant to INGOs and the development sector.
- Good command of English, written and spoken.
- Computer Literacy.

**Previous working experience with I/NGO would be desirable.**

Remuneration will be in par with the industry norms.

Interested candidates are requested to email self prepared applications enclosed with a detailed CV and scanned photograph to wcsrilankavacancies@gmail.comon or before04th November 2014.

Only the short listed candidates will be called for the interview.

(53481)(10.6.3)



**விற்பனைக்கு**

டாசோன்(Daxon)நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

T.P : 0773613955


## கண்ணீர் அஞ்சலி



20.10.2014 ஆம் திகதி சிவபதமடைந்த எமது கமநல சேவை நிலைய குழு உறுப்பினர்

### சிதம்பரநாதர் திருச்சிற்றம்பலம்

(தொழிநுட்ப உத்தியோகத்தர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர், உத்தியோகத்தர்கள்,
கமநல சேவைகள் சமூகம்,
தொல்புரம், கீரிமலை.

(53452) 10)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் உதயகுமார்
(குமார்-கனடா)

நகுலேஸ்வரம் கீரிமலையைப் பிறப்பிடமாகவும் ,கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் உதயகுமார் (குமார்) கடந்த(20.10.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் சாமினியின் அன்புக் கணவரும் சுபேதா, யாதவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ரவிகாந்தன்(ஈசன்), தேவராணி(தேவா) மற்றும் சிவகுமார்(தயா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெயராணியின் மைத்துனரும் தயாபரன், தர்சினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.10.2014) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். கீரிமலையில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நகுலேஸ்வரம்,
கீரிமலை.

தகவல்:
தாய்-சு.பத்மாவதி
T.P : 0774963934

(51535)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு லோகநாதன்



கொக்குவில் புதுக்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ', ஏழாலை மேற்கு ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு லோகநாதன் 23.10.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு-பாக்கியம் தம்பதிகளின் அன்பு புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் குமரேஸ், யசிகரன், ஜெயந்தி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மந்தாகினி, சிவானு, தீபகாந்தன், வேல்நாயகி, ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான திருமதி மகேஸ்வரி-இரத்தினம், சரஸ்வதி, இலங்கநாதன் மற்றும் இராமநாதன் காலஞ்சென்ற சொக்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆர்த்திகா, ஆரண்யன், சாதனா, அனோஜ், அர்த்தனா, ஆதவன், ஆருத்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 23.10.2014 அன்று ஏழாலை உசத்திஒடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53483)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### தம்பு சோமசுந்தரம்
(பிரபலவிவசாயி, 3ஆம்வாய்க்கால்பரந்தன்)

மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு [illegible] சுந்தரம் நேற்று(24.[illegible].10.2014) வெள்ளிக்கிழமை [illegible] அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் சுவர்ணா, கிருஷ்யந்தன் (லண்டன்) விவேகானந்தன்(கனடா), சிவநேசன்(பொறுப்பதிகாரி நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்), சுகலியா (கனடா), சுகுணா(லண்டன்), சுகிர்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவிக்குமார்(பொறியியலாளர்), கெங்காதேவி(லண்டன்) வளர்மதி(கனடா), வனிதா, யசோதரன்(கனடா), கலாநிதி அருள்(லண்டன்), இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(சி17225)(08)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூரணம் ரகுநாதன்



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கட்டுடை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபூரணம் ரகுநாதன் நேற்று (24.10.2014) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர்-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், ரகுநாதனின் அன்பு மனைவியும், குசேந்தினி (சுவிஸ்), நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதாகரன் (சுவிஸ்), பாஸ்கரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவித்திரா (சுவிஸ்), சுமித்திரா (சுவிஸ்), சாமினி (லண்டன்), சனோசன் (லண்டன்), சஜித்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், பரமேஸ்வரன், பத்மாவதி, விக்னேஸ்வரன் (கனடா), சந்திரவதனா, உதயகுமாரி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் ரதிஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் நாகேஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீஸ்கந்தராஜா, திலகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை வைரவர் கோயிலடி,
கட்டுடை, மானிப்பாய்.

(53486)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 915 2692

# முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒருபோதும் சரணாகதி அரசியல் தேவையில்லை

## அதன் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

சம்மாந்துறை.ஒக்.25

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினை களுக்கு தீர்வுகள் பெற்றுக்கொள்ள வேண்டிய தருணத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு சரணாகதி அரசியல் தேவையில்லை. எமது தீர்மானங்கள் மசூராவின் அடிப்படையில் மேற்கொள்ளப் படும். இதில் தலைமைத்துவம் மிகத் தெளிவாக இருக்கின்றது. அவசரப்பட வேண்டிய தேவை எமக்கில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள வறிய குடும்பங் களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் சாணக்கியமான இறுதித் தீர்மானங்கள் நிச்சயம் சமூகத்தின் நிலைப்பாடாகவே அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு பாதுகாப்புக் கவசம் முஸ்லிம்களுடைய தனித்துவமான அரசியலாகும் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் ஆளும்கட் சிக்குள் எதிர்க்கட்சியாக இயங்குகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் என்பது மிகப்பெரும் தலையிடி என ஜனாதிபதி நினைத்தால் அதில் எந்தத் தவறும் இல்லை. என்னுடைய இயக்கத்தின் தார்மீகப் பொறுப்பு அதுவாகும். மறைந்த தலைவர் அஷ்ரப், பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கி விட்டு அவர் எதிர்க்கட்சியில் இருந்தார். ஆனால், அவர் பிரேமதாஸவின் நண்பராக விருந்தார். இப்போதைய தலைவர் தற்போதைய ஜனாதிபதியின் எதிரியாகவிருக்கின்றார். இப்படியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸை பற்றி அவதூறுகளையும் தேவையற்ற கட்டுக்கதைகளையும் அவிழ்த்து விடுகின்றார்கள். இதில் எவ்வித உண்மையும் இல்லை. கட்சியின் தலைமைத்துவம் தடுமாற்றத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் நேர்மையாக நடந்துகொள்ளும். கட்சி மட்டத்திலும் சிவில் மட்டத்திலும் கலந்துரை யாடல்களை நடத்தி தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும். முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் எவருடனும் எந்தத் தரப்புடனும் பேச்சுக்குப் போகவில்லை. 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, மறைந்த தலைவர் அஷ்ரப், பிரேமதாஸவை எவ்வாறு மறைமுகமாக ஆதரித்தாரோ அதுபோன்றுதான் எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலையும் தீர்மானிக்க வேண்டும்.

எனவே, கட்சியையும் சமூகத்தையும் பாதுகாப்பது என்பது தான் முஸ்லிம் காங்கிரஸின் தீர்க்கமான முடிவாகும். அதனை எப்படிச் செய்வது என்பது குறித்து பரந்துபட்ட மசூரா அடிப்படையில் மிக நிதானமாக, நேர்மையாக சுயநலத்தை மறந்து நாங்கள் தீர்மானிக்க வேண்டும். அதற்கு எந்த தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (த-10)

# 12 கோரிக்கைகளை முன்வைத்து கிழக்கு தமிழ் ஆசிரியர்கள் மனு

## கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பு

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்து கல்வியமைச்சின் செயலாளருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை மற்றும் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தலைமையில், சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர்கள் கடந்த 19 ஆம் திகதியன்று ஒன்று கூடி ஆராய்ந்தனர். இதன்போது, கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை மற்றும் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது. இதனடிப்படையில் 12 விடயங்கள் இனங்காணப்பட்டன.

எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தின் மூலம் 10 ஆயிரம் சம்பள உயர்வை வழங்கி, ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், பெற்ற சேவைக்கான சம்பள நிலுவையை உடன் வழங்குதல், ஆசிரியர்களின் பதவியுயர்வை உறுதிப்படுத்தும் சுற்றறிக்கைகளை உடனுக்குடன் அனுப்புதல், சனி, ஞாயிறு மற்றும் போயா விடுமுறைக் காலங்களில், நடத்தப்படும் செயலமர்வுகளைத் தடுப்பதற்கான சுற்றறிக்கைகளை கல்வியமைச்சு வெளியிடுதல், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டைக்கவனத்திற்கொண்டு மூன்றாம் தவணைக் காலத்தில் நடத்தப்படுகின்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளைத் நிறுத்தி வைப்பதற்கான சுற்றறிக்கைகளை வெளியிடல், ஆசிரியர்கள் குறித்த தகவல்களைத் திரட்டும் போது, மாகாணம் முழுவதும் ஒரே படிவம் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல், வலய மட்டத்திலோ, அல்லது மாகாண மட்டத்திலோ, விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, ஆசிரிய தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடுதல் கட்டாயமாக்கப்படல், கிழக்கு மாகாணத்தின் வலய இடமாற்றங்களின் போது, தேசிய இடமாற்றக் கொள்கையைப் பின்பற்றல் கட்டாயமாக்கப்படல், அரசியல் வாதிகளின் தலையீடற்ற இடமாற்றத்தை உறுதிப்படுத்தல், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் நலநோம்பு விடயங் களுக்கு முக்கியத்துவமளித்தல், கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்படாத, எந்தவொரு வெளிவாரி மதிப்பீட்டினையும் மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுத்தல், ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரமாணக் குறிப்பை உருவாக்கி, ஆசிரிய ஆலோசகர் சேவைக்கான அங்கீகாரம் வழங்குதல் ஆகிய விடயங்கள் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. (த-10)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கடுக்காமுனைக் கிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங் களுக்கு உலர் உணவுப் பொருள்கள் கடந்த வியாழக் கிழமை வழங்கப்பட்டன.

பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கடுக்காமுனை, கற்சேனை, அம்பிளாந்துறை மேற்கு, கச்சக்கொடிசுவாமிமலை, குளுவினமடு, தாந்தாமலை, மாவடிமுன்மாரி, பனிச்சையடி முன்மாரி ஆகிய எட்டுக் கிராம அலுவலகர் பிரிவுகளில் 438 குடும்பங்கள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் மூலம் அரிசி, பருப்பு, மரக்கறி எண்ணெய் உள்ளிட்ட உலர் உணவுகள் முதற்கட்டமாக 75 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு அடுத்து வரும் தினங்களில் இந்த உலர் உணவுகள் வழங்கப்படும் என பட்டிப்பளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சசிகுமார் தெரிவித்தார்.

இதற்கான நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சசிகுமார், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டிப்பளை பிரதேச இணைப்பாளர் ஆர். பார்த்தீபன், கடுக்காமுனை கிராம பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அருள்ராஜ், கிராம அலுவலர் எஸ்.ஜீவிதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (த-10)


## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. மாத வேதனமாக ரூபா 22500/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு. வயது 18 தொடக்கம் 25 வரை. ஆண்கள் மட்டும்.

தொடர்பு: கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்,
நம்.11 - A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 3857 (53475) (12.3.6)

## வீடு வாடகைக்குண்டு

நல்லூரில் Temple Road இல் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நல்ல பாதுகாப்பான சூழலில் புதிய Luxury house வாடகைக்கு உண்டு.
மாத வாடகை 25000/=
தொடர்பு: 077 086 5700 (53474) (7.6.3)


## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் உறுப்பினரும், மன்ற சேமிப்புத் திட்ட உறுப்பினருமான
திருமதி ர. சுவர்ணா (யுனிற்றி ஏஜென்சி, சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு தந்தை

### தம்பு சோமசுந்தரம்

அவர்கள் 24.10.2014 அன்று காலமானார்.
அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை (மணியம்)

(பிரபல வர்த்தகர் - மணியம் ஸ்ரோர்ஸ் - காலி, காலி சிவன் கோயில் முன்னாள் பொருளாளர்)



வேலணையைப் பிறப்பிடமாகவும், காலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை 23.10.2014 வியாழக்கிழமை காலை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - விஷாலாட்சி தம்பதியரின் மருமகனும், லோகலீலாவதி யின் பாசமிகு கணவரும், நாக ரூபன் (ஜேர்மனி), நாவேணி (ஆசிரியர்), தர்ஷினி, நாகசொரூபன் (மணியம் ஸ்ரோர்ஸ்), நிஷாந்தினி, வினோதினி (சுவிஸ்), சிவானி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கச்சேரி, காலி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெகதா (ஜேர்மனி), கண்ணதாசன் (கொழும்பு), பிரதீபன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனும், லோகிஷா, ஷஸ்வின், ஷஸ்வினா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சண்முகராசா, மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, காலஞ்சென்ற சௌந்தரநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரலிங்கம், மனோரஞ்சிதம், இரஞ்விதமலர் (திட்டமிடற் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்), விஜயராசா, காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் காலி, கராப்பிட்டிய மனம்பெரி மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் காலி தடலை மயானத்தில் 3.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


41/1A, தக்கியா வீதி,
தலாப்பிட்டிய, காலி.
077 269 2552 (பி/17154)(7.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

கந்தையா கண்ணதாஸ் என்பவருடைய தே.அ.அட்டை (892682461V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன மானிப்பாய்க்கும், பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு ஒப்படைக்கவும்.

கந்தன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 077 273 5714 (53476) (7.6.3)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் கந்தசாமி (பழனி) (மிருதங்க கலைஞர்)

புலோலி தென்மேற்கு, காந்தியூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி 23.10.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக்கணவரும், ஜெயக்குமார், கமலஹாசன், தனுஜா, தனஜன், காலஞ்சென்ற தயாளரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காந்தியூர்,
புலோலி தென்மேற்கு,
புலோலி. 077 502 0978 (51974) (6.4.3) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கிருஷ்ணபிள்ளை

(உரிமையாளர் -அம்பிகா ஸ்ரோர்ஸ்-நெல்லியடி)



மருதங்கண்டு, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், முடக்காடு, கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ண பிள்ளை 23.10.2014 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், உதயமலரின் பாசமிகு கண [illegible]ரின் அன்பு வரும், கதிரகா[illegible] மருமகனும், சிவமைந்தன் (லண்டன்), ஐங்கரன் (பாபு-சுவிஸ்), காயத்திரி, கலைமகள்(கலா-கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மார்க்கண்டு, வேதநாயகி (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரரும், சந்திரிக்கா (லண்டன் -ஜீனு), ரகுபரன்(முகாமையாளர் A.I.A, கொடிகாமம்), வாகீசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரவியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), நடராசா(கனடா), காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும், நவீன்(லண்டன்), பிரஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.10.2014 திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடக்காடு, கரவெட்டி வடக்கு,
ரகுபரன்-0773910371
ஐங்கரன் (சுவிஸ்)-0041798596685 (51973)(6.4.3)
தகவல்: குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (ஆண்கள்) 3 வருட அனுபவம்
2. அலுவலக உதவியாளர் (பெண்கள்)

G.C.E A/L 03 பாடச் சித்தியுடன், ஆங்கிலமும், 02 வருட அனுபவமும்
தங்கள் சுயவிவரக்கோவையை 30.10.2014 ஆம் திகதிக்கு முன்னர்
கீழ்க்காணப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்,

R.S. Gnappiragasam Construction
No. 32, Rakka Road, Jaffna. T.P. 077 354 9625
E-Mail-rsgnappiragasam@gmail.com
(53460)(45.8.3)

## சிறுவர் தின நிகழ்வு

கே.என்.ஏச் மற்றும் அதன் பங்கு அமைப்புக்கள் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர்தின நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினராக சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் திருமதி ஜமுனா பெரேராவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


(ரி)

## காணி விற்பனைக்கு

கைதடி ஆயுர்வேத மருத்துவ மனைக்குச் சமீபமாக, A9 வீதியிலிருந்து 2 ஆவது ஒழுங்கையில் 4 பரப்புக் காணி (1 றூட்) விற்பனைக்கு உண்டு. ஆர்வமுடையோர் மாலை 5.00 மணிக்கும் 8.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**0777 884913**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலைமேற்கு
சுன்னாகத்தை வசிப்பிடமாவும் லண்டனில் வசித்தவருமான

## நாகேந்திரன் சிவானந்தன்


**19.10.2014 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயரம் அடைவதோடு அவரின் இழப்பினால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**செல்வராஜ் அவனியூ ஜனனோதயம்**
**அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு,**
**திருநெல்வேலி. 077 519 2869**

**செ.சிவலிங்கம் (சகலன்)**
**சுதாகரன், ஜனனி, செல்வகரன் (லண்டன்)**
**பெறாமக்கள்,**
**தயாளினி, பிரதீசன், மருமக்கள்.**

## மரண அறிவித்தல்



## குமாரவேலு இராசையா
### (இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்-கல்வித்திணைக்களம்)

காரைநகர் சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு இராசையா (இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்-கல்வித்திணைக்களம்) 23.10.2014 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், யசோதா, பரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமியின் சகோதரரும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 10 மணியளவில் கனத்தை பொது மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**திலகவதி (மனைவி)**
**011 2500202**

**58 3/3, 37th Lane,**
**Colombo-06**

## நகராட்சிமன்றம், சாவகச்சேரி
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 05.11.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு தாங்கள் கேள்வி கோர விரும்பினால் அதற்கான கட்டணத்தை செலுத்தி கேள்விப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT) |
|---|---|---|---|
| 01 | மண்டுவில் செம்பன் தோட்ட வீதி திருத்தம் | 15,000.00 | 1140.00 (நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தகாரர்கள் இக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்) |
| 02 | நுணாவில் கிழக்கு சிவன்கோயில் வீதி திருத்தம் | 4,000.00 | -do- |
| 03 | மகிளங்கேணி வீதி திருத்தம் | 7,000.00 | -do- |
| 04 | சாவகச்சேரி சந்தை பொது மல கூடம் அமைத்தல் (கட்டம்1) | 10,500.00 | -do- |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 03.11.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்,

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி **தவிசாளர், நகராட்சி மன்றம் சாவகச்சேரி** என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்பட வேண்டும். இணைப்பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 05.11.2014 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி**
**24.10.2014**

(C/17223)(10.6)

**இ.தேவசகாயம்பிள்ளை**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## 2015 ஆம் ஆண்டுக்கான
## கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2015ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 14.11.2014ஆம் திகதி வெள்ளிக்கிழமை **முற்பகல்** 10.00 மணி வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு **அன்று முற்பகல்** 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் **அன்று முற்பகல்** 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் **13.11.2014** ஆம் திகதி **வியாழக்கிழமை நண்பகல்** 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் **2/3** பகுதியை 25.11.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.

**2015 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை 01 | 1,542,200.00 | 15,422.00 | 1,000:00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை 02 | 1,542,200.00 | 15,422.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை 01 | 661,100.00 | 6,611.00 | 1,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை 02 | 661,100.00 | 6,611.00 | 1,000.00 |
| 05 | கோழி இறைச்சிக் கடை 01 | 936,100.00 | 9,361.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை 02 | 936,100.00 | 9,361.00 | 1,000.00 |

குறிப்பு: இந்த நகராட்சிமன்றத்தின் கோழி இறைச்சிக் கடைகளிலிருந்து **1Km** சுற்றுவட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
24.10.2014

(C 17222)(10.6)

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம் சாவகச்சேரி.

# வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் முன்னேற்றம் எதுவுமில்லை

## பிரிட்டன் கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் கடந்த காலாண்டில் மனித உரிமைகள் விடயங்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடந்த காலாண்டுக்கான மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சகத்தினால் நேற்று வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அளுத்கமவில் முஸ்லிம் மக்கள் மீது கடந்த ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இன்னமும் முழுமையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. இந்தத் தாக்குதலின் பின்னரும் மட்டக்களப்பு, தம்புள்ளை, திருகோணமலையில் ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த மத வெறுப்பு தொடர்ந்தும் நிலவுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கருத்துச் சுதந்திரம் குறித்து பிரிட்டன் தனது கவலையை வெளியிட்டுள்ளது. கருத்துச் சுதந்திரம் இலங்கையில் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டே உள்ளது. ஊடகங்களுக்கான பயிற்சி வழங்குதல், ஊடகவியலாளர் சந்திப்புக்கள் நடத்துதல் என்பவற்றுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளது. மேலும், அரசியல் ஆய்வாளர் ஒருவரும் திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அளுத்கம சம்பவம் தொடர்பில், அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு தகவல்களை வழங்கிய ஊடகவியலாளர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

ஜூலை மாதம் 26 ஆம் திகதி பத்திரிகை நிறுவனம் இனந்தெரியாத சிலரால் முற்றுகையிடப்பட்டது. காரைநகர் சிறுமிகள் கடற்படையினரால் வன்புணர்வு செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் ஜூலை மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் செய்தி சேகரிப்புக்குச் சென்ற ஊடகவியலாளர் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டதுடன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். அதே மாதம் 11 ஆம் திகதி தனியாரின் காணிகளை அளப்பதற்கு முற்பட்ட கடற்படையினரின் செயலை ஆவணப்படுத்த முயன்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி சிவில் சமூகத்தினருக்கும், காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு பௌத்த மதகுருமாரைக் கொண்ட குழுவொன்றினால் இடைநிறுத்தப்பட்டது. இதில் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

போர் தொடர்பான கவிதையை எழுதிய கத்தோலிக்க மதகுரு ஒருவர் புலனாய்வாளர்களால் விசாரிக்கப்பட்டார். மேலும் இந்தக் கவிதையே விநியோகம் செய்தமை தொடர்பாக வடபகுதியைச் சேர்ந்த மூன்று பாடசாலை அதிபர்கள் பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர்சங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களின் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று பிரிட்டன் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (க-5)

## தொடர்ச்சிகள்

### கிளிநொச்சி

யியல் பிரிவினர் மிதிவெடிகளை பாதுகாப்பாக எடுத்துச் சென்றுள்ளனர். 3 மிதி வெடிகள் இவ்வாறு மீட்கப்பட்டன.

மக்கள் செறிவாக நடமாடும் பகுதியிலேயே மிதிவெடிகள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-18)

### இலங்கைக்கு

மதிப்புக் கொடுத்துச் செயற்படுமாறு குறிப்பிட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட பயண எச்சரிக்கையில், பாதுகாப்புத் தொடர்பில் உயர் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தெரிவித்துள்ளது. (த-5)

### 3 நாள்களில்

மதி கோரியிருந்தது. அதற்கு அனுமதி கொடுக்க முடியாது. ஆனால் மீறிப் போடப்பட்டிருந்தவற்றைத் நாம் தடுக்கவில்லை. தற்போது சபை இல்லை. எனவே தற்காலிக வியாபாரம் செய்ய வருபவர்களைச் சட்டப்படி தடை செய்ய முடியாது. அது தொடர்பில் மாகாண சபை ஏதாவது அறிவுரை விடுத்திருந்தால் அதனைச் செய்திருக்க முடியும். யாழ். வணிகர் கழகம் தம்மில் குறை காணமுடியாது.

நல்லூர் திருவிழாவில்கூட ஒரு கோடி ரூபா வருமானம் கிடைத்தது. ஆனால் செலவு போக 20 லட்சம் ரூபாவே எஞ்சியது-என்றார் அவர். (த-4)

### தீங்கு

செயற்பாடுகளுக்கு தடங்கலை ஏற்படுத்தாது என்பதுடன், தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

அவ்வாறு வீடுகளுக்குச் சென்றபோது அவர்களின் விவரங்கள் அல்லது தொலைபேசி இலக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமையானது சிநேகபூர்வமாக இடம்பெற்ற செயல் என்பதையும் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எண்ணத்துடன் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது ஊடகங்களினாலேயே என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம் - என்றுள்ளது. (த)

### தீபாவளி

தீபாவளி முடிந்தபோதும் இன்று வரை சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால் பல ஆசிரியர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. எனவே உரிய சம்பளங்களை உரிய காலப்பகுதியில் வழங்குமாறு சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் குறித்த வலயங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பளப்பணம் தாமதமாகவே கிடைத்ததாகவும் கடந்த திங்கட்கிழமை காலை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை சம்பளம் கிடைக்க வில்லை என்று ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-4)

### ஊழியர்

ளுக்கும், புதுக்குடியிருப்பு மற்றும் வவுனியா ஆகிய பிரதேச செயலகங்களில் இருந்து கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என மொத்தமாக 120 உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கையின் மூலம் குறிப்பிட்ட அதிகாரிகளின் பிரதேசங்கள் மற்றும் கிராமங்களில் இருக்கும் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் அல்லாத ஊழியர்களை இனங்கண்டு அவர்களுக்கான கணக்கு களை ஆரம்பிக்க முடியும். அடிப்படைச் சம்பளத்தை விடக் குறைந்தளவு சம்பளத்தைப் பெறும் ஊழியர்களுக்கான சம்பள உயர்வையும் பெற்றுக் கொடுக்கமுடியும்-என்றார். (த-ரி)

### ரணில்

ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் மூலப் பிரதியை காணவில்லை என்று 'திவயின' சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், அப்போதைய இலங்கை அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த உடன்படிக்கை, இலங்கை அரசின் சமாதான செயலகத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது குறித்த ஆவணத்தைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணத்தில் காணப்படும் விடயங்கள் அம்பலமாகி விடும் என்ற காரணத்தினால் ஆவணம் தொலைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்ட பொழுது, அந்த ஒப்பந்தம் எந்தவொரு இராணுவ தலைவருக்கும் காண்பிக்கப்படவில்லை என்பதையும் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்த ஒப்பந்தம் 2007 ஆம் ஆண்டு ஒரு தலைப்பட்சமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### காணாமற்போன

பெண் ஒருவர் நேற்றுக் காலை உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த கலியுகமூர்த்தி சுகந்தினி (வயது-34) என்பவரே, வடமராட்சி-கொடிகாமம் பிரதான வீதியில் பற்றைக் காட்டுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயாரான குறித்த பெண் கடந்த 20 ஆம் திகதி பருத்தித்துறை ஓராம் கட்டை பகுதியைச் சேர்ந்த தனது நண்பியொருவரை பார்க்க அவரின் வீட்டுக்கு சென்றிருந்தார். குறித்த நண்பியும் தனது பிள்ளை உடல்நலமில்லாது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்ததை அடுத்தே அவர் அங்கு சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்கு செல்லும்போது, அடைவு வைக்கும் நோக்குடன் தனது 27 பவுண் நகைகளையும் அவர் கொண்டு சென்றிருந்தார். அவரது வீட்டினர் சுகந்தினியுடன் இறுதியாகத் தொடர்பு கொண்டபோது, தான் நண்பியின் வீட்டில் நிற்பதாகவும், அங்கு சாப்பிட்டு விட்டு வருவேன் என்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் சுகந்தினியை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. மாலை 5 மணியின் பின்னரும் அவர் வீடு திரும்பாததை அடுத்துத் தேடத் தொடங்கிய உறவினர்கள், இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்திருந்தனர். கடந்த நான்கு நாள்களாக அவரை உறவினர்களும், பொலிஸாரும் தேடி வந்தபோதும் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், நேற்றுக் காலை வயலுக்குச் சென்றவர்கள் வடமராட்சி-கொடிகாமம் பிரதான வீதியில் பற்றைக் காட்டுக்குள் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து, அங்கு சென்று பார்த்தபோது சிதைவடைந்த நிலையில் சடலம் ஒன்றைக் கண்டுள்ளனர். அதையடுத்து அந்தப் பகுதி கிராம சேவையாளருக்குத் தகவல் வழங்கப்பட்டு, இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலமாக மீட்கப்பட்டவர் சுகந்தினியே என்று அவரது கணவர் அடையாளம் காட்டினார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் கஜநிதிபாலன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். அதன்பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தர விட்டார். (ந-109)

### உள்ளூராட்சி

தமது உப விதிகளினூடாக பெற்றுக்கொள்ளும் கட்டணத்தை ஜனாதிபதி நீக்கியமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"தற்போது வரவு - செலவுத் திட்ட யோசனையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் இறுதி வடிவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம். உள்ளூராட்சி மன்றங்களின் உப விதிகளை மேலாண்மை செய்வதற்கு நாடாளுமன்றத்தினூடாக சட்டம் இயற்ற முடியும்.

ஆனால் ஜனாதிபதி தற்போது குறிப்பிட்டுள்ள மேற்படி கட்டண விலக்களிப்பு, கொழும்பு அரசு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களிலும் கை வைப்பதையே காட்டுகின்றது. இதேவேளை, கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளின் கடைகள் திடீரென எந்த வித முன்னறிவித்தலும் இன்றி அகற்றப்படுகின்றன. இவ்வாறு அதனை அகற்றிக் கொண்டு யாருக்கு கட்டண விலக்கை ஜனாதிபதி வழங்கப் போகின்றார்?"- என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (ந-5)

### தமிழ்த்

இடம்பெயர்ந்த எல்லா மக்களும் அவர்களது சொந்த நிலத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் இலங்கை பிரச்சினையில் வெளித் தலையீடுகளும் அழுத்தங்களும் இருக்கவே செய்கின்றன.

எனவே நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைய வேண்டும். எம்முடன் இணைந்து பணியாற்றவருமாறு மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்."- என்றார். (ந-5)

### அடிக்கடி

காகக் கொண்டுள்ளது" - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷால் நேற்று சமர்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த வரவு - செலவுத் திட்டத்தை பார்க்கும் போது சிரிப்பாக இருக்கின்றது. மக்களுக்கு நிவாரணங்கள் அள்ளிக் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒவ்வொரு தடவையும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் நன்றாக இருக்கும்.

ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற பொறுப்புடன் இந்த வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலை நோக்காகக் கொண்டு சுயநலத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. வாக்குகளை கொள்ளையடிப்பதற்கு இது சமர்பிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் வரவு - செலவுத் திட்டம் என்ற அர்த்ததில் இது இல்லை" என்று அவர் தெரிவித்தார். (ந-5)

### 2015

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரச, தனியார் மற்றும் விவசாயத்துறையினர் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்று இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. இதனால் வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் நலத் திட்டங்கள் பெருமளவில் முன்வைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது.

இவ்வாறான நிலையில், நாட்டின் நிதியமைச்சராக வுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நேற்றுச் சமர்ப்பித்தார். இது அவரது அரசு சமர்ப்பிக்கும் பத்தாவது வரவு - செலவுத் திட்டமாகும். பி.ப. 1.30 மணிக்கு வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த ஜனாதிபதி மாலை 4.35 மணிக்கே தனது உரையை நிறைவு செய்தார்.

அவர் தனது உரையில் பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டினார். நாடு தற்போது வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. உள்நாட்டு உற்பத்திகளுக்கு நாம் முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றோம். எமது பொருளாதாரம் 8 சதவீதமாக உயர்ந்துள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை, 2016 ஆம் ஆண்டு 3.85 சதவீதமாக குறைவடையும். அது 2017 ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாக இன்னமும் வீழ்ச்சியடையும்.

கடந்த கால ஆட்சிகளில் அரச சேவைகளுக்கு ஊழியர்கள் இணைத்துக் கொள்ளாமை காரணமாக பெரும் பின்னடைவு இருந்தது. கடந்த பத்து வருட ஆட்சிக் காலத்தில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் அரச ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் ஒரு லட்சம் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், வடக்கில் பாடசாலைக்குச் சென்ற சிறுவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களாகவே வீடு திரும்பினர். இன்று நிலைமை மாறியுள்ளது. நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் பலருக்கு புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்துள்ளோம். அந்த அமைப்பிலிருந்த 3 ஆயிரம் பேர் தற்போது இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எங்களது இராணுவத்தினர் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே செயற்பட்டார்கள். தனியொரு இனத்தை இலக்கு வைத்து செயற்படவில்லை. விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்ட ஒரு லட்சம் வீடுகளை வடக்கில் நாம் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். சர்வதேச உறவை வளர்ப்பதில் எமது அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. தேசிய பாதுகாப்பு நலன் கருதி வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் சகல மக்களுக்கும் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் வழங்கப்படும். 2018 ஆம் ஆண்டு வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்து முடிக்கவுள்ளோம். மலேரியா இல்லாத நாடாக இலங்கையை மாற்றியமைத்துள்ளோம். ஆடைத்துறையில் 15 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளோம் - என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, அரசால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிபுணர்கள், "நிதிநிலை அறிக்கை ஒன்றே தாக்கல் செய்யப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தனர். (ந-5)



மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காத்தான் குடி -01 ஸாவியா வீதியில் ஜி.எஸ். லேனில் வசிக்கும் எம்.எம்.அலியார் என்பவரின் வீட்டில் உள்ள வாழை மரமொன்றில் மரத்தின் நடுப் பகுதியிலிருந்து வாழைக்குலை வெளிவந்துள்ளது. (வ)

# நிலக்கரியில் முறைகேடா? விசாரணை செய்யுங்கள்

## தன்மீதான குற்றச்சாட்டுக்கு அமைச்சர் சம்பிக்க பதில்

கொழும்பு, ஒக்.25

நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவு தொடர்பில் ஏதேனும் முறைகேடு நிகழ்ந்திருப்பின் விசாரணை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

தாம் அமைச்சராக இருந்த போது, மின்சார சபையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 150 கோடி ரூபா நிதி மோசடி குறித்து பதிலளிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

சம்பிக்க ரணவக்க மின் சக்தி அமைச்சராக இருந்தபோது நிலக்கரி கொள்வனவு தொடர்பில் சுமார் 150 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை மோசடி செய்யப்பட்டதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில், அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கேள்வி எழுப்பினார்.

"நிலக்கரி கொள்வனவில் 150 கோடியே 70 இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நூறு ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும், இதை நிவர்த்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கை என்ன?" என்பது குறித்தும் ஹர்ச டி சில்வா வினவினார்.

அதற்கு பதிலளித்த தற் போதைய மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நீதிபதியின் அறிவுரைக்கமைய, இது குறித்த விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க, சுமார் இரண்டு வருடங்களின் பின்னரே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடு தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. எவ்வாறாயினும், சட்ட மா அதிபரின் ஆலோசனைகளின் பிரகாரமே நிலக்கரி கொள்வனவு விவகாரம் இடம்பெற்றது.

இதுவொரு சட்டவிரோதமான கொடுக்கல் வாங்கல் எனத் தெரியவந்த பின்னர், "அந்த நிலக்கரியை மின் உற்பத்தி நிலையத்திற்குள் கொண்டுவருவதையோ அல்லது அங்கு களஞ்சியப்படுத்தி வைப்பதையோ தாம் நிராகரித்திருந்த தாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ற)

## குற்றங்களும் கைதுகளும்

முள்ளியவளை

### தீபாவளி நாளில் கள் விற்ற நபர்

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்டபட்ட புதரிகுடாப் பகுதியில் தீபாவளி தினத்தன்று கள் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீபாவளி நாளில் நாட்டின் சகல மதுபான சாலைகளும் மூடப்பட வேண்டும் என்ற அரசின் அறிவிப்பை மீறியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதே வேளையில் இதே தினத்தில் மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டிச்சென்ற நபரும் கைது செய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [வ—433]

### இறைச்சிக்காக மாடு வெட்டிய இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம்

தீபாவளித் தினத்தன்று அனுமதியின்றி துன்னாலை வேம்படிப் பகுதியில் அதேஇடத்தைச் சேர்ந்த இருவர் மாட்டை இறைச்சிக்காக வெட்டிக் கொண்டிருந்தபோது நெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் 40 கிலோ மாட்டிறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த இரு சந்தேகநபர்களையும் பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் மாவட்ட நீதிபதி வே. கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தினார்கள். சந்தேக நபர்கள் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்ட நீதிபதி வழக்கை வேறொரு திகதிக்கு ஒத்தி வைத்தார். [வ—ரி]

### போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிகள் கைது

தென்மராட்சி

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய 5 சாரதிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதுதொடர்பில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

டிப்பர் வாகனத்தின் முன்பக்கங்களில் வெளிச்சமின்றிச் சென்றதை அவதானித்த பொலிஸார் வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தும் நிறுத்தாமல் சென்றபோது துரத்திப் பிடிக்கப்பட்டார். சாரதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவானால் மூன்று குற்றங்களுக்காக 9 ஆயிரம் ரூபாவும்— வாகன பயிற்சிப் பாடசாலை வாகனத்தைப் பயன்படுத்தி சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் பயிற்சி வழங்கிய சாரதிக்கும்— காப்புறுதிப் பத்திரம், வாகனவரி போன்ற ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவருக்கும் வீதியின் நடுவே உள்ள தொடர் குறியீட்டில் மற்றொரு வாகனத்தை முந்த முயன்ற மோட்டார் சைக்கிளோட்டிக்கும் தலா 3 ஆயிரம் ரூபாவும்—உடைந்த இலக்கத் தகட்டை கொண்டிருந்த டிராக்டர் சாரதியொருவர் காப்புறுதிப் பத்திரமின்றி அதனைச் செலுத்தியமைக்கு 6 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. [வ—9]

### மதுபோதையுடனும் ஆவணங்கள் இன்றியும் வாகனம் செலுத்திய நபர்

மதுபோதையுடனும் ஆவணங்கள் எதுவுமின்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரொருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவரைச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற் படுத்திபோது 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை வீதியில் விபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தி ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் தனித் தனியாக விசார ணைக்கு எடுக்கப்பட்டன. விசார ணையின் போது எதிரிகள் குற் றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. [வ—9]

### கல்வியை நிறுத்தி சிறுமிகளை வேலைக்கு அனுப்பிய பெற்றோர்

வலி வடக்கு, ஒக். 25

பாடசாலை செல்லும் இரண்டு சிறுமிகளை பாடசாலை செல்லாவிடாது தடுத்து தனியார் வீட்டில் வேலைக்கு அனுப்பிய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இருவர் யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்டுள்ளார்கள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த குறித்த இரு சிறுமிகள் கடந்த மாதம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தம்மை பெற்றோர்கள் ஏனையவர்களுடன் இணைந்து பாடசாலை செல்லவிடாது வீட்டுக்கு வேலைக்குச் செல்லும்படி துன்புறுத்துவதாகக் கூறி முறையிட்டுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் இரு சிறுமிகளும் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், ஏற்கனவே பெற்றோரும் ஏனையவர்களும் இணைந்து கொழும்பிலுள்ள குறித்த வீட்டுக்கு வேலைக்கு அனுப்பப்பட்ட சகோதரிகள் என்றும் அங்கிருந்து இவர்கள் தப்பிவந்தனர் எனத் தெரிவித்து யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பாக வழக்கை தாக்கல் செய்தார்கள்.

குறித்த சம்பவத்துடன் பெற்றோர்களுடன் இணைந்து கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் ஒரு சமுர்த்தி அலுவலரும் மற்றும் பெண் ஒருவரும் கூட குறிப்பிட்ட சிறுமிகளை வேலைக்கு அமர்த்தும் விடயத்தில் ஈடுபட்ட சம்பவம் பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கையிடப்பட்டது. இந்தநிலையில் திங்கட் கிழமை நீதிமன்றில் குறிப்பிட்ட இருவரும் சமுகமளித்த நிலையில் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்லும்படி சிறுவர் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது. [86]

கிளிநொச்சி

### கிராம அலுவலர் வீட்டின் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் கிராம அலுவலரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கேஎன்/50 முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் நந்தகுமார் வீட்டின் மீது கடந்த புதன்கிழமை இரவு 10.40 மணியளவில் இனந்தெரியாதோரால் கல்வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது இரு குழந்தைகள் மற்றும் அவரது மனைவி ஆகியோர் நூலிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

அதனையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக் குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர். அந்தப் பிரதேசத்தில் இடம்பெற்று வந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட நிலையில் இவ்வாறான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச்சம்பவம் குறித்தும் சந்தேக நபர்கள் தொடர்பாகவும் விசாரணை களை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். [வ—55]

# பொன்சேகாவுக்குக் குடியுரிமை வேண்டி கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஒக்.25

ஜனநாயகக் கட்சியின் தலைவரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பறிக்கப்பட்ட குடியுரிமையை மீண்டும் வழங்குமாறு கோரி 10 லட்சம் பேரிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கம்பஹா மாவட்டம் கிரிந்திவளை நகரில் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

நாடு முழுவதிலும் பல பிரதேசங்களில் பொது மக்களிடம் கையெழுத்துக்களை பெற்று அதனை சர்வதேசத்திற்கு அனுப்பி வைக்க ஜனநாயகக் கட்சி திட்டமிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு மீண்டும் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதற்காக கிரிந்திவல நகருக்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வருகை தந்து மகஜரில் கையெழுத்திட்டனர் என்று ஜனநாயகக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரஜித ஹப்புவாராச்சி தெரிவித்துள்ளார். (ற)

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆரம்பிக்க ஒப்பந்தம்

பீஜிங், ஒக்.25

சீனாவும் வேறு 21 ஆசிய நாடுகளும் ஒன்றாக இணைந்து ஆசியாவுக்கான புதிய வங்கி ஒன்றை உருவாக்க சம்மதித்துள்ளன.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி என்ற இந்த வங்கியை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் பீஜிங்கின் மக்கள் மாமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வில்கைச்சாத்தாகியது.

சைந்தியா, கத்தார் ஆகிய நாடுகளும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

போக்குவரத்து, எரிசக்தி மற்றும் தொலைத் தொடர்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியைஆசியாவின் வறிய நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பது இந்த வங்கியின் நோக்கம்.

இந்த வங்கித் திட்டத்தில் சேர வேண்டாம் என்று அமெரிக்கா அறிவுறுத் தியிருந்தது என்பதால், அதன் நெருங்கிய தோழமை நாடுகளான தென் கொரியாவும் ஆஸ்திரேலியாவும் இந்த ஒப்பந்தத்தில் இணைந்து கொள்ளவில்லை (வ)

# ஹுசைன் உட்பட மூவருக்கு சென்னை நீதிமன்றில் வழக்கு

சென்னை, ஒக்.25

இந்தியாவில் பயங்கரவாத செயல்களில் ஈடுபடத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று இலங்கை பிரஜைகளுக்கு எதிராக சென்னை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்புக்குஉதவி வழங்கி, இந்தியாவில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சாகீர் ஹுசைன், சிவபாலன் மற்றும் மொஹமட் சலீம் ஆகியோர் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள இந்திய தேசிய விசாரணை அமைப்பின் அதிகாரிகள், இது சம்பந்தமாக மேலும் 6 பேரைக் கைது செய்ய உள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் இலங்கையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பணியாற்றிய இருவரும் அடங்குகின்றனர் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் மேலும் குறிப்பிட்டுள் ளனர். (ற)

# யாழ்.ரயிலால் 10 நாள்களில் 60 லட்சம் ரூபா வருமானம்

## நாளொன்றுக்கு 5 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம்.ஒக்.25
யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு கடந்த 10 நாள்களில் வருமானம் 60 லட்சம் ரூபாவையும் தாண்டியுள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு 5லட்சத்துக்கும் மேற்பட்ட வருமானம் கிடைக்கப்பெறுவதாக யாழ்.ரயில் நிலையம் தகவல் தெரிவித்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகளவான பயணிகள் தென்னிலங்கைக்கு ரயில் சேவையைப் பயன்படுத்தி வரும் நிலையில் ரயில் நிலையத்துக்கான வருமானமும் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஆரம்பத்தில் முதல் நாள் வருமானம் 3 லட்சத்துக்கும் அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள் ளது. அதனைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட இரு நாள்களில் ஒரே நாளில் அது 8 லட்சம் ரூபாயும் தாண்டியுள்ளது.

நாளாந்தம் 4 பிரதான சேவைகள் இடம்பெறுவதுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட ரயில் சேவையும் மேலதிகமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

4 பிரதான ரயில் சேவைகளில் கடுகதி ரயில் சேவையில் இருக்கைகளுக்கு ஏற்ப பயணிகள் அதிக நாட்டத்துடன் பயணித்து வருகின்றனர். இதனைவிட இரவு தபால் ரயில் சேவையிலும் அதிகளவு பயணிகள் பயணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-14)

## குதறியது விசர்நாய்

தெல்லிப்பழை சந்தியில் நின்ற விசர் நாய் கடித்துக் குதறியதால் 70 வயது முதியவர் படு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாகவே மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிக்னலடி தெல்லிப்பழை என்னும் முகவரியில் வசிக்கும் செல்லத்துரை துஸ்யந்தன் என்பவரே இவ்வாறு பாதிக்கப் பட்டவராவார்.

இதேவேளை- மேலும் ஒருவரை அதே நாய் கடித்ததால் அவர் நாயைப் பிடித்துச் சாக்கில் கட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு வந்துள்ளார். இவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றதுடன் நாயைப் பரிசோதனைக்கு உரியவர்களிடம் கையளிக்குமாறு வைத்தியரால் ஆலோசனை கூறி அனுப்பப்பட்டார். (த-36)



கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நல்லூர்க் கந்தன் நேற்று மாலை வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நேற்று ஆரம்பமான கந்த சஷ்டி உற்சவத்தின் போது நல்லூரில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (த-17)

# வடக்கு மாகாண பண்பாட்டு விழாவில் விருது பெறுவோர் விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற பண்பாட்டுப்பெருவிழா இந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தின் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நவம்பர் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் சிறந்த நூல்பரிசுத் தேர்வில் துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நூல்களினதும் எழுத்தாளர்களினதும் விவரங்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் விருதுக்கு துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்டோர் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான கௌரவிப்பு வைபவம் வடமாகாண பண்பாட்டுப்பெருவிழாவின் நிறைவு நாளாகிய நவம்பர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

சிறந்த நூல்பரிசுத் தேர்வு 2013 உயர்கல்வி - மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல்-கலாமணி, ஆய்வும் விமர்சனமும் - அறிவின் சமுகவியல் சிந்தனைகள் - பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கம், பல்துறை- புதிதாகச் சிந்திப்போம் சமுதாயத்துக்கான கல்வி- மாரிமுத்து சின்னத்தம்பி, கவிதை - மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும் - திருமதி செல்வமனோகரி சிவானந்தன், சிறுகதை - பிறந்துவிட்ட புதுயுகத்தில் - சந்திரலட்சுமி தனபாலசிங்கம், சிறுகதை - உள்மனம் சித்திரம் - முத்துக்குமாரு இராதகிருஷ்ணன், நாவல் - சங்கு முள்ளு - எஸ்.உதயன், சிறுவர் இலக்கியம் - அன்புப் பிள்ளைகளே (சிறுவர் பாடல்) - பரராஜசிங்கம் ரமேஸ், நாடகம் - அமைதிப் பூங்கா - ஜோசப் ஜோண்சன் ராஜ்குமார், மொழிபெயர்ப்பு - இலங்கையின் தமிழ் சிறுகதைகள் - கவிஞர் சோ.பத்மநாதன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோர்விவரம்- மாரிமுத்து சீவரத்தினம் -நாடகம், வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை - நாடகம், முடியப்பு அருட்பிரகாசம் - நாட்டுக்கூத்து, அருளானந்தம் செபமாலை - நாட்டுக் கூத்து, செபமாலை பிலிப்பு - நாட்டுக்கூத்து, இன்னாசிமுத்து ஜேசுதாசன் - நாட்டுக் கூத்து, சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் - இசை நாடகம், ஆறுமுகம் முருகுப்பிள்ளை - நாட்டுக் கூத்து, அப்பச்சி வல்லிபுரம் - இசைநாடகம், முருகேசு செல்லத்துரை - சிந்துநடைக்கூத்து, திருமதி கருணாதேவி அற்பதராஜா - இசைத்துறை, சின்னத்துரை மகேந்திரன் - வாத்திய இசை, திருமதி லீலாம்பிகை செல்வராஜா - நடனம், அப்புத்துரை வென்செஸ்லோன் அரியநாயகம் - இலக்கியம், கனகரத்தினம் சட்டநாதன் - இலக்கியம், ஆறுமுகம் கந்தவனம் கருணாகரன் - இசைத்துறை, திருமதி தமயந்தி சிவசுந்தரலிங்கம் - இலக்கியம், திருமதி கோகிலாதேவி மகேந்திரன் - இலக்கியம், கந்தானகே சந்திரசேகர - கைவினை, செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் - பல்துறை, முருகேசு சிவப்பிரகாசம் - கிராமியக்கலை, சின்னத்தம்பி அமரசிங்கம் - சிற்பம். (த)

# ஜனவரி 8, 17, 26 இல் ஏதாவது ஒரு நாளில் ஜனாதிபதித் தேர்தல்

## மஹிந்தவுக்கு ஜோதிடர்கள் அறிவுரையாம்

கொழும்பு, ஒக். 25
ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் 8 அல்லது 17, 26 ஆம் திகதிகளில் ஏதாவது ஒரு தினத்தில் நடைபெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜோதிடர்கள் இந்த மூன்று நாள்களில் ஏதாவது ஒரு நாளில் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கேட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எட்டாம் இலக்கத்தில் வரும் திகதிகள் அவருக்கு அதிர்ஷ்டகரமானவை என அவர்கள் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதியும் இதற்கு இணங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. கடந்த காலங்களில் அவர் 8 ஆம் எண்ணை அடிப்படையாக வைத்தே தனது பதவிக்காலம் குறித்த முக்கிய முடிவுகளை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி மாதத்துக்கு முன்னதாக தேர்தலை நடத்துமாறும் ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வவுனியாவில் இரத்ததானம் இன்று

வவுனியா, ஒக்.25
வவுனியாவில் இன்று இரத்ததான நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது. காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை இந்த இரத்ததான நிகழ்வு வவுனியா சூடுவெந்தபுலவு அல் இக்பால் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வை அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் வவுனியா மாவட்டக் கிளை ஏற்பாடு செய்துள்ளது. (த-421)

# நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்புக்கு மஹிந்த உத்தேசம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றின் பதவிக் காலம் நீடிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர், நாடாளுமன்றின் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியும் என்று பொதுப் பொழுதுபோக்கு மற்றும் தாவரவியல் பூங்கா அமைச்சர் ஜயரட்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுப்பொழுதுபோக்கு மற்றும் தாவரவியல் பூங்கா பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகம் செய்த போதிலும் அதன் பயன்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே அனுபவிக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக சிலர் பதவி வகித்த போதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி இலகு வெற்றியீட்டுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் நாடாளுமன்றின் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

# ஆளும்கட்சி எம்.பிக்கள் ஐ.தே.கவுடன்

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்கள் பலருடன் இரகசியப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதை ஒத்துக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, எதிர்க்கட்சியுடன் அவர்கள் இணைவது குறித்தே இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்வதற்கு ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் விருப்பம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர்களே கவலையடைந்துள்ளனர். ஊவா மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியே ஒரே வழி என அவர்கள் கருதுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-, அரசு இதனை முற்று முழுதாக மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் எவரும் பயணம் செய்யமாட்டார்கள் என அது குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெற முடியாது என அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த-சி)

Architecural CAD Centre
Pallaly Road Kondavil East 0718617972
Personal & Group Classes [2D-Drawing & 3D-Modeling]
Diploma in Engineering Drawing & Jaffna-Vavuniya-Colombo
Civil Mech.
Auto CAD 2014
Lecturer by Mr.K.N.Mugunthan
University Of Perathenlya
University Of Moratuwa

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French.
850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்....
ஆரம்பம்:01.11.14 Sat 8.00am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி
021 320 2973
0779 789 456

அமெரிக்க லொத்தர் விசா- V2 Travels
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

சிங்கள வகுப்பு
எழுத, பேச, வாசிக்க அடிப்படையில் இருந்து. புதிய பிரிவு ஆரம்பம் 25.10.2014 ஒரு மணி.
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (f/17211) (463)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.